HEART CRY OF GOD (TAMIL)

தேவனின் இதயக் கதறல்!

D. ஜேசன்

தேவனின் இதயக் கதறல்!

ஜேசன்
மிஷனரி
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

தமிழாக்கம்
திருமதி. லினெட்டா சம்பத்குமார்

வெளியிடுவோர்

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
8, சர்ச் காலனி, வேலூர், 632 006, இந்தியா.
Tel : 00 91 416 – 2242943 / 2248943
<hq@bymonline.org>
www.bymonline.org

HeartCry of God (Tamil) - úRY É u CRVdLR\p
Copyright :2017 Blessing Youth Mission

First Edition : May 2017
No. of Copies : 8000

Available in English and Telugu also.

Acknowledgements :-

Type Setting : Mr. Solayappan

Page Setting & Design : Mrs. Esther Bercy

Cover Design : Mr. Alwin Aniz

Proof Reading : Mr. Francis Antony

Printers :
Bapuji Printers
5, Kurban Ali Street,
Woods Road, Mount Road,
Chennai - 600 002

அர்ப்பணிப்பு

ஆசீர்வாத இளைஞர்
இயக்கத்தின் மிஷனரிகளுக்கு
அர்ப்பணம்.

உள்ளடக்கம்

முகவுரை

முன்னுரை

1. இரண்டாம் தொடுதல் 11

2. யுத்தக் களம்! 15

3. இறைப்பணிக்காய் வாரீர்! 19

4. அர்த்தமுள்ள வாழ்க்கை 33

5. எருசலேமே! எருசலேமே! 43

6. ஒரு விதை அழைக்கிறது 49

7. குரல்கள்! 55

இடை நிகழ்வு

8. இந்தியாவை நேசிக்கிறீர்களா? 63

9. நீங்கள் என்ன செய்ய முடியும்? 71

10. நாம் ஒன்றாக இருக்க முடியாதா? 79

11. ஒரு கடிதம் 89

12. புலம்பல்கள் 95

13. தேவன் மறுக்கும்போது.. 103

14. வரப்போகும் நியாயத்தீர்ப்பு 109

15. வெற்றி முழக்கம் 119

முடிவுரை

முகவுரை

"என் இருதயத்துக்கு ஏற்றவன்" - தேவன் தாவீதைக் குறித்துச் சொன்னது இதுவே. தாவீது ஓர் அரசனாயிருந்தும், அவனது இதயம் எப்பொழுதும் தேவனை நாடியது, அவருக்காக ஏங்கியது, தாவீது தேவனை வாஞ்சித்தான்; எப்பொழுதும் தேவனோடிருக்க விரும்பினான். ஆயிரம் நாட்கள் பிற இடங்களில் இருப்பதைவிட தேவனுடைய ஆலயத்தில் ஒரே ஒரு நாள் தங்குவது மேலானதாக கருதினான் (சங் 84:10).

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் மக்கள் சுகம் பெறுவதற்காக அவரைப் பின்பற்றினர். சிலர் அவரிடம் குற்றம் கண்டுபிடிக்கவும், இன்னும் பலர் உணவிற்காகவும் அவரைப் பின்பற்றினர். ஆனால் அவருக்கென்றே தங்களை முழுமையாய் அர்ப்பணித்திருந்தவர்கள் வெகுசிலரே. அவர்கள் பிரதிபலன் ஒன்றையும் எதிர்பாராது அவரைப் பின்பற்றினர். இயேசு திரளான மக்களைக் கண்டபோது மனதுருகினாலும், பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். அவரோடுகூட இருக்கவேண்டும் என்பதுதான் அவர்களது அடிப்படை அழைப்பு (மாற் 3:14). அவரோடுகூட இருப்பது எத்தனை அற்புதமான அனுபவம்! இன்றைக்கும் தம்முடன் இருக்கக்கூடிய நபர்களை தேவன் தேடுகிறார்.

இயேசு எருசலேமுக்குள் நுழைந்தபோது, மக்கள் பாடல்களைப் பாடி அவரைப் புகழ்ந்தனர். ஆனால், பாடின கூட்டம் சீக்கிரத்தில் மறைந்துவிட்டது; அவரது ஆசீர்வாதங்களைப் பெற்ற மக்கள் காரிருள் வேளையில் அவருடன் நிற்கவில்லை; அவர் தெரிந்துகொண்ட அப்போஸ்தலரும் ஓடிவிட்டனர்; இறுதியாக, அவரது உள்வட்டச் சீடர்களும் தேவை மிகுந்த நேரத்தில் அவரைக் கைவிட்டனர். **இரட்சகர் தனித்து நின்றார்.** இப்பொழுதும் அவர் தனித்து நிற்கிறார். அவரது பாரத்தைப் பகிரவும், அவரோடுகூட நிற்கவும் தக்க நபர்களை அவர் தேடுகிறார்.

இயேசுவைப் பின்பற்றுவோர் என உரிமை பாராட்டும் பலர் பல்வேறு எதிர்பார்ப்புகளுடனிருக்கின்றனர். இன்று லட்சக்கணக்கானோர் அவரது ஆசீர்வாதங்களை அனுபவிக்க மட்டுமே நாடுகின்றனர். அவர்களது விருப்பம் சுகம்பெற வேண்டும், ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும், தங்கள் பிள்ளைகள் நிச்சயமாய் ஆசீர்வதிக்கப்பட்டு நல்ல நிலையில் அமர வேண்டும் என்பதுதான். இது தவறு அல்ல, ஆனால் நாம் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் தேவனை நேசிக்க வேண்டும். அவரது அரசுதான் நமக்கு முதன்மையாக இருக்கவேண்டும். அப்படி அவருடன் நெருங்கி நடக்க வாஞ்சிக்கும் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய கிரயம் உண்டு. உலகம் மற்றும் அதிலுள்ளவைகளை விட்டுப் பிரிய வேண்டும். நமக்கன்பான வர்களிடமிருந்தும் விடை பெற வேண்டும். நமது வாஞ்சைகளையும் விருப்பங்களையும் சிலுவைக்குக் கொண்டுவரும்போது, நாம் தேவனது இதயத் துடிப்பைக் கேட்க ஆரம்பிப்போம். அப்போஸ்தலன் யோவானைப் போல அவரது மார்பில் சாய்ந்திருந்தால், நீங்கள் நிச்சயமாக அவரது இதயக் கதறலைக் கேட்க ஆரம்பிப்பீர்கள்.

இப்புத்தகத்தில் எழுதப்பட்டவைகள் பாரம் நிறைந்த இருதயத்தின் நேரடி விளைவாகும். நீங்கள் எளிதில் உணர்ந்து கொள்பவராய் இருந்தால், தேவனது இதயக் கதறலைக் கேட்பீர்கள்.

ஜெபத்துடனும் கண்ணீருடனும் வாசியுங்கள்!

முன்னுரை

யூதாஸின் முத்தம்

"உடனே, அவன் (யூதாஸ்) இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ்செய்தான்" (மத் 26:49).

மூன்றரை ஆண்டுகள் இயேசுவோடிருந்தான்;

இயேசுவின் போதனைகளைக் கேட்டான்;

அவருடன் பயணஞ்செய்தான்,
அற்புதங்களனைத்தையும் நேரில் கண்டான்,

அவருடன் உண்டான், உறங்கினான்,

ஆனால், இயேசுவின் சத்துருக்களுடன்
சிநேகிதம் கொண்டான்.

கிறிஸ்துவைவிட முப்பது வெள்ளிக்காசே
அவனுக்கு பெரிதாயிருந்தது.

இயேசுவின் போதனைகள்
நடைமுறைக்கு சாத்தியமற்றவை என்று எண்ணினான்.

கிறிஸ்துவை மேசியாவாக அவன் ஏற்கவில்லை.

அவன் எஜமானனைத் துறந்தது மட்டுமல்ல,

அவரை விலையும் பேசினான்.

இயேசுவைக் கொலை செய்யத் துடித்த மனிதருடன்
கைக்குலுக்கினான். சதித்திட்டமும் உறுதியாயிற்று.

நெஞ்சமோ நெகிழவில்லை,
எஜமானன் தன் கால்களைக் கழுவியபோதும்.

அவனது இருதயம் கருங்கல்லைப்போல் கடினமாயிருந்தது.

இயேசுவை அடிமை ரூபமோ அவனை பாதிக்கவில்லை.

காட்டிக்கொடுப்பான் என்ற இயேசுவின் எச்சரிக்கை செவிடன்
காதில் ஊதிய சங்காயிற்று.

மகிமையின் ராஜாவை ஒரு முத்தத்தால்
காட்டிக்கொடுக்கத் தீர்மானித்தான்.

சாரோனின் ரோஜாவை ஒரு முத்தத்தால் காட்டிக்கொடுத்தான்!

அன்பிற்கு பாத்திரர்தார்தான் நம் இரட்சகர், ஆனால்
இந்த முத்தமோ ஆணிகளையும் முட்களையும்விட
அதிக வேதனையானது.

ரோமப் போர் வீரர்களைப் போல அவன் இயேசுவை முகத்தில்
அறைந்திருக்கலாம், இயேசுவின் முகத்தில் துப்பியிருக்கலாம்;
அது நலமாயிருந்திருக்கும்!

மனித குமாரனை முத்தத்தைக் கொண்டா காட்டிக் கொடுப்பது!

"கர்த்தாவே, நான் உம்மை நேசிக்கிறேன்,
நான் உம்மைச் நேசிக்கிறேன்" என்று பல்லாயிரம் தடவை
கூறுகிறோம்;

"கர்த்தாவே, நான் உம்மை சேவிக்கிறேன்,
நான் உம்மை சேவிக்கிறேன்" என்று மிக இனிமையாகப்
பாடுகிறோம்;

ஆனால் அவரைவிட்டுத் தூரமாயுள்ளோம்,
அவரது இதயத்தினின்று இன்னும் வெகுதொலைவில்.

கர்த்தரின் சித்தத்தைக் குறித்த உணர்வின்றி, அவரது கரத்தில்
நம் வாழ்வை அர்ப்பணியாமல், யூதாஸ்காரியோத்தின்
முத்தங்களால் நாமும் இயேசுவை முத்தமிடுகிறோம்
என்பதையறியாமல், நமது வாழ்வு, நமது குடும்பம், நமது
எதிர்காலம் என்று நம் சொந்த உலகில் நாம் மூழ்கியுள்ளோம்!

அவரது மகிமையின்மேல் பசிதாகம் எங்கே? அவரது அரசுக்கான
முதன்மையிடம் எங்கே? அவரது சித்தத்துக்கு முக்கியத்துவம்
எங்கே?

இயேசு அடிமையின் ரூபமெடுத்தார்,

நம் வாழ்வில் அவர் இன்னும் அடிமைதானா?

அத்தியாயம் 1

இரண்டாம் தொடுதல்

எழுப்புதலுக்கான கதறல்!

"என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்" (எசே 37:14).

எழுப்புதல் வீரர் லியோனார்டு ரேவன்ஹில் "நமக்கு இன்னொரு எழுப்புதல் தேவை" என்று சொன்னார். நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், நமது ஆவிக்குரிய வாழ்வு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் அவசரச் சிகிச்சைப் பிரிவில் (ICU) சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகளைப்போல் இருக்கிறோம். நாடித்துடிப்பின் வேகம் இறங்கிக்கொண்டேயிருக்கிறது. சீராகாவிடில், நோயாளி மரித்துப் போகலாம். நாம் பாவத்துக்கும் பிசாசுக்கும் எதிர்த்து நிற்பதில்லை. நாம் பாவத்துடன் வாழக் கற்றுக்கொண்டோம். நமது சபைகளிலும் கூடுகைகளிலும் பொல்லாப்பை அனுமதிக்கிறோம். "அனைவரும் அப்படித்தான் இருக்கிறார்கள்" "எல்லோரும் இதைத்தானே செய்கிறார்கள்", "எல்லா இடங்களிலும் இதுதானே நடக்கிறது" என்ற சத்துருவின் பொய்களை நாம் நம்ப துவங்கிவிட்டோம்.

கிறிஸ்தவர்களில் இன்னொரு குழுவினர் எழுப்புதல் ஏற்கனவே வந்துவிட்டது என்று நம்புகின்றனர். எழுப்புதலை வாஞ்சிக்குமுன் அதைக் குறித்தத் தெளிவான எண்ணம் நமக்குத் தேவை. வெறுமனே உணர்ச்சிவசப்படுதலும், உற்சாகமடைதலும் எழுப்புதல் அல்ல.

எழுப்புதலின் நோக்கத்தை வேதபுத்தகம் தெளிவாகக் கூறுகிறது:

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8).

நான் பரிசுத்த ஆவியின் எழுப்புதலை விசுவாசிக்கிறேன்.

ஆனால் இந்நாட்களில் தவறான கருத்துகள் பல உள்ளன. நாம் தூய ஆவியின் வல்லமையைப் பெற்றிருக்கிறோம். ஆனால் அது எதற்காக என்பதை அறியவில்லை. அது நம் வீட்டில் மின்சாரத்தைப் பெற்றபின்பும் அதைப் பயன்படுத்தும் முறையை அறியாததைப் போலிருக்கிறது. நீங்கள் தேவனின் அன்பை உங்கள் நண்பர்கள், உறவினர், அயலகத்தார் எவருடனாவது எப்பொழுதாவது பகிர்ந்ததுண்டா? இல்லையெனில், நீங்கள் தேவனின் கிருபையை விருதாவாகப் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் உண்மையான எழுப்புதலை அனுபவிக்கவில்லை.

எசேக்கியேல் 37 ஆம் அதிகாரத்துக்கு நமது கவனத்தைத் திருப்புவோம். தீர்க்கன் எசேக்கியேலுக்குத் தேவன் சொல்வதைக் கவனியுங்கள்:

"நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஓர் **இரைச்சல்** உண்டாயிற்று; இதோ, **அசைவுண்டாகி**, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது" (வச 4,7,8).

தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலைத் தேவன் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்குக்குக் கொண்டு சென்றார். எலும்புகள் மிகவும் உலர்ந்திருந்தன; அவை உயிரடையும் வாய்ப்புகள் மிகக்குறைவாயிருந்தது. **தீர்க்கன் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஓர் இரைச்சல் ஏற்பட்டது. இதுதான் எழுப்புதலின் ஆரம்பக்கட்டம்** என **நான் நம்புகிறேன்.** இது முடிவு அல்ல. எலும்புகள் ஒன்றுசேர்ந்தன. அங்கே ஆவியின் அசைவு இருந்தது. ஆனால் சுவாசம் இல்லை.

நாம் அடிக்கடி இந்த இரைச்சலை எழுப்புதல் எனத் தவறாகக் கருதுகிறோம். நாம் பாடல்களை உரத்த குரலில் பாடியவுடன் எழுப்புதல் வந்துவிட்டதாக எண்ணுகிறோம்; கைதட்டி நடனமாடியவுடன் எழுப்புதல் வந்துவிட்டதென நினைக்கிறோம்; "அல்லேலூயா" என்று சத்தமிட்டதும் எழுப்புதல் வந்ததாகக் கூறுகிறோம். நமது கூடுகைகளில் கலந்துகொள்ளும் மக்களின் எண்ணிக்கையைப் பார்த்து எழுப்புதல் வந்திருக்கிறது என்கிறோம். மேற்கூறிய அனைத்தும் தூய ஆவியானவரின் கிரியையே. ஆனால், நான் திரும்பவும் சொல்கிறேன். இது

எழுப்புதலின் ஆரம்பமே ஆகும். எலும்புகள் ஒன்றுசேர்ந்தன; நரம்புகளும், தசையும் அவற்றின்மேல் மூடின. ஆனால் அது வெறும் ஓர் உயிரற்ற சடலம்தான். நீங்கள் இரைச்சலில் திருப்தியடைந்தால், நீங்கள் இன்னும் மரித்தநிலையில் இருக்கிறீர்கள் என்பதை மறந்துபோக வேண்டாம். உங்களில் உயிர் இல்லை. எலும்புகளுக்கும், மரித்த சடலங்களுக்கும் வேறுபாடு இல்லை. இரண்டும் பயனற்றவையே. சொல்லப்போனால், எலும்புகளைவிட மரித்த சடலங்களைப் பார்ப்பதற்கு பயங்கரமாயிருந்திருக்கும்.

சென்ற நூற்றாண்டில் தேவன் உலகம் முழுவதிலும் தமது ஆவியை வல்லமையாக ஊற்றினார். ஆனால் நாம் இரைச்சலின் சத்தத்தை எழுப்புதல் அக்கினி எனத் தவறாகப் புரிந்துகொண்டோம். கடந்த நூற்றாண்டில் தூய ஆவியானவரின் வரங்கள் வெளிப்பட்டன. பல மிஷனரி இயக்கங்கள் தோன்றின.

தீர்க்கன் எசேக்கியேல் ஓர் உண்மையான எழுப்புதலை அனுபவித்தான். எலும்புகள் ஒன்று சேர்ந்ததைப் பார்த்ததும், இரைச்சலின் சத்தத்தைக் கேட்டதும், அவன் தன் அலுவலகத்துக்குச் சென்று கர்த்தர் நிறைவேற்றிய அற்புதக் கிரியையைக் குறித்து அறிக்கை எழுத ஆரம்பிக்கவில்லை. அது ஆரம்பம் மட்டுமே என்பது அவனுக்குத் தெரியும். **எழுப்புதல்களுக்கு விளம்பரங்கள் தேவையில்லை!** ஒரு தீர்க்கதரிசியின் அடிப்படை அழைப்பு தேவன் அவனுக்குச் சொல்வதைச் செய்வது மட்டுமே. ஆ! இன்றைக்கு விளைவுகளைக் குறித்துக் கவலைப்படாத, எண்ணிக்கையைப் பொருட்படுத்தாத, மக்களிடம் செல்வாக்கை எதிர்பார்க்காத எசேக்கியேல் போன்ற தீர்க்கர்கள் நமக்கு எவ்வளவாய்த் தேவை! **அவன் தேவனுக்கு அப்படியே கீழ்ப்படிந்தான்!**

தீர்க்கன் எசேக்கியேல் உயிரற்ற உடல்களின் நடுவில் நிற்கும்போது, அவனுக்குத் தேவனுடைய வார்த்தை திரும்பவும் உண்டாயிற்று.

உங்களது வாழ்வில் தேவனின் ஆரம்ப அசைவை அனுபவித்து, இப்போது உயிரற்ற சடலங்களின் நடுவே நிற்பதைப் போல உணருகிறீர்களா? உங்களது ஊழியம் திக்குத்தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறதா? உங்களது தற்போதைய ஆவிக்குரிய நிலைமையைக் குறித்த அதிருப்தி உங்களில் காணப்படுகிறதா? இன்னும் ஆழமான ஒன்றுக்காக ஏங்குகிறீர்களா?

உங்களுக்குத் தூய ஆவியானவரின் இரண்டாம் தொடுதல் தேவை! நான் என்னையும் சேர்த்துக்கொள்கிறேன்! நம்மனை வருக்கும் இன்னொரு எழுப்புதல் தேவை! நம்மெல்லாருக்கும் மற்றுமொரு பெந்தெகொஸ்தே அவசியம்!

“அப்பொழுது அவர் என்னைப் பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை; மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்” (வச 9,10).

இரண்டாந்தரம் எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தபோது, ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது. அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, ஒரு பெரிய சேனையாய் நின்றார்கள்.

ஒரு சேனையாக எழுந்து நிற்பதென்றால், கர்த்தரது யுத்தங்களில் போரிடுவது, இருளை ஊடுருவிச் செல்வது, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவது, நற்செய்தியை அறிவிப்பது, அவருக்காகப் பிரகாசிப்பது, சாட்சியாக வாழ்வது, முன்னேறிச்சென்று வெற்றியுடன் மரிப்பதாகும்! ஆம் இதுவே பெந்தெகொஸ்தேயின் நோக்கமாகும்.

பவுல் அப்போஸ்தலன், தீமோத்தேயுவை கிறிஸ்து இயேசுவுக்குள் போர்வீரன் என அழைத்தான்.

“நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி” (2 தீமோ 2:3).

ஒரு போர்ச்சேவகன் அடிப்படையாக யுத்தம் செய்ய அழைக்கப்பட்டவன். அவனுக்கு ஏற்படக்கூடிய காயங்களைக் குறித்து அவன் கவலைப்படான். நாம் போர்வீரர்களாயிருக்க அழைக்கப்பட்டவர்கள். தேவ பிள்ளைகளாகிய நாம் அவருக்காகப் போர்வீரர்களாக முதிர்ச்சியடையவேண்டும்.

கொலோ 2:6,7 – “ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக.”

கிறிஸ்துவுக்கென்று ஒரு சேனையாய் எழும்புவதே
எழுப்புதலின் நோக்கமாகும்.!

அத்தியாயம் ௨

யுத்தக் களம்!

தலைமைத்துவத்துக்கான கதறல்

“முந்தி யுத்தம் பண்ணப்போகிற மனுஷன் யார்?”

நியா 10:18

தேவனுடைய யுத்தத்தை துவக்கும் மனிதன் யார்?

தேவனால் அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்ட நீ
மௌனமாக இருப்பதெப்படி?

முன்னிற்க அழைக்கப்பட்டோருக்கல்ல சாக்குப்போக்குகள்;
காயங்கள் போர்வீரனின் அடையாளங்கள்.

மக்கள் உன்னை ஏற்கவில்லை எனக்கூறாதே,
தேவன் உன்னை அழைத்திருக்கிறார்.

இளைஞன் என்று சொல்லாதே,
தேவனே ஞானத்தின் உறைவிடம்.

நான் பெண்தானே என்று கூறாதே, தெபொராளை
அழைத்த தேவன் உன்னையும் அழைத்திருக்கிறார்.

பெலவீனன் என்று கூறாதே,
அவரது கிருபை போதுமானது.

முதியவன் என்று சொல்லாதீர்,
தேவன் உம்மைப் பலப்படுத்துவார்.

உனக்கிருக்கும் இந்த பலத்தோடே போ,
தேவன் உன்னுடன் இருக்கிறார்.

சாதக சூழ்நிலைக்காய்க் காத்திராதே,
அதை மாற்றுவதற்காய் அழைக்கப்பட்டவன் நீ.

உடன்செல்ல உறவுகளை எதிர்பாராதே,
நீதிமான்கள் சிங்கத்தைப்போல் திடனானவர்கள்.

இச்செய்தி வேறொருவருக்கு எனக்கூறாதே,
மற்றொருவரைச் சுட்டிக்காட்டாதே.

இல்லை! இது உனக்குத்தான்.

நீ அமைதியாயிருக்க முடியாது;
நீ அசையாமலிருக்க முடியாது.

இது போர்க்காலம்! எக்காளத்தை ஊது! படைவீரரை ஒன்றுதிரட்டு! யுத்தம் ஆரம்பமாகட்டும்! நெடுநேரம் பின்தங்கிவிட்டோம்! நெடுங்காலம் தாக்கப்பட்டு வருகிறோம்! சத்துரு கர்ச்சிக்கிறான்! நீண்டகாலம் நாம் பாடனுபவித்துவிட்டோம். போதும்! சாம்பல் குவியல்களிலிருந்து எழும்பு! யோசுவாவே, எழுந்திரு! எழுந்திரு! இஸ்ரவேலர் செய்த பாவங்களினின்று அவர்களைச் சுத்திகரி! தெபோராளே, எழும்பு! எழும்பு! பாராக் இன்னும் பயத்தினால் நடுங்கிக்கொண்டிருக்கிறான்; அவனுக்கு உனது ஊக்குவிக்கும் தீர்க்கதரிசனங்கள் தேவை!

இது போர்க்காலம்! சிறு காயங்களும், புண்களும் நம்மைப் பின்னிறுத்த முடியாது. தேவனது போர்வீரர்களாக நாம் காயங்களைப் பாராதபடி துணிந்து முன்னேறிச்செல்வோம். **பழைய பாம்பும், தந்திரசாலியும், பிரிவினைக்காரனும், குற்றஞ் சாட்டுகிறவனும், சோதனைக்காரனும், அதைரியப்படுத்துகிற வனும், குருடாக்குகிறவனுமாகிய பிசாசு என்ற நமது ஒரே எதிரியை எதிர்த்து நாம் யுத்தஞ்செய்வோம்.** வெற்றிபெறும்வரை நாம் போரிடுவோம். நாம் யுத்த சத்தத்தை கேட்கிறபடியால் பின்திரும்பிப் போகக்கூடாது. கர்த்தர்தாமே நமக்காகப் போரிடுகிறார். சத்துரு வல்லமையும் பலமுமுள்ளவனாகக் காணப்பட்டாலும், சர்வவல்லமையுள்ள தேவன் நமது பக்கத்தில் இருக்கிறார். நிச்சயமாக வெற்றி நமதே.

இது போர்க்காலம்! நமக்காகப் பெரிய காரியங்களைத் தேடும் நேரம் இதுவல்ல. அங்கீகாரம், பதவி, மதிப்பு ஆகியவற்றைத் தேடும் வேளை இதுவல்ல. பாராட்டுதலைப் பெறும் சமயம் இதுவல்ல. பரலோகம் மட்டுமே முக்கியமானது! நித்தியம் மட்டுமே கருத்தில்கொள்ள வேண்டியது! இது சொத்தைக் குவித்து செல்வந்தராகும் வேளையுமல்ல. பாகால் வழிபாடு பெருகுகின்றது. பொய்யான தெய்வங்கள் பொய்யான ஆசீர்வாதங்களைப்பெற பொய்வாக்குறுதிகளைக் கொடுத்துள்ளன. சத்தியத்தைப் பெற்ற வர்களாகிய நாம் அதைப் பிரசங்கிக்க வேண்டும், எழுதவேண்டும், பிரசித்தப்படுத்த வேண்டும்.

இது போர்க்காலம்! இது தூங்குகின்ற நேரமல்ல. இது கேளிக்கைகளையும் தேட வேண்டிய வேளையல்ல. இது கர்த்தரைத் தேட வேண்டிய நேரம். அவரது பாதத்தில் காத்திருந்து, கூடுதல் வல்லமை, கூடுதல் கிருபை, கூடுதல் ஞானம் மற்றும் கூடுதல் அன்புக்காகக் கதறி அழ வேண்டிய நேரம். இது உலகின் சிற்றின்பங்களில் நம்மை ஈடுபடுத்தும் காலமல்ல. இது போரிடும் நேரம்! வெற்றிகள் பல காத்திருக்கின்றன.

இது போர்க்காலம்! முன் வரிசையில் நிற்கும் போர்வீரர்களின் தேவை அதிகம். சத்துரு உதவிகள் வரும் வழியைக் குறிவைக்கிறான். உதவிப் பொருட்கள் நிறைந்த வாகனங்கள் கடந்து செல்லும் பாலங்களை அழித்துக்கொண்டிருக்கிறான். அவ்வாகனங்கள் ஆங்காங்கே நிற்கின்றன. பாலங்கள் திரும்பக் கட்டப்பட வேண்டும். நேரத்தை வீணாக்காதீர்கள்! உறவுகளைச் சீராக்குங்கள்! காயங்களை ஆற்றுங்கள்! பழைய காயங்களை மறந்துவிடுங்கள்! சுகப்படுத்துதலைத் துவங்குங்கள்! கீலேயாத்தில் பிசின்தைலம் உண்டு, நீங்கள்தான் மருத்துவர்!

இது போர்க்காலம்! சத்துரு மகா பரிசுத்தஸ்தலத்தைப் பாழாக்கிவிட்டான். சுவர்களனைத்தும் உடைந்துவிட்டன. தேவ மக்கள் அவமானத்திலும் அடிமைத்தனத்திலும் வாழ்கின்றனர். நெகேமியாவே, எழும்பு! அரசரின் அரண்மனையிலிருந்து வெளியே வா. மூப்பர்களும், இஸ்ரவேலரும் உனது தலைமைக்காகக் காத்திருக்கின்றனர்! சபைக்கு உனது சேவை தேவை. சபையின் நிறுவனங்கள் அபாயத்தில் உள்ளன. அடித்தளங்கள் அசைகின்றன. நெகேமியாவே, தெபொராளே! அவரது கதறலை நீ கேட்கின்றாயா?

முதல் அடியை எடுத்துவை

ஒரு தலைவனுக்கும் பின்பற்றுபவனுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், தலைவன் முதலாவது அடியை எடுத்துவைக்கிறான். முதலாவது அடி கடினமானது, திட்டமிட வேண்டியது, திசையை நிர்ணயிக்க கூடியது. அது சரித்திரப் போக்கையே மாற்றக்கூடியது. இருப்பினும், வெகு சிலரே இந்த முதலடியை எடுத்துவைக்கின்றனர். முதலடியை எடுத்துவைக்கத் துணிவும், தைரியமும் வேண்டும். அந்தப் பாதையில் முன்சென்றவர் ஒருவருமில்லை; பின்தொடர மாதிரி எவருமிலர். நமக்கு தெய்வீக வழிநடத்துதலும், துணிச்சலும், காலத்தையறிதலும் தேவையானவை. ஆம்! சபைக்கு இத்தகைய தலைவர்கள் தேவை; நீங்கள் அவர்களில் ஒருவர்.

யார் செல்லத் தேவையில்லை?

உலகம் தொலைந்துபோகவில்லை என்றும் அதற்கு ஓர் இரட்சகர் தேவையில்லை என்று நம்புகிறவர்கள்.

"நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் என் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று இயேசு சொன்னது தவறு என நம்புகிறவர்கள்.

சுவிசேஷம் தேவனின் வல்லமையல்ல; அது புறவினத்தவரை இரட்சிக்காது என்று விசுவாசிக்கிறவர்கள்.

நமது முன்னோர்களிடம் மிஷனரிகள் வராமலிருந்து, நாம் இன்னும் புறவினத்தவராய் இருப்பதை விரும்புகிறவர்கள்.

இவ்வுலகில், "ஒவ்வொரு மனிதனும் அவனவனுக்கு உத்தரவாதம்" என்று நம்புகிறவர்கள்; மற்றும் காயீனைப்போல, "நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ?" என்று கேட்பவர்கள்.

கிறிஸ்துவின் இறுதி வெற்றியில் பங்கினை விரும்பாதவர்கள்.

தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பணத்துக்குத் தேவனிடம் கணக்கொப்புவிக்க தேவையில்லை என்று நம்புகிறவர்கள்.

"மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்" என்ற இறுதித்தீர்ப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பவர்கள்.

– ஹோரேஸ் புஸ்நெல்

அத்தியாயம் 3

இறைப்பணிக்காய் வாரீர்!

வயல் நிலங்களின் கதறல்

"யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?" ஏசாயா 6:8

கடந்த நூற்றாண்டு, பரிசுத்த ஆவியின் நூற்றாண்டு எனக் கருதப்பட்டது. அந்த நூற்றாண்டில்தான் பரிசுத்த ஆவியானவர் அதிசயிக்கத்தக்க விதமாய் அசைவாடி சபையைப் புதுப்பித்தார். உள்நாட்டு மிஷனரிப்பணியில் ஆர்வம் புதுப்பிக்கப்பட்டு, மிஷனரி இயக்கங்கள் பல எழும்பின. தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற அநேக தனிநபர்களை வல்லமையாகப் பயன்படுத்தினார். இந்நூற்றாண்டில் தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனையும், ஒவ்வொரு விசுவாசியையும் அப்போஸ்தல அதிகாரத்துடன் செயல்படும் ஒரு மிஷனரியாக எழுப்பிக் கொண்டிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

இறையியல் பண்டிதர் ஃபிலிப் ஸ்காஃப் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைக் குறித்து பின்வருமாறு எழுதுகிறார்;

"முன்னால் நிறுவப்பட்ட கிறிஸ்தவம் தனக்குத்தானே மிகச் சிறந்த மிஷனரியாக இருந்தது. அது தன்னுள்ளிருந்து தானாகவே வளர்ந்தது. அது இருளில் ஒளிர்கின்றதும் இருளை ஒளிரச் செய்கின்றதுமான ஒரு ஒளியாயிருந்தது. ஒவ்வொரு சபையும் ஒரு மிஷனரி இயக்கமாகவும், ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் அன்பினால் கொழுந்துவிட்டெரியும் ஒரு மிஷனரியாயிருந்தனர்,"

வியக்கத்தக்க வகையில் இதுவே கடந்த 45 ஆண்டுகளாக ஆசிர்வாத இளைஞர் இயக்கத்தின் முழக்கமாக இருந்து வருகிறது.

"ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு மிஷனரி,
கிறிஸ்தற்ற ஒவ்வொருவனும் ஒரு மிஷனரிப் பணிக்களம்."

நாம் இறைப்பணியில் பங்கு வகிக்க மிஷனரி அழைப்பைக் குறித்தும், செலுத்தப்பட வேண்டிய கிரயத்தைக் குறித்தும் தெளிவாக காண்போம்.

இந்த அழைப்பு ஓர் உன்னதமான அழைப்பு, அதைப்போல செலுத்தப்பட வேண்டிய கிரயமுமுண்டு . பலர் அழைக்கப்பட்டிருந்தாலும் சிலரே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். விலைக்கிரயம் செலுத்த விரும்புகிறவர்கள் மட்டுமே இரட்சகருக்குப் பாத்திரராய் எண்ணப்படுவர்.

ஒரு மிஷனரியின் உன்னத அழைப்பு

திருமறையில் "மிஷனரி" என்ற பதம் இல்லை. அது "அப்போஸ்டோலஸ்" (Apostolos) என்ற கிரேக்கப்பதத்தின் இலத்தீன் வார்த்தையே ஆகும். இதன் பொருள் "பிரதிநிதியாக அழைத்து அனுப்பப்பட்டவன்" என்பதே. **எனவே, ஒரு மிஷனரி ஓர் அப்போஸ்தலனாவான்.** அவன் தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்படுகிறான். ஒரு மிஷனரிக்கு ஆதரவாளர்கள் மற்றும் தாங்கும் குழுக்கள் இருந்தாலும் அவன் அடிப்படையாக தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்படுகிறான். அப்போஸ்தலர்கள் பற்றி வேதாகமம் சொல்வதைக் கவனியுங்கள்:

1 கொரிந்தியர் 12:28 – "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்."

எபேசியர் 2:19,20 – "ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள்."

மேற்கண்ட வசனங்களில், அப்போஸ்தல ஊழியம் சபையின் அடித்தள ஊழியம் என்பதைக் காண்கிறோம். அப்போஸ்தலப் பணி என்பது மிஷனரி நற்செய்திப் பணியேயன்றி வேறொன்றுமில்லை. அது அதிகாரமும் வல்லமையும் மகிமையுமான ஊழியம், நம்மில் பலருக்கு மிஷனரிகளைப்பற்றி இளகிய மனம் உண்டு, அது தவறு

அல்ல; அவர்கள் தேவனின் தூதுவர்களும் பிரதிநிதிகளுமாவர். பரலோகம் அவர்களை ஏற்றுக்கொண்டு மகிமைப்படுத்தும் என்பதை நாம் ஒரு போதும் மறந்து போகக்கூடாது. எனவே தான் ஏமி கார்மைக்கேல் அம்மையார், "மிஷனரிகளுக்காக பரிதாபப்பட வேண்டாம், அவர்கள் மீது பொறாமைப்படுங்கள்," என்று புன்ன கையுடன் சொன்னார்.

மாபெரும் கட்டளை

மத்தேயு 28:18-20 - "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்."

மாபெரும் இக்கட்டளை மகத்தானது. ஏனெனில் இது நமது கர்த்தரும் தேவனுமாகிய இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டது; இது மகிமையானது; நித்திய நோக்குடையது; விலையேறப்பெற்ற ஆத்துமாக்களைக்குறித்தது. ஆனால், துக்ககரமாக, நாம் இதைக் குறித்து சிந்திப்பதில்லை; சில நேரங்களில் சிந்தித்தாலும், நமது உலகக்கவலை மற்றும் அறிவின்மை காரணமாக அதைப் புறக்கணித்து விடுகிறோம். தூய ஆவியானவரே இறைப்பணியின் துவக்குநர். அவரே அழைத்து, இருளில் மூழ்கியிருக்கும் இடங்களுக்கு அனுப்புகிறார். நாம் மிஷனரிப் பணியைக் குறித்து அக்கறையற்றிருப்போமானால் பின்மாற்ற நிலையில் உள்ளோம் என்பது அதிநிச்சயம். சபையில் மிஷனரி ஆர்வம் இல்லையெனில் அது உயிரற்ற சபையாகும். நீங்கள் மரணச்சாலையில் பயணித்துக்கொண்டிருக்கிறீர்கள். சபை அனுப்ப வேண்டும் அல்லது அது சமாதியாகிவிடும் என்று தேவமனிதர் ஒருவர் கூறினார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாபெரும் கட்டளைக்கு நாம் கீழ்ப்படியாமல் இருப்பதற்கான ஏழு காரணங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

1. ஏனெனில் நாம் சிலுவைக்கு மேலாக நமது உறவுகளை மதிக்கிறோம்

மத்தேயு 10:37,38 - "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது

மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.”

நாம் நமது பிணைப்புகளைக் குறித்து எச்சரிக்கையாயிருப்பது அவசியம். பெற்றோரிடமும் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் அன்பு பாராட்ட வேண்டும்; ஆனால் எவரேனும் நமக்கும் தேவனுக்கும் இடையில் வந்தால், அந்த உறவு தகுதியானதல்ல. அதையே இயேசு தமது சீஷரிடம், **“அவன் எனக்குப் பாத்திரன் அல்ல” என்றார்.** அவ்வார்த்தைகளின் ஊடுருவும் வல்லமையைக் கவனியுங்கள். நாம் விசுவாசிகளாயிருக்கலாம், ஆனால் இயேசுவின் சீடனாக இருப்பது முற்றிலும் வேறு.

மாபெரும் கட்டளையில் முதன்மையானது “செல்லுதல்” என்பதே. “செல்லுதல்” இல்லாமல் “கீழ்ப்படிதல்” இல்லை. “செல்லுதல்” இல்லாமல் “நற்செய்தி அறிவித்தல்” இல்லை. “விட்டுவிடுதல்” இல்லாமல், “செல்லுதல்” இல்லை. பல கிறிஸ்தவர்கள் இந்த விலைக்கிரயத்தை செலுத்த மனமற்றிருப்பதைக் காண்கிறேன்.

மாற்கு 10:29,30 - “என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது **விட்டவன் எவனும்,** இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடேகூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”

மேற்கண்ட வசனத்தில் **“விட்டவன்”** என்ற வார்த்தையைக் குறித்துக்கொள்ளுங்கள். நாம் நமது பெற்றோரை, சொந்த நாட்டை, பிள்ளைகளை, நிலங்களை விட்டுச்செல்ல நேரிடும், ஆம், போக வேண்டுமானால் விட வேண்டும். ஒரு வாலிபன் அவனது காதலியினாலும், ஒரு வாலிபப்பெண் அவளது சகோதரராலும் தடுத்து நிறுத்தப்படுகிறாள்; பிள்ளைகள் பெற்றோராலும், பெற்றோர் பிள்ளைகளாலும் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. நீங்கள் எவராலாவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறீர்களா? அல்லது நீங்கள் எவரையேனும் தடுத்து நிறுத்தியிருக்கிறீர்களா? நியாயாசனத்தில் வீற்றிருக்கும் இரட்சகரைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள். உங்களுக்கு சிலுவை

அத்தனை அற்பமாகிவிட்டதா? கல்வாரி அன்பை நீங்கள் ஒருபோதும் சிந்தனை செய்யவில்லையா? தேவன் தமது ஒரே பேறான குமாரனை நமக்காக மரிப்பதற்கென்று அனுப்பினார். நாமோ, நமக்கு பிரியமானவர்கள் துக்கப்படக் கூடாது என்பதற்காகப் போகாமலிருக்கிறோம். நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரராய் நடப்போம்.

நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி – "கிறிஸ்துவுக்காக நான் எதை இழந்தேன்?" உங்களுக்கு ஒரு பட்டியலிருந்தால், தேவனைத் துதியுங்கள்! பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். நீங்கள் கிறிஸ்துவுக்காக எதையுமே இழக்கவில்லையெனில், சிந்தியுங்கள், தீர்மானியுங்கள், செயல்படுங்கள், செல்லுங்கள்!

2. ஏனெனில் நாம் ஆவிக்குரிய அறிவின்மையில் இருக்கின்றோம்

வெளிப்படுத்தல் 3:17, "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறாய்."

லவோதிக்கேயா சபை தான் நன்றாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தது. ஆனால் தேவன் அவர்களை தரித்திரர், பரிதபிக்கப்படத்தக்கவர்கள் மற்றும் நிர்வாணிகள் என்று கூறினார். என்னே ஒரு வேறுபாடு! நாம் தேவனது பார்வையில் தரித்திரர் மற்றும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் என்பதை அறியாமல் நமது மூதாதையரைக் குறித்து தற்பெருமை கொள்கிறோம்; நமது உலக ஆசீர்வாதங்களைப் பற்றி பெருமை பாராட்டுகிறோம். மிஷனரிப் பணிக்காகக் கொடுக்க விழைகிறோம். ஆனால், நமது பிள்ளைகள் மிஷனரிகளாகச் செல்வதை விரும்புவதில்லை. என்னே மாய்மாலம்! நாம் நம்மைப் பற்றிக் கூடுதலாக நினைத்துக் கொள்கிறோம். நாம் கொஞ்சமாகச் செய்கிறோம், அதைக்குறித்து எல்லோரிடமும் ஜம்பமடித்துக் கொள்கிறோம். நமது சொந்த திருப்திக்காக ஊழியம் செய்கிறோம். வெற்றியைக் குறித்துப் பேசுகிறோம், ஆனால், நாம் இன்னும் யுத்தத்தில் நுழையவேயில்லை. மிஷனரிப் பணியைக் குறித்துப் பேசுகிறோம். ஆனால், அதற்குக் கீழ்ப்படிய நமக்கு விருப்பமில்லை. **நமது ஆவிக்குரிய பெருமை நம்மை ஆவிக்குரிய குருடர்களாக்கிவிட்டது.**

இன்னும் சிலர், "மிஷனரிகளை அனுப்பத் தேவையில்லை; சுதேசப் பணியாளர்களே அனைத்து வேலைகளையும் கவனித்துக் கொள்ளமுடியும்" என்கின்றனர். இது முதலாளித்துவ மனப்பாங்கு! "நாங்கள் பணம் கொடுக்கிறோம்; நீங்கள் பணி செய்யுங்கள்" என்பதே அவர்களது கோஷம். பணம் கொடுக்கும் இயந்திரங்களாக மாற விரும்புகின்றனர். விலைக்கிரயம் செலுத்தாமல் பலன்பெற ஆசைப்படுகின்றனர். செல்லாமலே மாபெரும் கட்டளைக்குக் கீழ்ப்படிய வாஞ்சிக்கின்றனர். நமக்கு வசதியாக சத்தியங்களை மாற்றிக்கொள்வது எத்தனை அவமானம்! நாம் மிஷனரிப் பணிக்குக் கொடுக்க வேண்டியதுதான்; ஆனால், அது நமது தனிப்பட்ட அழைப்பிற்கும், தேவன் நம் ஒவ்வொருவரிடமிருந்து எதிர்பார்க்கும் அர்ப்பணிப்பிற்கும் அது தடைகல்லாய் இருக்கக்கூடாது. முன்னொரு காலத்தில் மிஷனரிகளை அனுப்பிக் கொண்டிருந்து, தற்போது மிஷனரி தேவையிலிருக்கும் இரு நாடுகளின் உதாரணங்களை உங்களுக்குத் தர விரும்புகிறேன்.

1. இங்கிலாந்து அகில உலகமெங்கும் மிஷனரிகளை அனுப்பிக்கொண்டிருந்தது. பின்பு சபையானது மிஷனரிகளை அனுப்புவதைக் குறைத்துக் கொண்டு, பணம் மட்டும் அனுப்பிய ஒரு நேரம் வந்தது. அதன் பின்னர் என்ன நிகழ்ந்தது? அனுப்பிக் கொண்டிருந்த சபை மிஷனரி ஆர்வத்தை இழந்தது. தற்போது பல ஆலயங்கள் காலியாக உள்ளன.

2. இந்தியாவுக்கு வந்த முதல் புராட்டஸ்டன்ட் மிஷனரி சீகன்பால்க் அல்லது வங்காளத்துக்கு வந்த வில்லியம் கேரி முதலிய எவருக்கானாலும் டேனிஷ் அரசுதான் மிஷனரிப் பணிக்குப் பலத்த ஆதரவைக் கொடுத்தது. இப்பொழுது, டென்மார்க் சபையில் ஓரினச் சேர்க்கை ஆயர்களும், பேராயர்களும் இருக்கிறார்கள். அத்தகைய காரியத்தை இந்தியாவில் கற்பனை செய்ய முடியுமா? ஆம், நாம் ஏற்கனவே அதே படகில்தான் பயணம் செய்கிறோம். அதிரடியாக ஏதேனும் நிகழாவிட்டால், எழுப்புதல் ஏற்படாவிட்டால் நாம் நசிந்து போவோம். சபை, புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளது; எனினும் ஒருவரும் அதை அறியவில்லை.

3. ஏனெனில் நாம் பண சிந்தை உள்ளவர்கள்

மத்தேயு 6:19-21 - "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத்

திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை."

பொருளாசை ஒரு விஷக்கிருமி. இது பரவும் ஒரு நோய். எல்லாரும் செல்வந்தராகவும், சொகுசாகவும் வாழ விரும்புகின்றனர். லௌகீக சிந்தை ஆடம்பரத்தை இன்றியமையாததாகக் கருதுகிறது. நம் வீட்டில் தங்கியிருந்து செல்வம் சேர்ப்பதை விரும்புகிறோம். நவீன பாணியில் இருக்க ஆசைப்படுகிறோம். சந்தையில் ஏதேனும் புதிதாயிருந்தால் அதை வாங்கத் துடிக்கிறோம், வரவுக்குமீறிச் செலவழிக்கிறோம். கடன் வாங்கி செலவு செய்கிறோம். நாம் பொருளாசைக்கு அடிமைகளாகிவிட்டோம். இயேசு கிறிஸ்துவிடம் வந்த வாலிபனின் பிரச்சனையும் இதுதான். இயேசு அவனிடம் சொன்னதை நாம் மறந்து போகாதிருப்போம்.

மத்தேயு 19:21 – "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா."

இதுவே விசுவாச வாழ்வின் துவக்கம். நம்மில் எத்தனைபேர், நமக்குள்ளதையெல்லாம் விற்கவும், இவ்வுலகம் ஒன்றுமில்லையென எண்ணவும் ஆயத்தமாயிருக்கிறோம்? C.T. ஸ்டட் பெருஞ்செல்வத்துக்கு உரிமையாளரானபோது அதைத்தான் செய்தார். அவர் எல்லா பணத்தையும் கொடுத்துவிட்டு ஒரு மிஷனரியாகச் சென்றார். இதுதான் நான் பேசிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவம். இதுவே திருமறை நவிலும் கிறிஸ்தவம். இந்தியாவில் 2000 ஆண்டுகளாக கிறிஸ்தவம் 2% குழந்தைக் கிறிஸ்தவர்களைத்தான் உருவாக்கியுள்ளது. குழந்தைகள் எப்பொழுதும் அழுவார்கள், அவர்களுக்கு எப்பொழுதும் ஏதேனும் வேண்டும். அவர்களை வழிநடத்த எப்பொழுதும் யாரேனும் ஒருவர் தேவை. ஒரு ரூபாய் சாக்லெட்டுக்காக அவர்கள் பொன்னையும் வெள்ளியையும் கொடுத்து விடுவார்கள். அவர்களைத் திருப்திப் படுத்தவே இயலாது. இதுவே இன்றைய கிறிஸ்தவர்களின் சோக நிலைமை. நம்மை அடிமைத்தனத்தில் வைக்க எதிரிக்கு நேரமாகாது. பொருளாசை அவன் பயன்படுத்தும் ஓர் ஆயுதம்.

நாம் நமது பிள்ளைகளை அமெரிக்காவுக்கு குஷியாக அனுப்புவோம், ஆனால் அஸ்ஸாமிற்கு அனுப்பமாட்டோம்; ஐரோப்பாவுக்கு மாலை போட்டு அனுப்புவோம், ஆனால், ராஜஸ்

தானுக்கு அனுப்பமாட்டோம். வட இந்தியாவைவிட அமெரிக்காவும் ஐரோப்பாவும் அருகில் உள்ளனவா? உங்களது குடும்பம், ஐக்கியம், கூடுகை மற்றும் சபையில் குறைந்தது ஒரு மிஷனரியாவது இருக்க வேண்டும். மிஷனரிக்குப் பணம் கொடுத்தலைப்பற்றி அல்ல, மிஷனரியை அனுப்புதலைப் பற்றி பேசுகிறேன். சிலுவையற்ற கிறிஸ்தவம், ஒரு கிறிஸ்தவமேயல்ல. இன்னும் ஒரு கூட்டத்தினர் தேவனுக்குப் பணம் கொடுப்பதன் மூலம் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணுகின்றனர் (தேவனுக்கு லஞ்சம் கொடுக்கின்றனர்!). இத்தகைய விக்கிரகாராதனையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

4.ஏனெனில் நாம் நரகம் உண்டென விசுவாசிப்பதை நிறுத்திவிட்டோம்

மத்தேயு 10:28, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், உடலை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் உடலையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்."

நரகம் உண்டென நாம் விசுவாசித்தால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த நம்மாலியன்ற அனைத்தையும் செய்வோம். நரகம் என்பது உண்மையெனில் நமது உறவினர்களுக்காக, நண்பர்களுக்காக, உடன் ஊழியர்களுக்காக, பள்ளிகளுக்காக, நிறுவனங்களுக்காக கதறி அழுவோம். நரகம் இருப்பது உண்மையானால் நமது நகரங்களுக்காக, கிராமங்களுக்காக, தேசத்திற்காக புலம்பி அழுவோம். இந்தியாவில் ஒவ்வொரு விநாடியும் ஏறத்தாழ ஒரு நபர் மரணமடைகின்றார். நீங்கள் இக்கட்டுரையை வாசித்து முடிப்பதற்குள் இந்தியாவில் சுமார் 500 பேர் புதிதாக நரகத்துக்குச் சென்றிருப்பர். அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக நீங்கள் கடைசியாக அழுதது எப்போது? உலக மக்கள் தொகையில் 1/6 பங்கு இந்தியாவில் உள்ளது. உலகிலேயே நம் நாட்டில்தான் நற்செய்திமயமாக்கப்படாத பகுதிகள் அதிகம் உள்ளன. தங்கள் மொழியில் வேதாகமம் இல்லாத கூட்டத்தினரில் அதிக எண்ணிக்கையினர் நம்மிடமே உள்ளனர். வேதாகமம் தாய் மொழியில் தேவையான 154 மக்கள் பிரிவினர் உள்ளதாக இந்திய மிஷனரி அமைப்பு (IMA) கண்டுபிடித்துள்ளது. இன்னும் ஓர் ஆலயம் கூட இல்லாத 205 மக்கள் பிரிவினர் நம்மிடம் உள்ளனர். உலகிலுள்ள நற்செய்தி அறிவிக்கப்படாத 639 இனத்தவரில் 485 இந்தியாவில் உள்ளனர் (2/3 பங்கினர்). நாம் இன்னும் ஆலயங்கள் இல்லாத மாவட்டங்களையும் கிறிஸ்தவர்

இல்லாத கிராமங்களையும் கொண்டிருக்கிறோம். இந்தி மொழியினர் பெரும்பான்மையானோர் நிறைந்துள்ள 38 கோடி மக்கள் தொகையுள்ள கங்கைச் சமவெளியில் (இந்தியாவின் மைய மற்றும் வட பகுதிகள்) ஒரு சதவீதத்துக்கும் குறைவான கிறிஸ்தவரே உள்ளனர். 320 பல்கலைக்கழகங்களில் 1.1 கோடிக்கும் மேலான மாணவர்கள் உள்ளனர். அங்கேயிருந்து ஒவ்வொரு நாளும் தற்கொலைச் செய்திகள் வந்த கொண்டிருக்கின்றன. இந்திய நாட்டில் இன்னும் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் உள்ளது. சவால் உயர்ந்ததாயிருப்பினும், இது தேவனுக்குச் சேவை செய்ய ஒரு தருணம். மிஷனரி வாழ்வு என்பது அவருக்காக மரிக்கக் கிடைக்கும் வாய்ப்பு ஆகும்.

ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் நிகழும் ஊழியங்கள் ஏராளம் உள்ளன. ஏன் தேவையுள்ள பிற இடங்களுக்குச் செல்லக்கூடாது? ஏன் நமக்கிருக்கும் வாய்ப்புகளை தேவையான இடங்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடாது? நம் நாட்டுக்காக மரித்த மிஷனரிகளின் கல்லறைகள் நம்மிடம் உள்ளன - சீகன்பால்க் இளவயதிலேயே மரித்தார், ஆனால், அவர் நமக்குத் தமிழ் வேதாகமத்தைக் கொடுத்தார். உயர்தரக் கல்வி கற்ற ராக்லண்ட் ஏழ்மையில் வாழ்ந்து ஓர் அந்நியனைப்போல சிவகாசியில் மரித்தார். வில்லியம் கேரி, மார்ஷ்மேன் மற்றும் வில்லியம் வார்ட் ஆகியோர் தங்கள் மனைவி பிள்ளைகளுடன் இந்தியாவில் மரணமடைந்தனர். இந்த முன்னோடி மிஷனரிகளின் கல்லறைகள் மேலேயே நமது சபைகள் அனைத்தும் கட்டப்பட்டுள்ளன. அவர்களது கண்ணீர், வியர்வை மற்றும் இரத்தம் இன்றும் நம்முடன் பேசுகின்றன. இந்தியாவைக்குறித்த அவர்களது தரிசனம் இன்னும் கதறிக் கொண்டிருக்கிதை நீங்கள் கவனிக்கிறீர்களா? நாம் எப்படி அவர்களை விண்ணகத்தில் சந்திக்கப் போகிறோம்? அவர்கள் விலைக்கிரயம் செலுத்தினதினால் தான் நாம் இன்று ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்; அவர்கள் மரிக்க ஆயத்தமாயிருந்தனர்; அவர்கள் நஷ்டமடைய தயாராயிருந்தனர். அவர்களது அடிச்சுவடுகளைப்பின்பற்ற நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? விலைக் கிரயம் செலுத்த உங்களுக்கு விருப்பம் உண்டா?

5. ஏனெனில் நாம் சிந்தித்து சிந்தித்துக் குழம்பிப் போகிறோம்

நியாயாதிபதிகள் 5:15 - “ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி.”

தெபொராள் போருக்கு அழைத்தாள். எதிரி ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் இருந்தான். அவளுக்குப் போரிடும், வீரமுள்ள, துணிவுள்ள, தைரியமான, விலைக்கிரயம் செலுத்தக்கூடிய, போரிட்டு மடியக்கூடிய, சரித்திரத்தை மாற்றி எழுதக்கூடிய மனிதர் தேவைப்பட்டனர். எக்காளம் ஊதப்பட்டுவிட்டது. நாம் அழைப்புக்குப் பதிலளிக்க வேண்டும். இது தீர்மானம் எடுக்க வேண்டிய மணித்துளி. இது விளைவுகளை ஆராய்ச்சி செய்யும் நேரமல்ல. ஆனால், ரூபன் கோத்திரத்தார் ஆராய்ச்சி செய்து, யோசித்து யோசித்து சிந்தித்துக் கொண்டிருந்தனர்; இறுதியில் தேவனுக்குச் சேவை புரியும் தருணத்தை இழந்தனர். எனவே, அவர்கள் வெற்றியிலும் பங்கு கொள்ள முடியாது போயிற்று. அளவுக்கு மீறி சிந்தனை செய்தல் உங்கள் வாழ்வைக் குறித்த தேவனது திட்டத்தை அழித்துவிடும். தேவன் உங்களை அழைத்திருந்தால் நீங்கள் வெறுமனே கீழ்ப்படிய வேண்டியதுதான். நீங்கள் இக்கட்டுரையை வாசிக்கும் போது தேவன் உங்களைப் பாரப்படுத்துவாரானால் நீங்கள் அப்படியே கீழ்ப்படிய வேண்டும். கேள்விகள், சந்தேகங்கள், தயக்கங்கள் கூடாது. கர்த்தர் யுத்தத்தில் வல்லவர். யுத்தம் அவருடையது. போக வேண்டியது நீங்களே. நீங்கள் நின்று வெற்றியைப் பாருங்கள். நீங்கள் தேவனுக்குக் கொடுக்க முடிந்தவைகளையெல்லாம் கொடுங்கள். நீங்கள் ஓர் ஆசிரியரெனில் மிஷன் பள்ளிகளில் காலியிடங்கள் உண்டு. நீங்கள் ஒரு மருத்துவரெனில் மிஷன் மருத்துவமனை களில் காலியிடங்கள் உண்டு. நீங்கள் தயாராயிருந்தால் தேவன் உங்களை எடுத்துப் பயன்படுத்துவார். கூடாரம் அமைக்கும் மிஷனரி யாகக்கூட நீங்கள் செல்லத் தீர்மானிக்கலாம். இடமாற்றத்துக்கு விண்ணப்பித்து தேவையிலிருக்கும் இடங்களுக்குச் செல்லுங்கள். தீர்மானியுங்கள்! இப்பொழுதே!

6. ஏனெனில் நமக்குப் பலவீனங்கள் உண்டு

யோசுவா 14:10-12, "... இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில் எனக்கு இருந்த அந்த பெலன் இந்நாள் வரைக்கும் எனக்கு இருக்கிறது. யுத்தத்திற்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது. ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன மலைநாட்டை எனக்குத் தாரும்..."

மேற்கண்ட வசனத்தில் நாம் காலேபின் விசுவாசத்தையும் துணிவையும் காண்கிறோம். தைரியசாலியான அவன் தைரியமான

விண்ணப்பம் பண்ணினான். அவன் சமவெளிகளை மட்டுமல்ல மலைநாட்டையும் கேட்டான். கடினமானதொரு நேரத்தில் அவன் ஒரு கடினமான காரியத்தைக் கேட்டான். உண்மையில் அவன் எண்பத்தைந்து வயது இளைஞனாயிருந்தான். உங்கள் வயதும் பலவீனங்களும் தேவனுக்கு ஒரு பொருட்டல்ல. நீங்கள் வயோதிபராகவோ அல்லது வாலிபராகவோ இருக்கலாம். வாலிபர் இடறி விழுவார்கள் என்று திருமறை சொல்லுகிறது (ஏசா 40:30). கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ கழுகுகளைப் போல புதுப்பெலன் அடைவார்கள். நீங்கள் முதிர்வயதினராய் இருந்தாலும், உங்களைக் குறித்து தேவன் தமது திட்டத்தை வெளிப்படுத்த அவரிடம் கேளுங்கள். நீங்கள் செய்ய வேண்டுமென தேவன் விரும்பும் ஏதேனும் உண்டா? தேவனது வழிநடத்துதலுக்கு இடம் கொடுங்கள். நீங்கள் உங்களைப் பயனற்றவர்கள் என எண்ண வேண்டாம். C.T. ஸ்டட் ஓய்வு பெற்ற பின்னரே தேவன் அவருக்கு ஆப்பிரிக்காவின் தேவைகளைக் குறித்த பாரத்தைக் கொடுத்தார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் கையில் பணமுமில்லாமல், உடல்நலக் குறைவினிமித்தம் மிஷன் குழுவினரால் கைவிடப்பட்டு இருந்தும், தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆப்பிரிக்கக் காடுகளுக்குள் துணிந்து சென்று “ஹார்ட் ஆஃப் ஆப்பிரிக்கா மிஷன்” (HAM) என்ற மிஷன் நிறுவனத்தை உருவாக்கினார். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. உங்கள் பலவீனம் தேவனது நாமம் மகிமைப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பம். உங்கள் நோய் தேவனது வல்லமை வெளிப்படுவதற்கான ஒரு தருணம். எனவே, உங்கள் பலவீனமோ, வயதோ, நிதிநிலமையோ உங்களைக் குறித்த தேவத் திட்டத்தை தடுக்கமுடியாது. அவரது கிருபை போதுமானது; அவரது வார்த்தை சத்தியமானது.சந்தேகித்த சிறுவன் எரேமியாவிடம், தேவன் அவனுடன்கூட இருப்பதாகச் சொன்னார்; தயங்கின மோசேயிடம், அவர் அவனது வாயாக இருப்பதாகப் பதிலளித்தார்; பயந்து நடுங்கிய கிதியோனிடம், தேவன் அவனுக்கிருக்கும் பலத்தோடே போகச் சொன்னார். எனவே, அன்பான வாசகரே, நீங்கள் ஏன் காத்திருக்கிறீர்கள்? தயக்கம் வேண்டாம், காத்திருக்க வேண்டாம், தேவன் சொன்னதைச் செய்யுங்கள்.

7.ஏனெனில் நாம் நித்திய பலன்களைக் கருத்தில் கொள்வதில்லை

தானியேல் 12:3, “... அநேகரை நீதிக்குட்படுத்துகிற வர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.”

யோவான் 14:2, "... ஒரு இடத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்."

2 தீமோத்தேயு 4:7,8 – "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது."

இவ்வுலகத்தை ஒன்றுமில்லை எனக் கருதியவர்களுக்கு தேவன் ஆயத்தம் பண்ணியிருப்பவைகளைக் கண்கள் எதுவும் கண்டதேயில்லை. அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் விண்மீன்களைப்போல ஒளிருவார்கள் என்று திருமறை கூறுகிறது. வரப்போகிற மகிமையை உலகிலுள்ள ஒன்றுடனும் ஒப்பிடமுடியாது. நமது கண்ணிமைநேரத் துன்பங்கள் பறந்துபோகும். நாம் நீதியாகப் பலனளிக்கப்படுவோம். பரலோகம் ஆச்சரியங்கள் பல நிறைந்த இடமாக இருக்கும். இங்கே முதன்மையாக இருக்கும் பலர் அங்கே கடைசியிலிருப்பர். தேவனது சித்தத்துக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள் முன்னிருக்கையில் அமர்ந்திருப்பர், நித்தியம் என்பது ஒரு கோடி இலட்ச ஆண்டுகளைவிடக் கூடுதலானது, முடிவே இல்லாதது. இவ்வுலகில் நாம் செலவழிக்கும் காலமானது மகா சமுத்திரத்தின் ஒரு துளி நீர் மட்டுமே. வாழ்வின் நீளமல்ல, அதன் ஆழமே பொருட்டானது. வாழ்வில் நீங்கள் எதைப் பெறுகிறீர்கள் என்பதல்ல, எதைக் கொடுக்கிறீர்கள் என்பதே காரியம். ஒரே ஒரு வாழ்க்கை மட்டுமே உண்டு. இன்னொன்று கிடையாது. உலகம் கொடுக்கக்கூடியதெல்லாம் வேதனையும், மனச்சோர்வுமாயிருக்கையில், நீங்கள் ஏன் உலகத்திற்காய் வாழ வேண்டும்? அசைந்தாடும் நாணலைப்போல மக்கள் இருக்கையில் நீங்கள் ஏன் அவர்களுக்காக வாழ வேண்டும்?

தேவன் தமது ஒரே குமாரனை உங்களுக்காகவும் எனக் காகவும் ஒரு மிஷனரியாக அனுப்பினார். அவர் நமக்காக வந்தார், நமக்காக மரித்தார், எல்லாவற்றையும் நமக்குக் கொடுத்துவிட்டார். பதிலாக நாம் அவருக்கு என்ன கொடுக்க முடியும்? முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வைவிடக் குறைந்தது எதுவுமா? 1999 ஆம் ஆண்டு, ஜனவரி 23அன்று மிஷனரி கிரஹாம் ஸ்டெய்ன்ஸும், ஃபிலிப், திமோத்தி என்ற அவரது இரு மகன்களும் ஒடிஷாவின் காடுகளினுள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர். சபை வரலாற்றுச் சூழமைவில், இனி வரப்போகிற இறுதிக்கால எழுப்புதலுக்கு இந்நிகழ்ச்சி ஒரு திருப்புமுனையாக இருக்கும்.

தீப்பொறி பற்ற வைத்தாயிற்று, நெருப்பு பரவ ஆரம்பித்துவிட்டது. அவர்களை எரித்த நெருப்பு இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது. அது ஒருபோதும் அணைந்துபோகாது. அது சுவிசேஷத் தீ, அது மிஷனரி பணியின் நெருப்பு, அது அப்போஸ்தல அபிஷேக அக்கினி. முதல் நூற்றாண்டில் யோவானைத் தவிர அனைத்து அப்போஸ்தலர்களும் தங்களுக்காக அனைத்தையும் ஈந்தவருக்காகக் கொல்லப்பட்டனர். அப்போஸ்தல ஊழியத்தில் இரத்த சாட்சிகள் அதிகம் காணப்பட்டனர். நாம் இரத்த சாட்சி காலத்தினுள் அடிவைத்திருக்கிறோம்.

தமக்காக எல்லாவற்றையும், தங்களுக்கருமையான உயிரைக்கூடக் கொடுக்க ஆயத்தமாயிருக்கும் மக்களை தூய ஆவியானவர் எழுப்பிக் கொண்டிருக்கிறார். தேவன் பேசிக்கொண்டிருப்பது உங்களுடன்தானா? எல்லாவற்றையும் குப்பை என்றெண்ணி நீங்கள் அவரைப் பின்பற்றுவீர்களா? அவருக்காக எரிக்கப்படுவதற்காக உங்கள் வாழ்வைப் பலிபீடத்தின்மேல் காணிக்கையாகக் கொடுப்பீர்களா? தேவன் உங்களை நம்பியிருக்கிறார். அவரை சோர்ந்துபோகச் செய்யாதீர்கள். உங்கள் வாழ்வை தேவனது கரத்தில் ஒப்புவியுங்கள். மற்ற காரியங்களை தேவன் பொறுப்பெடுத்துக்கொள்வார்.

மத்தேயு 16:25 - “தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.”

அத்தியாயம் 4

அர்த்தமுள்ள வாழ்க்கை

ஒரு ஞானியின் கதறல்!

“மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்” - பிரசங்கி 1:2

மேற்கண்ட அறிக்கை பூமியின்மேல் வாழ்ந்த புகழ்பெற்ற அரசர்களுள் ஒருவனால் கூறப்பட்டது. அவன் பிறரைவிட அதிக ஞானமும் செல்வமும் பெற்ற மிகப்பெரிய அரசனாக காணப்பட்டான். அவன்தான் சாலொமோன் ராஜா. அவனைப் போன்ற ஒரு பெரிய அரசன் இத்தகைய கூற்றினை எப்படிக் கூற முடிந்தது என்று எனக்கு எப்போதுமே வியப்பு உண்டு. அவன் 3000 நீதிமொழிகளுக்குமேல் எழுதினான் என்று வேதபுத்தகம் பதிவு செய்துள்ளது. அவன் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கை முறையைப் பயின்றதுடன் 1005 பாடல்களையும் இயற்றினான் (1 இரா 4:32,33).

சாலொமோனைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? அவன் ஓர் அறிவியல் நிபுணன், தத்துவ ஞானி, அரசன், இசைமேதை என்று சொல்லிக் கொண்டே போகலாம். அவன் தாவரவியல், விலங்கியல், தத்துவயியல் மற்றும் கலையியல் ஆகியவற்றில் முனைவர் பட்டம் பெற்றிருந்தான் என்று கூறினாலும் மிகையாகாது. (1 இரா 4:33). வேதாகமம் அவனுக்கிருந்த செல்வத்தைப் பற்றியும் குறிப்பிடுகின்றது (1 இரா 10:21). சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருட்டாக எண்ணப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. அவனது ஒரு நாள் சாப்பாட்டுக்கு பத்து கொழுமையான காளைகள், இருபது மேய்ச்சல் மாடுகள், நூறு ஆடுகள் இன்னும் ஏராளமான பொருட்கள் செலவாயின. அவன் பெரிய திட்டங்களைச் செயல்படுத்தினான்; ஒரு மகத்தான தேவாலயத்தைக் கட்டினான்; அவனது மனைவிக்கு ஓர் அரண்மனையைக் கட்டினான்

(1 இரா 7:8). அவனது சிங்காசனம் கம்பீரமாயிருந்தது. அவன் எழுநூறு இளவரசிகளை மணந்தான்; அவர்கள் சாதாரண இனப் பெண்கள் அல்ல, அரச குலப் பெண்கள் (1 இரா 11:3).

மகா அலெக்சாண்டர் பட்டயத்தால் உலகை வென்றான்; ஆனால் சாலொமோன் அவனது சாதுரியத்தினாலும் ஞானத்தினாலும் அதைத் தன் வசப்படுத்தினான். அவன் உலகை முழுமையாக அனுபவித்தான். வெற்றியின் சிகரத்தை அடைந்தான். அவன் மகிழ்ச்சி நிறைந்த ஒரு மனிதனாக இருந்திருக்க வேண்டும்.

"என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை" (பிர 2:10) என்று சாலொமோன் தானே ஒத்துக்கொள்கிறான்.

ஆனால், அவன், எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது என்கிறானே. சாலொமோன் இந்த துயரமான வார்த்தைகளைச் சொல்லக் காரணம் என்ன?

வேதாகமத்தில் காணப்படும் "பிரசங்கி" என்ற அழகான புத்தகத்தில் இக்கேள்விகளுக்கு அவனே பதில் சொல்கிறான். உலகம் தங்களுக்கு எதைக் கொடுக்கும் என்று கண்டுகொள்ளும்படியாக இப்புத்தகம் மனுக்குலத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவை, வாழ்வின் அர்த்தத்தைக் காணப் போராடும் ஒவ்வொரு சந்ததியினருக்கும் எக்காலத்தும் பொருந்தும் சத்தியங்கள் ஆகும்.

சாலொமோன் வாழ்வை மாயை என்று எண்ணக் காரணம் என்ன?

1. வாழ்வு சலிப்பாயிருந்தது

உலகம் கொடுத்த இன்பங்களை அனுபவித்த சாலொமோன், புதிதாக ஏதேனும் இருக்குமா என்று சிந்திக்க ஆரம்பித்தான். நடந்த காரியங்களே திரும்பத் திரும்ப நடப்பது சாலொமோனுக்கு மிகவும் சலிப்பாக இருந்தது. அதே சூரியன், அதே சந்திரன் மற்றும் அதே காரியங்கள். சாலொமோன் பல புதிய கட்டடங்களைக் கட்டினாலும், அதுவும் மாயை என்று உணர்ந்தான். இறுதியாக அவனது மரணத்துக்குப்பின் அவையெல்லாம் இன்னொரு நபருக்குச் சொந்தமாகும். மேலும் பல புதிய காரியங்கள் நிகழும்; புதிய காரியங்களும் பின்னர் பழையவை ஆகிவிடும். எனவே, ஒன்றும் புதிதல்ல என்று ஆச்சரியப்பட்டான்.

உணர்ச்சிவசப்படுதல் என்பது வாழ்வின் ஓர் அங்கம்.

ஒரு சிறு குழந்தை நிறங்களையும், ஒளிவீசும் பொருட்களையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறது. ஒரு சிறுவன் வீடியோ விளையாட்டுகள் விளையாடுவதால் உற்சாகமடைகிறான். ஓர் இளைஞன் அவனைப் பார்த்துப் புன்னகைபுரிந்த நங்கையைக் குறித்து உணர்ச்சிவசப்படுகிறான். முதிர்ச்சி யடைந்த மனிதன் புதிதாய்ப் பிறந்த தன் குழந்தையைக் கையில் ஏந்துவதைக் குறித்து உணர்ச்சிவசப்படுகிறான். இவை வாழ்வின் ஒவ்வொரு படிகள். ஆனால் வாழ்க்கை நகர்ந்து முதுமையை நெருங்கும்போது, ஆரம்ப உற்சாகம் மறைந்து விடுகிறது. முதிர்வயதில் ஒருவர் கண்டறிய எதுவுமில்லை. ஒரு சந்ததி வருகிறது, ஒன்று போகிறது. கதிரவன் உதிக்கின்றது, மறைகின்றது. காற்று வீசுகிறது, கடந்து போகிறது. நீரோடைகள் பாய்கின்றன, ஆவியாகின்றன. சாலொமோன், வாழ்வின் அர்த்தத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கையில், இந்நிகழ்வுகளின் சுழற்சி அவனைச் சலிப்படையச் செய்தன.

புகழ்பெற்ற கவிஞரும், நாடக ஆசிரியருமான ஷேக்ஸ்பியர் இவ்வுண்மையை “உலகம் ஒரு நாடக மேடை” என்று எழுதுகிறார். நமது பங்கினை நாம் நடித்துவிட்டு, மறைந்துவிடுகிறோம். நாம் அலங்கரிப்பும், வேஷமும் தரித்துக்கொள்கிறோம். மக்கள் நம்மைக் கைதட்டிப் பாராட்ட வேண்டுமென விரும்புகிறோம். நாம் ஏற்றுக்கொள்ளப்பட ஏங்குகிறோம். ஒரு நபருடைய வாழ்வில் ஏற்படும் வெவ்வேறு நிலைகளை ஷேக்ஸ்பியர் இவ்வாறு எழுதுகிறார் – குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், பதின் இளம் பருவம், போர்வீரன்.... இறுதியில் – இரண்டாம் குழந்தைப் பருவம்! அவர் முதிர்வயதை இரண்டாம் குழந்தைப் பருவம் எனக் கருதுகிறார். அதாவது, வயோதிபருக்கு உதவி செய்ய எப்பொழுதும் ஒருவர் தேவைப்படும்போது குழந்தைப் பருவம் திரும்ப வருகிறது. ஆம்! வாழ்வு எங்கே ஆரம்பித்ததோ அங்கே திரும்புகிறது. என்னே சலிப்பான வாழ்வு! சாலொமோன் சலிப்படைந்து, ‘வாழ்க்கை இவ்வளவு தானா?’ என்று வியந்தான்.

2. நிகர லாபம் எதுவுமில்லை

சாலொமோன் ஞானம், செல்வம், மதிப்பு, அழகிய பெண்கள்

ஆகிய அனைத்தையும் பெற்றிருந்தான். ஆனால், எதுவுமே நிரந்தரமானது அல்ல என்பதை உணர்ந்தான். எல்லாமே காற்றைப் பின்தொடருவதைப் போலுள்ளது என்று கண்டான். நாம் காற்றைப் பின்தொடரலாம், ஆனால், நாம் அதைப்பிடிக்க முடியாது. அப்படியானால், ஏன் அதைப் பின்தொடரவேண்டும்? அதிக படிப்பிலே அதிக துக்கமுண்டு எனப் புலம்புகிறான். எனவே, அதிக அறிவைத்தேடி ஏன் ஓட வேண்டும்? இவ்வுலகில் ஏதேனும் நிலைத்திருக்குமா என்று சந்தேகித்தான். சாலொமோன் உயிர்வாழ்வோரிடம், துக்கவீட்டுக்குச் சென்று ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுரை சொல்கிறான். விருந்துகளுக்கும், குடும்ப விழாக்களுக்கும் செல்லவேண்டாம். அங்கு எல்லாமே அழகாகவும், பகட்டாகவும், நிரந்தரமானதாகவும் தோன்றும், ஆனால் துக்கவீட்டில் நம் முடிவைக் குறித்துச் சிந்திப்போம் என்று கூறுகிறான்.

மேன்மைகள் விரைவில் மறக்கப்பட்டுவிடும் என்று சாலொமோன் கண்டறிந்தான். மனிதனின் மகிமை மங்கிவிடும், மிகச் சிறப்பான செயல்கள்கூட அடுத்த தலைமுறையினருக்கு கேள்விக்குரியதாகிவிடும். ஆகையால் "மேன்மை" அடைவதால் என்ன பயன்? மனிதன் சம்பாதிக்கும் செல்வம் பிறருடைய கைக்கு மாறிவிடும். இவ்வுலகில் நாம் தனியாகப் பிறந்தோம். இவ்வுலகைவிட்டுத் தனியாகச் செல்வோம். நமக்குச் சொந்தமானது என்று எதுவும் இராது. மக்கள் நமக்காக அழலாம், சில நாட்கள் துக்கிக்கலாம், பின்னர் மறக்கப்பட்டுவிடுவோம். இவ்வுண்மைகள் சாலொமோன் ராஜாவைக் கவலைக்குள்ளாக்கியது.

அவன் மேன்மையையும் செல்வாக்கையும் குறித்து சிந்தித்தபோது, மனிதனது சாதனைகள் பெரும்பாலும் பொறாமையை அடிப்படையாகக் கொண்டதே என்றுணர்ந்தான். பிரயாசப் படுகிறவன் ஒருவன் அனுபவிக்கிறவனோ மற்றோருவன். ஒருவனது வெற்றி இன்னொருவனின் தோல்வியில் முடிவடைகிறது. ஒருவனின் மகிழ்ச்சி இன்னொருவனுக்கு துக்கத்தை விளைவிக்கிறது ஒரு வியாபாரத்தில் லாபம் இன்னொரு வியாபாரத்துக்கு நஷ்டத்தைக் கொண்டுவருகிறது. **மனிதன் வாழ்நாள் முழுவதும் ஒரு "முக்கிய நபராக" மாறப் பாடுபடுகிறான். இறுதியில் "முக்கிய நபராக" மாறுவதற்குப் பதிலாக "முற்றும்பூஜியமாய்" மாறியிருப்பதைக் கண்டறிகிறான்.**

ஒலிம்பிக் விளையாட்டுகளில் தங்கம் வென்றவர்கள் "ஒலிம்பிக்கின் பின்சோர்வு" (Post-Olympic Depression) என்ற வியாதியினால் பாதிக்கப்படுகின்றனர். இத்தீரச்செயலைச் சாதிக்க அவர்கள்

மிகக் கடினமாக உழைத்தார்கள். அந்தச் சிகரத்தை அடைந்தபின் மேலும் ஏறுவதற்கு வேறு சிகரம் இல்லாததினால் வெறுமை, உணர்வினால் வாதிக்கப்படுகின்றனர்.

1972 ஒலிம்பிக் விளையாட்டுகளில் தங்கம் வென்ற ஷேன் கௌல்ட் *(Shane Gould)* அவளது அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறாள்: "அது அதி உயரமான மலை உச்சிக்குக் எடுத்துச் சென்று, பின் ஒருபோதும் அங்கு செல்ல முடியாதபடி கீழே தள்ளபட்டதைப் போல் இருந்தது".

மகா அலெக்சாண்டரது அனுபவமும் இதுதான். மேலும் வெற்றிபெற வேறே உலகம் இல்லையே என அவன் கதறியதாகக் கூறப்படுகிறது. எனவேதான் ஞானியாகிய அரசன் "மாயை! மாயை! எல்லாம் மாயை!" என்று புலம்பினான்.

ஆனால், "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி னாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன?" (மாற் 8:36) என்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் சாலொமோனுக்குத் தெரியாது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல் எந்த லாபமும் கிடையாது. நமக்காக அனைத்தையும் ஈந்த இரட்சகரது அன்பின் உறவின்றி வாழ்வு முற்றிலும் மாயையாக மற்றும் அறிவீனமானதாகத்தான் இருக்கும். நாம் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தியிருக்கலாம். ஆனால், கிறிஸ்து இல்லாவிடில் எல்லாம் வீண்தான். நாம் பல முனைவர் பட்டங்களைப் பெற்றாலும், கிறிஸ்துவை அறியாமலிருந்தால், நாம் "படித்த முட்டாளாக" இருப்போம். நமக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருக்கலாம், ஆனால், கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசியாவிடில், நாம் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் பாவிகள்தான். **நாம் இவ்வுலகில் ஆட்சி செய்கிறவர்களாயிருக்கலாம், ஆனால், கிறிஸ்து இல்லையெனில் நித்தியத்தில் நாம் பரம ஏழைகளாக இருப்போம்.**

நீங்கள் எந்த சாதி, இனம், மதம் அல்லது தேசத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் **உங்களுக்குக் கிறிஸ்து தேவை என்பதை நினைவில் வையுங்கள்.** நான் எந்த மதத்தையும் குறித்து

எழுதவில்லை, தேவ மனிதராகிய இயேசுகிறிஸ்து என்ற நபரைக் குறித்து எழுதுகிறேன்.

3. நீதி இல்லை

சாலொமோனுக்கு நீதியைக் குறித்த உணர்வு அதிகமாயிருந்தது. அவன் சுத்த மனச்சாட்சியுடன் இஸ்ரவேல் மக்களை நியாயந்தீர்க்க வேண்டுமென மிகவும் ஆசைப்பட்டான். ஆனால், வாழ்க்கையைப் பார்த்தபோது, வாழ்க்கையின் பல பகுதிகளை அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. முதலாவதாக, தேவன் இவ்வுலகில் பாடுகளை ஏன் அனுமதித்தார் என்பதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. தேவன்மீது அவனுக்கிருந்த விசுவாசம் அசைக்கமுடியாததாயிருந்தது. எனினும், அவன் தேவனிடமிருந்து எதிர்பார்த்த பதில்கள் கிடைக்கவில்லை. அவர் நீதியின் மற்றும் சத்தியத்தின் தேவன் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால், அவர் ஏன் சூரியனின் கீழே தீங்கை அனுமதிக்கிறார்? ஏன் ஏழை மக்கள் எப்போதும் பாதிக்கப்படுகிறார்கள்? ஏன் நல்லவர்களுக்குத் தீங்கு விளைகின்றது? அவனது நியாய உணர்வின்படி நல்லவர்களுக்கு நன்மை நடக்க வேண்டும், தீயவர்களுக்குத் தீங்கு நிகழவேண்டும். ஆனால் நல்லவர்களுக்குத் தீங்கும், தீயவர்களுக்கு நன்மையும் நடக்கும்போது அவன் குழப்பமடைந்தான். இவை போன்ற பல கேள்விகள் மன்னன் சாலொமோனின் மனதை குழப்பின.

அவன், செல்வத்தைக் குறித்தும் ஆச்சரியப்பட்டான். ஒரு மனிதன் கடினமாக உழைத்துப் பணம் சம்பாதிக்கிறான். பணம் பெருகும்போது, அதை அனுபவிக்கிறவர்களும் பெருகுகிறார்கள். கடினமாக உழைத்துக் கிடைத்த பணத்தை அவனே அனுபவிக்க முடியாத சூழலுக்குத் தள்ளப்படுகிறான்.

மனிதன் பணம் ஈட்டுவதற்காகக் கடினமாக உழைக்கிறான். அவன் வீட்டுக்குத் தாமதமாக வருகிறான், மனஅழுத்தத்திற்குள்ளாகிறான், நோய்வாய்ப்பட்டு அவனது காலத்திற்கு முன்னதாகவே மரிக்கிறான். அவன் சேகரித்த செல்வம் யாவும் இன்னொருவருக்குக் கொடுக்கப்படுகிறது. சாலொமோன் இவ்வுண்மையைக் குறித்து ஆச்சரியப்பட்டான்.

மேன்மையும் ஞானமும் மிகுந்த மன்னன் சாலொமோன் கேட்ட கேள்விகளையே இன்றும் பலர் கேட்கின்றனர். ஒருநாள் சாலொமோனிலும் பெரியவர் ஒருவர் வந்து, வாழ்வின் வரையறையை மாற்றுவார் என்பது அவனுக்குத் தெரியாது. அவனுக்கு

இயேசுகிறிஸ்துவைத் தெரியாது, அவருக்கு நிகழ்ந்ததும் தெரியாது. **பூமியில் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதுதான்.** அந்த மிகப்பெரிய அநீதி தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதனால், இப்பொழுது நாம் கலங்கித் தவிக்கும் நேரங்களில் நமக்கு எத்தனை பெரிய ஆறுதல்! இயேசு கிறிஸ்துவே நமது முன்மாதிரி. அவர் சிலுவையின் பாதையைத் தெரிந்துகொண்டார், சாபத்தின் அடையாளத்தை ஆசீர்வாதத்தின் அடையாளமாக மாற்றினார். மனுக்குலத்தைப் பாவத்தண்டனை யினின்று இரட்சிக்கும் மாபெரும் நன்மைக்காக, அநீதியைச் சகித்தார். மனிதரின் பாடுகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்குக் கிறிஸ்துவின் சிலுவையில் போதுமான பதில் உண்டு. **இயேசு கிறிஸ்துவைத் தவிர்த்து வேறே பதில்கள் இல்லை. அவரிடம் நாம் திரும்ப வேண்டும். கிறிஸ்து இயேசுவை மட்டுமே நாம் தேட வேண்டும். நமது எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைக்காமலிருக்கலாம்; ஆனால், அவரே பதில். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமானவர்.**

4. வாழ்வில் திருப்தி இல்லை

சாலொமோன் அனுபவித்த இன்பங்கள் அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவன் கண்கள் இச்சித்தவைகள் ஒன்றையும் அவன் தடை பண்ணவில்லை. இருப்பினும், எதுவும் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை என்றறிந்தான். எவ்வளவு அதிகமாய் அனுபவித்தானோ அவ்வளவு அதிகமாய் இன்னும் ஆசைப்பட்டான். **ஓர் இன்பத்தினின்று இன்னொரு இன்பத்திற்குச் சென்றும் கூடுதல் வெறுமையையே உணர்ந்தான்.** இது இன்னும் பரிதாபமானது என்று கண்டான். அவனது ஆழ்ந்த தேவைகளைப் பெண்கள் பூர்த்தி செய்வார்கள் என்றெண்ணிப் பல பெண்களை மணந்தான். ஆனால் அவனது ஆசைகள் பூர்த்தியாகவில்லை என்பதையறிந்தான்.

மனிதனால் மேற்கொள்ள இயலாத, மனதுக்கு மனநிறை வளிக்காத ஆசைகளை நிறைவேற்ற இன்றைய உலகம், மதுபானம், களியாட்டுகள் போன்றவற்றால் திருப்தியடையலாம் என்று அனுபவித்து மேலும் திருப்தியற்ற நிலையையே அடைகின்றது. இந்த மாய வாழ்விற்கு முடிவில்லை. “இந்தத் தண்ணீரைக் குடிக்கிற வனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்” (யோவா 4:14) என்று இயேசு சொன்னதை நினைவுகூருங்கள்.

இயேசு சமாரியப் பெண்ணுடன் உரையாடுகையில் இந்த வார்த்தைகளைச் சொன்னார். அவள் ஐந்து புருஷர்களுடன்

வாழ்ந்தும், வாழ்வு மனநிறைவற்றிருந்தது. இதுதான் முழு உலகமும் தரும் இன்பங்களின் விளைவு.

ஒரு சுற்றுலாவுக்குச் சென்றுவந்த பின்னர் ஒரு திரைப்படத்தைப் பார்த்த பின்னர், பாவஞ்செய்த பின்னர் உங்கள் உணர்வுகள் எப்படியிருந்தது?

நீங்கள் மனநிறைவு பெற்றீர்களா?

செயல்படுமுன் உணர்ச்சிவசப்படுகிறோம், செய்தபின் தளர்ச்சியடைகிறோம். உணர்ச்சிவசத்துடன் நுழைகிறோம், சோர்வுடன் வெளியேறுகிறோம். இதுதான் நீங்கள் விரும்பியதா? சிந்தியுங்கள்!

"கூடுதல் தாகம், கூடுதல் பசி" என்பதுதான் உலகம் நமக்களிக்கும் பரிசு. நமது இருதயங்களிலுள்ள ஆழ்ந்த பசியைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே தீர்க்கமுடியும்.

இயேசு சொல்வதைக் கவனியுங்கள்: "ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோ 6:35).

நாம் அவரை "அப்பா, பிதாவே!" என்றழைக்கும் தெய்வீக உறவைத் தரவே, தேவன் தமது ஒரே பேறான குமாரன் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் மரிக்கும்படி அனுப்பினார். காணக்கூடாத தேவனுடன் கொள்ளும் உறவு நமக்கு ஆழ்ந்த திருப்தியை அளிக்கும். **இயேசு கிறிஸ்துவுக்குள் மட்டுமே நமது ஆழமான வாஞ்சைகள் நிறைவேற முடியும். நம் ஒவ்வொருவரது இருதயத்திலும் இறை வடிவான வெற்றிடம் உள்ளது; இதை இறைவன் மட்டுமே நிரப்ப முடியும். நமது இருதயங்கள் அவருடன் அன்பின் உறவு கொள்ளும்படியாக அமைக்கப்பட்டுள்ளன.** எவ்வளவு சீக்கிரம் இதை அறிகிறோமோ அவ்வளவாக நமது அதிருப்தி குறைந்து விடும். அவர் மட்டுமே நமக்கு நிலையான சமாதானத்தையும், நித்திய வாழ்வையும் தரமுடியும்.

இன்றைய அதிவிரைவான வாழ்வில் சத்தியத்தைக் குறித்துச் சிந்திக்க மக்களுக்கு நேரமில்லை.

வாழ்வில் முக்கியமானது எது?

நித்தியமானது எது?

நமக்குத் திருப்தியை அளிப்பது எது?

இவை வாழ்வைக் குறித்ததான முக்கிய கேள்விகள் ஆகும். எப்படியும் ஒருநாள் இக்கேள்விகளை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

சாலொமோன் இயேசுவின் முதலாம் வருகைக்கு முன்பாகப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்தவன். வாழ்வின் அர்த்தத்தைத் தேடின அவனுக்குள் ஏராளம் கேள்விகள் எழுந்தன. அவனது பல கேள்விகள் பதிலின்றி இருந்தன. அக்கேள்விகளுக்கு அவனது ஞானத்தால் பதில் காணமுடியவில்லை. இருப்பினும், அவன் எவ்வளவு தெளிவாகத் தனது புத்தகத்தை முடிக்கிறான் என்பதைக் கவனியுங்கள். "காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" (பிர 12:13,14).

அத்தியாயம் 5

எருசலேமே! எருசலேமே!

எருசலேமுக்கான கதறல்!

"அவர் (இயேசு) சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்" லூக் 19:41

வரலாற்றிலேயே தேவன் ஒரு நகரத்தைத் தெரிந்தெடுத்திருப்பாரானால், அது எருசலேம் தான். அது தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நகரம். வேதத்தில் நெடுகவே தேவன் மனிதரைத் தெரிந்தெடுப்பதைக் குறித்து வாசிக்கிறோம், ஆனால், எருசலேமுக்குத் தெய்வீக ஆதரவு இருந்ததைக் காண்கிறோம். அது பரிசுத்த நகரம் என அழைக்கப்பட்டது (ஏசா 52:1), கர்த்தருடைய நகரம் என்று சொல்லப்பட்டது (ஏசா 60:14).

தேவன் எருசலேமைத் தெரிந்துகொள்ளக் காரணம் என்ன?

1 இரா 14:21 - "கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேம்"

தேவன் தமது நாமத்தை அதற்குத் தரிப்பதற்காக எருசலேமைத் தெரிந்துகொண்டார். அது நீண்ட காலத்துக்கு முன்னரே மோசேயினால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது (உபா 12:11). தாவீது தனது ராஜ்யத்தின் தலைநகராக எருசலேமை ஏற்படுத்தினபொழுதுதான் அதற்கு முக்கியத்துவம் வந்தது. எனவே அது தாவீதின் நகரம் எனப் பட்டது (2 சாமு 5:6,7). தேவன் இஸ்ரவேலர் மத்தியில் வாசஞ்செய்கிறார் என்பதற்கு அடையாளமான உடன்படிக்கைப் பெட்டியை தாவீது எருசலேமுக்குக் கொண்டுவந்தான். தேவனது இருதயத்துக்கு ஏற்ற மனுஷனாகிய அவன் கர்த்தருக்கு ஆலயத்தையும் கட்ட விரும்பினான்; கர்த்தரோ சாலொமோன்தான் அதைக் கட்டுவான்

என்றறிவித்தார். சாலொமோன் ராஜாவின் நாட்களில் தேவாலயம் கட்டப்பட்டாலும், தேவாலயத்தில் ஆராதிப்பதற்கான விரிவான விவரங்களை தாவீது ராஜா கொடுத்திருந்தான். எனவே, அரசியல் மையம் இஸ்ரவேலர் அனைவருக்கும் மத மையமாக மாறிற்று.

எருசலேமின் பாவங்கள்

எசேக் 16:15 – "நீயோவென்றால் உன் அழகை நம்பி, உன் கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடந்து, வழிப்போக்கரில் உனக்கு நேர்பட்ட யாவரோடும் வேசித்தனம் பண்ணினாய்".

எருசலேம் ஓர் உண்மையற்ற மணவாட்டியைப் போலிருந்தது. தேவன் அவளைத் தெரிந்துகொண்டார். அவர் அவளுக்கு அழகைக் கொடுத்தார், அதனால் அவள் பிரசித்திபெற்றாள். ஆனால் ஐயோ! அவள் தன் அழகை நம்பி மேட்டிமையானாள். அவள் தனது நேசரை விட்டுப் பிரிந்து, அந்நியரை இச்சித்தாள். எருசலேம் தேவனைப் புறக்கணித்து, அவரது உடன்படிக்கையை மீறினாள். தேவனது இதயத்தை நொறுக்கினாள்.

எருசலேம் வீதிகளில் உண்மை காணப்படவில்லை (எரே 5:1). ஒவ்வொருவரும் சந்தர்ப்பவாதிகளாய் மாறினர். பொய் பேசுதல் சாதாரணமாகிவிட்டது. ஊழல் அதிகாரிகளின் வாழ்வாதாரமாக இருந்தது. அந்த அழகான நகரம் தேவனது பார்வையில் அருவருப்பானதாக மாறியது. எருசலேம் விக்கிரகாராதனை யினால் நிறைந்தது (எரே 11:13). பரிசுத்த நகரத்தில் குற்றமற்ற ரத்தம் சிந்தப்பட்டதால், அது கறைப்பட்டுப் போயிற்று. தேவன் கோபமடைந்தார். ஆயினும் அவர் தெரிந்துகொண்ட எருசலேமை அவரால் எப்படி புறக்கணிக்க முடியும்? அவர் அப்படிச் செய்வாரா?

எருசலேமுக்குத் தீர்க்கதரிசிகள்

ஓசியா 11:8 – "எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப் போலாக்குவேன்? உன்னை எப்படிச் செபோயீமைப் போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது".

தேவன் எருசலேமைத் திரும்பவும் தமக்காக ஆதாயப்படுத்த விரும்பினார்.

தன்னுடைய பாவங்கள் தன்னை இவ்வளவு மோசமாக

பாதிக்கும் என்று எருசலேமாகிய அவள் உணரவில்லை. ஏதாகிலும் செய்யப்படவேண்டும். எருசலேம் தண்டனைக்குட்படக்கூடாது. தேவன் எருசலேமின்மேல் மனதுருக்கம் கொண்டார். எனவே, தேவன் தமது தீர்க்கர்களை அனுப்பினார்.

தீர்க்கதரிசிகள் எருசலேமுக்கு வந்து, மனந்திரும்புதலின் செய்தியை அறிவித்தனர். அவர்கள் தேவனுக்கு கீழப்படிவதை வலியுறுத்தினர். அவர்கள் தேவனது பரிசுத்தத்தை எதற்காகவும் விட்டுவிடாமலிருக்கப் போதித்தனர். அவர்களது செய்திகள் இருளை ஊடுருவிச் செல்லும் அக்கினி ஒளிக்கற்றையாயிருந்தது.

அங்கு ஓர் உயிர்மீட்சி வரவேண்டும் அல்லது ஓர் அடக்க ஆராதனை நடக்கும்.

எருசலேமில் நடந்தது என்ன?

அங்கே ஏதேனும் எழுப்புதல் ஏற்பட்டதா? ஏதேனும் மனந் திரும்புதல் நிகழ்ந்ததா? ஏதேனும் குற்றவுணர்வு ஏற்பட்டதா?

இல்லை! தேவன் அனுப்பிய தீர்க்கதரிசிகளுக்கு எருசலேம் என்ன செய்தாள் என்று உங்களுக்குத் தெரியுமா?

லூக் 13:33,34 – "இன்றைக்கும் நாளைக்கும் மறு நாளைக்கும் நான் நடமாட வேண்டும்; எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்துபோகிறதில்லை... எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக, நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று".

எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்துபோகிறதில்லை. என்னே விசித்திரமான செய்தி! தேவனது நகரம்; தேவன் தெரிந்தெடுத்த நகரம்; இப்பொழுது அவரது தூதுவர்களைப் புறக்கணித்தது மட்டுமல்ல, அவர்களைக் கல்லெறிந்து கொன்றது.

தேவன் இன்னும் ஒரு வாய்ப்பளித்தாரா?

இல்லை! அவர் எருசலேமைப் புறக்கணித்தார். அதற்குமேல் அவரால் எருசலேமின் பாவங்களைச் சகிக்க முடியவில்லை. தேவன் எருசலேமின்மீது நியாயத்தீர்ப்பை அறிவித்தார்.

எசேக் 16:39-42 - “உன்னை அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் உன் மண்டபங்களை இடித்து, உன் மேடைகளைத் தரையாக்கிப்போட்டு, உன் வஸ்திரங்களை உரிந்து, உன் சிங்கார ஆபரணங்களை எடுத்துக்கொண்டு, உன்னை அம்மணமும் நிர்வாணமுமாக விட்டுப்போய், உனக்கு விரோதமாக ஒரு கூட்டத்தைக் கொண்டுவந்து, உன்னைக் கல்லெறிந்து, உன்னைத் தங்கள் பட்டயங்களால் குத்திப்போட்டு, உன் வீடுகளை அக்கினியால் சுட்டெரித்து, அநேக பெண்களின் கண்களுக்கு முன்பாக உன்னில் நியாயத்தீர்ப்புகளைச் செய்வார்கள்; உன் வேசித்தனத்தை ஒழியப்பண்ணுவேன்; நீ இனிப் பணையங் கொடுப்பதில்லை. இவ்விதமாய் என் எரிச்சல் உன்னை விட்டு நீங்கும்படி, நான் என் உக்கிரத்தை உன்னில் ஆறப்பண்ணி, இனி கோபமாயிராமல் அமருவேன்.”

தேவன் எருசலேமையும் அதில் வாழ்ந்த அனைவரையும் தள்ளிவிட்டார். நகரம் அழிக்கப்பட்டது. தேவாலயம் எரிக்கப்பட்டது. பொய் மார்க்கங்கள் தூள் தூளாகி விழுந்தன. எருசலேம் இப்பொழுது தேவனுடைய நகரமல்ல, பாபிலோன் என்ற இன்னொரு துன்மார்க்க நகரத்தால் பிடிக்கப்பட்டது.

அங்கே எரேமியா என்றொரு மனிதன் இருந்தான். தேவனது இதயத்துக்கு அருகில் இருந்த அவன் அவரது கதறலைக் கேட்டான். தேவனது கதறல்கள் அவனது கதறல்களாய் மாறின. தேவனது பாரம் அவனது பாரமாக மாறியது. அவன், “எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர்சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதாயிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்?” (புலம் 2:13) என்று புலம்பினான்.

இக்காரியங்களையெல்லாம் முன்னறிந்த இன்னொரு தீர்க்கன் இருந்தான். ஏசாயா பின்வருமாறு கூறுகிறான், “கர்த்தாவே, அதிகமாய்க் கடுங்கோபங் கொள்ளாமலும், என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக் கொள்ளாமலும் இருப்பீராக; இதோ, பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்களே. உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தரமாயின; சீயோன் வனாந்தரமாயிற்று; எருசலேம் பாழாய்க்கிடக்கிறது. எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த பரிசுத்தமும் மகிமையுமான எங்களுடைய ஆலயம் அக்கினிக்கு இரையாகி, இன்பமான எங்களுடைய ஸ்தானங்களெல்லாம்

பாழாயின, கர்த்தாவே, இவைகள் இப்படியிருந்தும் அடக்கிக் கொண்டிருப்பீரோ? மவுனமாயிருந்து, அதிகமாய் எங்களைச் சிறுமைப்படுத்துவீரோ?" (ஏசாயா 64:9-12).

கர்த்தர் எருசலேமை என்றென்றும் தள்ளிவிடுவாரோ?

இல்லை! கர்த்தர் எருசலேமை என்றென்றும் தள்ளிவிடமாட்டார். அவர் அதை மீண்டும் தெரிந்தெடுப்பார்

சக 2:12 - "கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்து, திரும்பவும் எருசலேமைத் தெரிந்துகொள்வார்."

ஆனால் எருசலேம் தேவனது கற்பனைகளில் நிலைத்திருக்குமா? நெகேமியா மற்றும் எஸ்றா போன்றோர் அதைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முயன்றனர். ஆனால் அந்த எழுப்புதல்கள் நீண்ட நாட்கள் நிலைத்திருக்கவில்லை. திரும்பத் திரும்ப எருசலேம் பழைய வழியிலேயே சென்றது.

தேவன் எருசலேமைத் தள்ளிவிடவில்லை. ஆனால் எருசலேம் தேவனைப் புறக்கணித்தது. எருசலேம் என்ற வார்த்தைக்கு "சமாதானம் தங்குமிடம்" என்று பொருள். ஆனால் அந்நகரம் சமாதானப் பிரபுவாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவைத் தள்ளிவிட்டது. இதுவே எருசலேம் செய்த மிக மோசமான காரியம். அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தது. இதைவிடக் கூடுதலாக ஒரு நகரம் என்ன செய்ய முடியும்?

எருசலேமுக்கு இன்னும் நம்பிக்கை உண்டா? இரத்தப் பிரியரான மக்கள் கூட்டம், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" (மத் 27:25) என்று கூச்சலிட்டது. தேவமைந்தனின் இரத்தப்பழி ஒரு சந்ததியின்மேல் இருப்பது என்பது சாதாரண காரியமல்ல.

இயேசு இஸ்ரவேல் பெண்களிடம் அவருக்காக அழாமல் அவர்களுடைய சொந்தப் பிள்ளைகளுக்காக அழும்படி சொன்னார் அல்லவா? (லூக் 23:28). சரித்திர பக்கங்களில் இஸ்ரவேலர் பட்ட வேதனைகளையும் துன்பங்களையும் நாம் காண முடிகிறது. உதாரணமாக ஜெர்மனி தேசத்தில் தோன்றிய ஹிட்லர் மட்டுமே இரண்டாம் உலகப் போரின்போது சுமார் 20 லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தான்.

மறுபடியும் எருசலேம்

வெளி 21:2 - "யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய

பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது."

எருசலேம் கர்த்தருக்கு இத்தனை தீய காரியங்களைச் செய்திருந்தும், தேவன் அவளைத் (அதைத்) தள்ளிவிடவில்லை. தேவன் அவளைத் (அதைத்) திரும்பவும் மன்னித்து, அவளைப் (அதைப்) புதுப்பிப்பார். எருசலேமிலிருந்து தான் சபை உருவானது. அவர்கள் தம்மை அறியவேண்டுமென அவர் ஆவலாயிருக்கிறார். தேவன் தமது மக்களை மீண்டும் ஒருமுறை சந்திப்பார். ஒரு புதிய எருசலேம் தோன்றும்.

அவரது அன்பு ஒருபோதும் மாறாதது. அவர் இன்னும் அழுகிறார்!

அத்தியாயம் ௬

ஒரு விதை அழைக்கிறது

ஒரு விதையின் கதறல்

"கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்"
- யோவான் 12:24

இந்தியாவின் தென் ஒடிஷா மாநிலத்தில் கடினமாக உழைத்த ஆசீர்வாத இளைஞர் இயக்க சுதேச மிஷனரி ஒருவரது வாழ்வும் ஊழியமும்.

ஜிட்கு சான்தா தென் ஒடிஷாவில் பென்ட்ரசாப்பர் என்ற ஓர் உள் கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு பிறந்தார். பொதுவாக, தென் ஒடிஷாவிலுள்ள கிராமங்களை வனப் பகுதிகளில் குடிசைகளாகக் காணலாம். 1993ல் உமர்கோட் மிஷனிலிருந்து நமது மிஷனரிகள் பென்ட்ரசாப்பரைச் சந்தித்தபோது, ஜிடுகு தேவனுடைய வார்த்தைகளை வாஞ்சையுடன் கேட்டார். அவர் சுவிசேஷச் செய்தியில் மிக அதிக ஆர்வம் காட்டினார். அவர் முறை யாகப் பள்ளியில் பயிலாதிருந்தும், நமது மிஷனரிகள் ஆரம்பித்த "இரவுநேரப் பள்ளி" மூலமாக ஒரியா மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பினார். அப்பள்ளியில் தன் பெயரைப் பதிவு செய்தார். பின்னர் அவ்வாண்டிலேயே அவர் இரட்சிக்கப்பட்டு, திருமுழுக்கும் பெற்றார்.

இரட்சிப்பின் மகிழ்ச்சியை அனுபவித்தபின் அவரை நிறுத்த முடியவில்லை. உடனடியாக அவர் தனது நண்பர்களுக்கும் உறவினர் களுக்கும் சாட்சி கூறி, அவர்களையும் கிறிஸ்துவிடம் கொண்டுவந்தார். சுதேச ஊழியராக வருவதற்கு முன்பே அவர் தூரமான இடங்களில் வியாபித்திருந்த அவரது உறவினர்களின் இல்லங்களுக்கு நமது

மிஷனரிகளுடன் சென்றார். ஊழியத்தில் அவரது உற்சாகத்தைப் பார்த்த மிஷனரிகள் 1995 ல் அவரை சுதேச ஊழியராக நியமித்தனர். அவர் இன்னும் மூன்று ஆண்டுகள் பணியாற்றி, பலரைக் கிறிஸ்து விடம் கொண்டுவந்தார்; அவரது சாட்சியின் மூலம் ஏற்கனவேயிருந்த சபையினரையும் பலப்படுத்தினார்.

கதம்பா

1998ல் அவர் ஒடிஷாவின் ராமகிரி பணிக்களத்துக்கருகில் கோதலிப்பொதர் என்ற கிராமத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். கோதலிப் பொதர் என்பது ஒரு சிறிய பழங்குடிக் கிராமம். அங்கிருந்த சபையின ருக்கு வெகு உத்தமத்துடன் தேவச்செய்தியை அறிவித்தார். கோதலிப்பொதர் தங்கியிருந்தபோது, காடுகளின் உட்பகுதியிலிருந்த கதம்பா என்ற கிராமத்தை அடிக்கடி சந்தித்து வந்தார். மூன்று ஆண்டுகள் அயராத உழைப்பின் பலனாகக் கதம்பாவில் ஒரு சபை நிறுவப்பட்டது. கதம்பாவின் ஆரம்பச்சபை, உள்ளூர் மக்களின் துன்புறுத்தல் அலையில் சிக்கி, எதிர்ப்புகளைச் சந்தித்தது. ஜிட்கு விசுவாசிகளுக்குத் துணை நின்று, அவர்களுக்குத் தன்னாலியன்ற உதவிகளையெல்லாம் செய்தார். அவர் தேவமக்களுக்காக அதிக உற்சாகம் காட்டினார்.

கதம்பா விசுவாசிகள் வளர்ச்சியடைந்து வசனத்திலும் ஆவியிலும் பலப்பட்டபோது, அவர்கள் இன்னும் உட்பகுதிகளிலிருந்த கிராமங்களில் சாட்சி கூறியதால், ராஜமுண்டா மற்றும் கஞ்சியகுடா ஆகிய இரு கிராமங்கள் கர்த்தரிடம் வந்தன. 2004ல் நானும் ஜிட்குவும் உட்பகுதியிலிருந்த ஒரு புது இடத்தைச் சந்தித்தோம். நாங்கள் முதன்முறை அப்பழங்குடிப் பகுதிக்குச் சென்றபோது, அங்கிருந்தோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டது ஜிட்குவை மிக உற்சாகப்படுத்தியது; அப்பழங்குடியினர் அவரது உறவினர் என்பதையும் அறிந்தார். உடனே அவர் அந்தப் புதுப்பகுதியில் ஊழியஞ் செய்ய விரும்பினார். அதற்குச் சாலைகள் இல்லை; தொடர்பு வசதிகள் இல்லை; சொல்லப்போனால் அந்த அடர்காடுகளினுள் எதுவுமேயில்லை. ஆனாலும் அவர் அங்கே போக விரும்பினார். அவரது

ஜோபாபொதர் சொந்த மக்கள்மீது அவருக்கிருந்த அன்பு மிகவும் ஆச்சரியமாயிருந்தது.

எனவே, அவர் ஜோபாபொதர் என்ற அந்தப் புது இடத்துக்குச் சென்று அவருக்கென, ஒரு சிறு குடிசையை அமைத்து, வாஞ்சையுள்ளோருக்குப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். விரைவில் மக்கள் கர்த்தரிடம் வந்தனர்; ஜோபாபொதுரில் ஒரு சபை நிறுவப்பட்டது. அங்கு ஆலயம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு பயங்கரமான உபத்திரவம் ஏற்பட்டது. அது ஜோபாபொதரின் பகுதிகளுக்கும் பரவியது. வன்முறைகள் மற்றும் கலகங்கள் பற்றிய செய்திகள் வந்தன. ஜோபாபொதரில் பகுதியளவு கட்டப்பட்டிருந்த ஆலயமும் இடிக்கப்பட்டது. **எல்லா மிஷனரிகளும் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டனர். ஜிட்குவையும் போகச் சொன்னார்கள். ஆனால் அவர் போக மறுத்தார்.** பல வாரங்கள் விசுவாசிகளுடன் காடுகளில் தங்கினார். ஜிட்குவின் வாழ்வில், அவர் மரணத்துக்கும் தன்னை அர்ப்பணித்திருந்தார். அவருக்கு “ஊழியஞ் செய்வது” என்றால் “மரணம்வரை ஊழியஞ்செய்வது” என்று பொருள். **அவர் நேர்மையான உள்ளம் கொண்ட ஓர் எளிய மனிதர்.** விசுவாசிகளைவிட்டுத் தனது பாதுகாப்பிற்காக ஓடுவதை அவமானம் என்றெண்ணினார். உலகத் தரங்களின்படி அவர் பட்டம் பெறாவிடினும், தேவனது பயிற்சிப் பள்ளியில் சிறந்த பட்டம் பெற்றிருந்தார். புது விசுவாசிகளுக்குத் தெளிவாகவும் எளிமையாகவும் போதிக்கும் விசேஷித்த வரத்தை அவர் பெற்றிருந்தார். அவர்களுக்கு ஆடை அணியவும், உடைகளைக் காயவைக்கவும், தட்டுகளைக் கழுவவும் கற்றுக்கொடுத்திருந்தார். விவசாயப் பணிகளைச் செய்வதிலும் உதவினார்.

அவர் ஜோபாபொதரில் ஊழியத்தை நிறைவேற்றியபின், துமாப்பொதர் என்ற இன்னொரு கிராமத்தில் அவரது பணியை ஆரம்பித்தார். திரளான மக்கள் கர்த்தரிடம் வந்தனர். இந்தியாவின் இன்னொரு மாநிலமாகிய சட்டிஸ்கார் எல்லையினருகில் துமாப்பொதர் உள்ளது; இதுவும் காடுகளின் உட்பகுதியாகும். ஒரு நதி இந்த எல்லைப்

துமாப்பொதர் பகுதிகளில் பாய்ந்து ஒடிஷா மற்றும் சட்டிஸ்கார் மாநிலங்களைப் பிரிக்கின்றது. அவ்விடத்தைச் சுற்றிலும் கம்பீரமான மலைகளும், ஆழ்ந்த காடுகளும் உள்ளன. அது "பூமியின் எல்லை முடிவுகள்" (அப் 1:8) போல் தோன்றும். ஆனால் நதிகளால் ஜிட்குவைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர் எல்லைகளையும் கடந்து, கிறிஸ்துவின் நற்செய்தி இன்னும் அறிவிக்கப்படாத தூரஇடப் பழங்குடியினராகிய துர்வா போன்ற பிரிவினர் மத்தியில் சபை நிறுவ முயற்சித்தார். அவரது வாழ்நாளில் துமாப்பொதரில் எப்படியாவது ஆலயம் கட்ட வேண்டுமெனப் பெரிதும் விரும்பினார். ஆனால், துக்ககரமாக, அவரது வாழ்நாளில் அதைச் செய்ய முடியவில்லை. அவரது அடக்கத்துக்கு மறுநாள் துமாப்பொதரில் ஆலயம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வீரச்செயல்களெல்லாம் முடியும் நாட்கள் நெருங்கின. அக்கினிமயமான போர்ச்சேவகனை அழைப்பதற்குப் பரம ஆணை வந்தது. அவர் தனது ஓட்டத்தை முடிக்கப் போகிறார். துமாப்பொதர்க்குப் பின் அவர், டோப்பாஜோடி என்ற இன்னொரு கிராமத்தில் பல ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினார். இதுவே அவரது இறுதி பணிக்களமும், இறுதி போர்க்களமும் ஆனது. அவருக்கு இரத்தப்புற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டு, தமிழ்நாட்டில், வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் (CMC) சேர்க்கப்பட்டார். சுகம்பெறும் வாய்ப்பு மிகக் குறைவாயிருந்தது. ஜிட்குவுக்கு இவ்வுண்மை அறிவிக்கப்பட்டபோது, அவர் எந்த சிகிச்சையும் எடுக்க வேண்டாமெனத் தீர்மானித்தார். அவர் மிஷன் தலைவர்களிடம், அவரது பிள்ளைகளைப் பொறுப்பெடுத்துக்கொள்ளவும், அவர்களுக்கு ஒரு சிறு வீடு கட்டிக்கொடுக்கவும் வேண்டிக்கொண்டார். CMC மருத்துவமனையை விட்டுச் சென்றபின் அவர் 15 நாட்கள் மட்டுமே உயிரோடிருந்தார். மரணத்தை மிகுந்த தைரியத்துடன் எதிர்நோக்கினார். நம்பிக்கையின்மையோ அல்லது சுய அனுதாபமோ எதுவுமே அவரிடம் காணப்படவில்லை.

மரியம், சாராள், எஸ்தர் ஆகிய அவரது மூன்று மகள்களைக் குறித்து மிகவும் பெருமிதப்படுவார். அந்நாட்களில் அவர்கள் விடுதிப் பள்ளிகளில் இருந்தனர். பிள்ளைகளுக்குக் கிடைத்த நல்ல படிப்புக்காக அவர் கர்த்தரிடம் நன்றியுணர்வுடனிருந்தார். மிஷன் தலைவர்களுக்கும் நன்றி செலுத்தினார். தற்போது அவரது பிள்ளைகள் கல்லூரியில் பயிலுகின்றனர்.

அவரது மனைவி இந்திரா சான்தா எப்பொழுதும் அவருடனேயே காணப்படுவார்கள்; அவருக்கு உறுதுணையாயிருந்து, அவர்களும் பெரும்பணியினைச் செய்திருக்கிறார்கள்.

ஜிட்கு சான்தா நமது ஊழியத்தின் முதற்கனி. நமது ஊழியத்தின் மூலமாக அவர் கர்த்தரிடம் வந்து, பின்னர் சுதேச ஊழியராக மாறினார். அவருக்கு ஊழியஞ் செய்வதில் மிகுந்த ஆர்வம்; ஆத்துமாதாயம் செய்வதே வாழ்வின் நோக்கம். ஆசீர்வாத இளைஞர் இயக்கம் மட்டுமே அவர் அறிந்த ஒரே குடும்பம்.

அவரது நிலைமை ஆபத்து என்றறிந்ததும் அவரை ஒடிஷாவில் சந்திக்க விரும்பினேன். உடனடியாகச் சென்னையை விட்டு ஒடிஷாவுக்குச் சென்றேன். ஆனால், நான் ஒடிஷாவைச் சென்றடையுமுன், ஒடிஷாவின் உள்பகுதிகளில் பல சபைகள் நிறுவிய சுதேச ஊழியர் ஜிட்கு சான்தா கர்த்தரிடம் சென்றுவிட்டார். அவரது அடக்க ஆராதனையில்தான் நான் கலந்துகொள்ள முடிந்தது. ஒடிஷாவின் எல்லா மிஷனரிகளும் அவரைச் சுமந்து சென்று, அவரது கிராமத்தில் அவரது வீட்டுக்கருகில் அடக்கம் பண்ணினோம். ஆனால், இது முடிவல்ல.

அவரது இறைப்பணியைக் குறித்துச் சிந்தித்தேன். அவர் ஆதாயப்படுத்தின விசுவாசிகளைச் சந்தித்தபோது, **பணி இப்போதுதான் துவங்கியுள்ளது** என்ற ஆழமான நிச்சயத்துக்குள் வந்தேன். தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த ஆயத்தமாயிருந்த நூற்றுக்கணக்கான ஜிட்குகளைக் கண்டேன். அவர் விட்டுச் சென்ற இறைப்பணி நிச்சயமாகவே தொடரும்.

ஜிட்குவின் வாழ்க்கையையும், இறைப்பணியையும் தியானித்த நாம், கர்த்தரை உத்தமமாய்ச் சேவிக்கவும், சோர்வின்றி அவருக்காய்ப் பணி செய்யவும், ஊதியமின்றி, நேசிக்கப் படாதவர்களாய், அறியப் படாதவர்களாய் அவருக்கென உழைக்கவும் நமது அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக்கொள்வோம்!

சகோதரன் ஜிட்கு சான்தாவின் கல்லறை

"மிஷனரிகள் புதைக்கப்படுவதில்லை;
விதைக்கப்படுகிறார்கள்."

அத்தியாயம் 7

குரல்கள்!

தேவையுள்ளோரின் கதறல்கள்

"கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி..." லூக்கா 7:13

நாம் எல்லா இடங்களிலும் வேதனை நிறைந்த மக்களைக் காண்கிறோம். தொழில் நுட்ப வளர்ச்சியும், தனிநபர் சுதந்திர வலியுறுத்தலும் ஏராளமான இதய வேதனைகளைக் கொண்டுவந்துள்ளன. புதிதாகப் பிறந்த பச்சிளங் குழந்தைகள் குப்பைத் தொட்டிகளில் எறியப்படுகின்றனர். சிறுபிள்ளைகள் கற்பழிக்கப்படுகின்றனர். இடைவிடாத சண்டைகள் நிறைந்த குடும்பங்களில் இளம் வயதினர் வளருகின்றனர். தம்பதியினருக்கு ஒருவருக்கொருவர் செலவழிக்க நேரமில்லை. முதியோர் பிள்ளைகளால் தனித்து விடப்படுகின்றனர். முன்னேறிவரும் நம் சமுதாயத்தில் ஏறக்குறைய ஒவ்வொருவரும் பாடனுபவிக்கின்றனர். ஒவ்வொருவரும் அழுகின்றனர்.

மறு பக்கம், மக்கள் பிறரது தேவைகளைக் குறித்து உணர்வின்றியிருப்பதைக் காண்கிறோம். நிலத்தின் மதிப்பு அதிகரித்துள்ளது; ஆனால், மனிதனின் மதிப்பு குறைந்துள்ளது. நம் நாட்டிலுள்ள எல்லா வாகனங்களுக்கும் கட்டாயக் காப்பீடு உண்டு; அனால், மனிதருக்கு அத்தகையதொன்றும் இல்லை. எத்தனை பரிதாப நிலையில் நாமிருக்கிறோம்.

நமக்குச் சாதிக்க இலக்குகள் உள்ளன; சந்திக்க காலவரையறைகள் உள்ளன; நிறைவேற்ற வாக்குறுதிகள் உள்ளன; பின்தொடரக் கனவுகள் உள்ளன; வாழ்வதற்கு ஒரு வாழ்க்கை உள்ளது. நம்மைச் சுற்றியுள்ள அனைத்து மக்களின் தேவைகளையும் நாம் சந்திக்க

முடியாவிடினும், காயப்பட்ட ஆத்துமாக்களின் பிரச்சனைகளைக் கேட்பதற்கு நாம் நேரம் கொடுக்க வேண்டும். இதற்காக நாம் சிறிது நேரம் இடைவேளை எடுத்துக்கொள்வோம். நமது செவிகளைத் திறந்து நம்மைச் சுற்றியுள்ள மக்களின் "குரல்களைக்" கேட்போம்.

இன்னும் பிறவாத ஒரு குழந்தையின் குரல்

"நான் பிறக்கும் நாளுக்காகக் காத்திருந்தேன்; ஆனால், அது ஒருபோதும் வராது என்பதை நானறியவில்லை. நான் ஒளியைக்காண எதிர்பார்த்திருந்தேன்; ஆனால், என் வாழ்வு இருளிலேயே முடிவடையப் போகிறது என்பது எனக்குத் தெரியாது. நான் உலகத்தைப் பார்க்க ஆசைபட்டேன். நான் மற்ற பிள்ளைகளைப் போல விளையாட விரும்பினேன். ஆனால் நான் பள்ளிக்கு ஒருபோதும் செல்ல மாட்டேன். நான் பள்ளிச் சீருடை அணிய மாட்டேன். நான் ஒருபோதும் வளர மாட்டேன். நான் ஒருபோதும் பட்டதாரியாக மாட்டேன். நான் திருமணம் செய்ய மாட்டேன். எனக்குப் பிள்ளைகளும் இருக்க மாட்டார்கள். எனக்கு எதிர்காலமே கிடையாது. ஐயோ! எனக்கு ஒன்றுமே கிடைக்காது! எனக்குத் தெரிந்ததெல்லாம் என் தாயின் கருவறை மட்டுமே. நான் வேண்டாமென்று அவர்கள் தீர்மானிக்கும்வரை என் தாய் எனக்கு உணவளித்தாள். நான் தவறுதலாய் வந்தவள் என்றார்கள். யாருடைய தவறு என்று எனக்குத் தெரியாது. நான் எனது தாயின் முகத்தைக் கூட பார்த்ததேயில்லை. நான் வெட்கத்துக்குரியவளாய் மாறுவேன் என்றார்கள். இவ்வுலகிற்கு நான் தேவையில்லை. எனவே, நான் கொலை செய்யப்பட்டேன்.

ஓர் அனாதைக் குழந்தையின் குரல்

என் பெற்றோர் என்னைத் தெருக்களில் விட்டுச் சென்றார்கள். சில நல்ல மனிதர் என்னை எடுத்து ஓர் அரசு காப்பகத்தில் சேர்த்தார்கள். இப்பொழுது நான் ஓர் அனாதை இல்லத்தில் இருக்கிறேன். எனக்குத் பெற்றோரின் அன்பைப் பற்றித் தெரியாது. நல்லவேளை, என் பெற்றோர் என்னைக் கொலை செய்யவில்லை. அவர்கள் "வாழ்க்கை" என்ற ஒன்றை எனக்கு ஈந்தார்கள். இந்த ஈவுக்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஆனால், வாழ்வில் நான் எப்படி முன்னேற முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் உண்கிறேன், உறங்குகிறேன், உடைகளைத் துவைக்கிறேன். வாழ்வு மிகவும் தனிமையாக உள்ளது. நான் நன்றாகப் படிக்க வேண்டும், கடினமாக உழைக்க வேண்டும். நான் அடிக்கடி

சோர்ந்து போகிறேன். எனக்குச் அதிக உற்சாகம் தேவை. எனக்கு அதிக உதவியும், ஆதரிப்பும் தேவை. எனது படிப்பைச் சில நல்ல மனிதர்கள் தாங்குகிறார்கள். எதிர்காலத்தில் நான் எப்படி இருப்பேன் என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

பதின்பருவப் பெண்ணின் குரல்

என் வீடு ஒரு நரகமாயிருந்தது. என் தந்தையும் தாயும் அடிக்கடி சண்டை போட்டார்கள். அவர்கள் என்னைப் புரிந்துகொள்ளவில்லை. நான் படிப்பிலும் சிறந்து விளங்கவில்லை. ஒரு வாலிபன் என்னை விரும்புவதாகச் சொன்னான். என் பெற்றோரை விட அவன் நல்லவன் என்றெண்ணினேன். அவன் அதிகம் படிக்காதவனாயிருந்தும் அவனை நம்பலாம் என நினைத்தேன். ஒருவேளை அவனுடன் வாழ்வு இன்னும் நன்றாயிருக்கலாம். என் பெற்றோர் இந்த உறவினை அங்கீகரிக்கமாட்டார்களென எனக்குத் தெரியும். எனக்கு வேறு வழியேயில்லை. நான் அவனுடன் ஓடிப்போகத் தீர்மானித்தேன். தோழிகளில் சிலர் எனது முடிவைக் குறித்து வருந்தினர். ஆனால், நான் வீடு என்ற நரகத்தில் இருப்பதைவிட வெளியில் இருப்பது நல்லது என்று எண்ணினேன். எனவே, நான் ஓடிப்போய் ஒரு புதுவாழ்வை ஆரம்பித்தேன். கொஞ்ச நாட்கள் எங்கள் புதுவாழ்வு பரலோகம் போலிருந்தது. ஆனால் எல்லாம் மாற ஆரம்பித்தன. நான் காதலித்த வாலிபன் என்மேலுள்ள விருப்பத்தை இழப்பதையறிந்து பயந்து நடுங்கினேன். அவனுக்கு வேறு பெண்களுடனும் தொடர்பு இருந்தது. நான் இப்பொழுது எங்கே போவேன்? யாரிடம் திரும்புவது, யாரை நம்புவது? என் பெற்றோர் என்னைத் திரும்ப ஏற்றுக்கொள்வார்களா? வாழ்வதை விடச் சாவதே மேல்."

ஒரு வயோதிகத் தந்தையின் குரல்

"நான் ஓர் அரசுப்பணியாளனாக இருந்தேன். நான் கடினமாக உழைத்து என் மகனுக்கும் மகளுக்கும் நல்ல கல்வியை அளித்தேன். அவர்கள் இப்போது நல்ல நிலையில் இருக்கிறார்கள். என் மகன் வெளிநாட்டிற்குச் சென்றான். என் மகள் 200 கி.மீ. தூரத்தில்தான் இருக்கிறாள். அவர்கள் இருவருக்கும் சொந்தக் குடும்பங்களும் எதிர்காலமும் உள்ளன. ஆனால், அவர்களது சூழ்நிலைகள், நான் அவர்களது வீட்டில் தங்குவதை அனுமதிக்கவில்லை. என் மகன் முதியோர் இல்லத்திற்குச் செல்லும்படி ஆலோசனை கூறினான். இது என் மனைவியின் மரணத்துக்குப்பின் நடந்தது. நான் என் மனைவி

யுடன் மிக அருமையான வாழ்க்கை நடத்தினேன். இப்பொழுது நான் முதியோர் இல்லத்தில் தனிமையில் வாடுகிறேன். என்னுடன் யாராவது பேசவேண்டுமென ஆசைப்படுகிறேன். சில நேரங்களில் பழைய நினைவுகள் வெள்ளம் போல் பாய்ந்து வரும். ஏனைய நேரங்களில் மரணம் வந்தால் நல்லது என்று ஏங்குகிறேன். எனது வாழ்வைத் தொடர கிரமமாக மருந்துகள் சாப்பிட வேண்டியுள்ளது. இத்தனை ஆண்டுகளுக்குப்பின், நான் வாழ்ந்த வாழ்க்கையில் ஏதேனும் பயனுண்டா என வியக்கிறேன்."

சோர்வடைந்த ஒரு மனிதனின் குரல்

"நான் நல்லதொரு வியாபாரம் செய்து வந்தேன். ஆனால், திடீரென விதி எனக்கெதிராக மாறியது. நான் மிகப்பெரிய நஷ்டத்தைச் சந்தித்தேன். நான் கடன் வாங்க வேண்டிய நிலைமை வந்தது. கடன் வாங்கியும் வியாபாரம் முன்னேறுவதாக இல்லை. வீட்டு வாடகையைக் கூட எங்களால் கொடுக்க முடியவில்லை. என் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்பட்டது. எனக்குக் கடன் கொடுத்தவன் வீட்டிலுள்ள பொருட்களையெல்லாம் வெளியே தூக்கி எறிய நாளைக்கு வருவதாகச் சொன்னான். அப்பொழுதுதான் நான் என் வாழ்வை முடித்துக் கொள்ளத் தீர்மானித்தேன். என் மனை வியும் அதையே நினைக்கிறாள். எங்கள் மதிப்பை இழப்பதைவிட மரணம் நலமாயிருக்கும். எனவே, நாங்கள் எங்கள் வாழ்வை முடித்துக்கொள்ளத் தீர்மானித்தோம். எங்கள் பிள்ளைகளை அனாதை களாய் விட்டுச் செல்ல நாங்கள் விரும்பவில்லை. எனவே, எங்கள் குடும்பத்தையே மாய்க்க நாங்கள் திட்டமிட்டோம்."

ஒரு விலைமாதின் குரல்

"அவர்கள் என் தகப்பனாருக்கு நல்ல வேலை தருவதாக வாக்குப்பண்ணினார்கள். எங்கள் கிராமத்துக்கு வந்த மனிதன், எங்கள் குடும்பத்துக்கு ஒரு பெருந்தொகையைக் கொடுத்தான். பின்னர், நான் ரயிலில் ஒரு பெரிய நகரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டேன். நான் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டுமென அவள் என்னிடம் சொன்னாள். "வீட்டு வேலைகள்" என்பதன் கருத்து என்னவென்று கொஞ்சமும் நான் அறியவில்லை. ஆரம்பத்தில் நான் தயங்கினேன். விபச்சார விடுதியில் தங்கியிருந்த என் தோழிகள் எனக்கு வேறு எந்த வழியும் இல்லை என்றார்கள். ஆண்கள் வந்தார்கள், போனார்கள். அவர்கள் என் உடலை விரும்பினார்கள். ஆனால் என்னிடம் அன்பு

பாராட்டவில்லை. இப்பொழுது அன்பின் உண்மையான அர்த்தம் எனக்கு மறந்துவிட்டது. வருடங்கள் உருண்டோடிவிட்டன. என் சரீர அழகு குறைந்து விட்டது. எனக்குப் பல வியாதிகள் உள்ளது. எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் ஒரு முறை தனது தகப்பனாரைக் குறித்துக் கேட்டான். என்னிடம் பதில் இல்லை. என் வாழ்வில் எனக் கென்று ஒருவரும் இல்லாததால் எனக்குப் பதில் தெரியாதது ஆச்சரியமல்ல.”

மரணத்தறுவாயிலிருக்கும் ஒரு புற்று நோயாளியின் குரல்

எனக்குப் புற்றுநோயிருக்கிறது என்று அவர்கள் கண்டறிந்ததும், நான் இந்த நல்வாழ்வு மையத்தில் விடப்பட்டேன். என்னை இங்கே விட்டுச் சென்றபின் என் மகன் என்னைச் சந்திக்க வரவில்லை. சிகிச்சை தரும் வேதனையைவிட தனிமையின் வேதனை கூடுதலாயிருக்கிறது. யாரேனும் என்னைப் பார்க்க வருவார்களா, எவரேனும் என்னுடன் பேச வருவார்களா என்று எதிர்பார்க்கிறேன். நான் எவருக்கும் எத்தீங்கும் செய்ததில்லை. கடவுள் ஏன் இப்படிப்பட்ட காரியத்தை எனக்கு அனுமதித்தார்? நான் உலகிற்குப் பாரமாக மாறிவிட்டேன். எனது காயங்கள் துர்நாற்றம் எடுக்கின்றன. என்னால் தூங்க முடியவில்லை, நான் ஓர் உதவாக்கரை. நான் விரும்புவதெல்லாம் மரணம் மட்டுமே.”

இடை நிகழ்வு

நான் ஒரு மிஷனரிதானா?

தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவன் ஒரு மிஷனரி.
நானும் தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவன்.
நான் ஒரு மிஷனரி.

ஆனால், புதிய ஏற்பாட்டு மிஷனரிகள் பவுலையும்
பேதுருவையும் பார்க்கும்போது, எனக்குப் புது சந்தேகங்கள்
எழ ஆரம்பித்தன. ஆதிகால மிஷனரிகள் வில்லியம்கேரி,
டேவிட் பிரெய்னார்ட் போன்றோரின் வாழ்வை நோக்குங்கால்,
என் சந்தேகங்கள் உறுதியாயின.
நான் ஒரு மிஷனரியல்ல.

வில்லியம் கேரி ஒரு மிஷனரி என்றால்,
நான் ஒரு மிஷனரி அல்ல.
வில்லியம் கேரி, இந்தியா வந்தார், திரும்பிப் போகவேயில்லை.
ஆனால், நான் அடிக்கடி என் சொந்த ஊருக்குச் செல்கிறேன்.
அவர் தன் மகனை இழந்தார், ஒத்துழைக்காத தன்
மனைவியுடன் சமாளித்தார்.

டேவிட் பிரெய்னார்டு ஒரு மிஷனரி என்றால்,
நான் ஒரு மிஷனரி அல்ல.
டேவிட் பிரெய்னார்டு மரிக்கவும் தன்னை அர்ப்பணித்திருந்தார்,
கிறிஸ்துவுக்காக ஓர் பழங்குடி இனத்தை ஆதாயப்படுத்தினார். மிக
இளம் வயதிலேயே தனது அற்புத இரட்சகருக்காக மரித்தார்.

ஹட்சன் டெய்லர் ஒரு மிஷனரி என்றால்,
நான் ஒரு மிஷனரி அல்ல.
அவருக்குச் சீனாவைக் குறித்த ஆத்தும பாரம் இருந்தது.
சீனாவின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் மிஷனரிகளை
அனுப்பினார், தனதருமைக் குழந்தைகளையும் மனைவியையும்
இழந்தார், அவர்களை அங்கேயே அடக்கம் செய்தார்.

அதோனிராம் ஜட்சன் ஒரு மிஷனரி என்றால்,
நான் ஒரு மிஷனரி அல்ல.
அதோனிராம் ஜட்சன் பணிக்களத்திலேயே தன் பிள்ளைகள் அனைவரையும் இழந்தார்; பல தடவைகள் சிறை சென்றார்.

நான் சுலபமும் சொகுசுமான வாழ்க்கை வாழ்கிறேன். நான் விரும்பும்போதெல்லாம் வீடு செல்கிறேன். எனக்கு ஒழுங்கான ஊதியம் உண்டு. நான் சிறையில் அடைக்கப்படவில்லை, நான் அடிக்கப்படவில்லை, என் உடல் நலனில் கவனமாயிருக்கிறேன். என் எதிர்காலத்தைக் குறித்துத் திட்டமிடுகிறேன். நான் நெடுநாள் வாழ விரும்புகிறேன்.

நான் ஆண்டவரிடம் கேட்டேன்,

"நான் ஒரு மிஷனரிதானா?"

"கர்த்தாவே, நான் அந்த ஆவிக்குரிய பெரியவர்களைப் போன்றவனல்ல,

உண்மையாகவே அப்படி ஒருவனாயிருக்க விழைகிறேன்.

பலவீனங்கள், அர்ப்பணிப்புக் குறைவு இருப்பினும்
நீர் என்னைப் பயன்படுத்துவீரா?"

மெல்லிய அமர்ந்த குரலில் அவர் சொன்னதைக் கேட்டேன்,
"மகனே, நீ செய்ய இயலாதவற்றைச் செய்ய நான் கூறவில்லை,
உன்னால் இயன்றவற்றைச் செய்யவே கேட்கிறேன்; எனக்குக்
கீழ்ப்படிந்து என்னைப் பின்பற்றிவா!"

எனக்குப் பலவீனங்கள், குறைகள் பல இருப்பினும் நான்
அவரால் அழைக்கப்பட்ட ஒரு மிஷனரி.

"பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம்." (2 சாமு 15:22)

இந்தியாவுக்கான ஒரு ஜெபம்

கர்த்தாவே, என் தேசத்தை ஆசீர்வதியும்! இந்தியாவுக்காக, அதன் அழகுக்காக, அதன் மலைகளுக்காக, பள்ளத் தாக்குகளுக்காக, அதன் நதிகளுக்காக, வனங்களுக்காக உமக்கு நன்றி. பரவியிருக்கும் அதன் பல்வகை மக்களை ஆசீர்வதியும்.

கர்த்தாவே, என் தேசத்தை ஆசீர்வதியும்! அதைத் தீங்குகளினின்றும், உள் மற்றும் வெளி ஆபத்துகளினின்றும் விலக்கிப் பாதுகாத்திடும். மக்கள் சமாதானமும் செழிப்பும் பெறுவார்களாக,

கர்த்தாவே, என் தேசத்தை ஆசீர்வதியும்! அதன் தலைவர்களை ஆசீர்வதியும். நாட்டைச் சரியான பாதையில் வழிநடத்த அவர்களுக்குக் கிருபையும் ஞானத்தையும் தாரும்.

கர்த்தாவே, என் தேசத்தை ஆசீர்வதியும்! அது உம்மை அறிவதாக; உமது ஒளி நாட்டின்மேல் பிரகாசிப்பதாக; நித்திய ஆசீர்வாதங்கள் வழிந்தோடுவதாக. ஆமென்!

- D.J

அத்தியாயம் 8

இந்தியாவை நேசிக்கிறீர்களா?

இந்தியாவின் கதறல்

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்"
2 நாளாகமம் 7:14

இந்தியா சிறந்த கலாச்சாரப் பண்பாடும், பல்வேறு மொழிகளும் கொண்ட நாடு. இது ஆன்மீக ஈடுபாடு கொண்ட நாடு. மூன்று முக்கிய மதங்களாகிய இந்து மதம், புத்த மதம் மற்றும் ஜைன மதம் ஆகியவை இங்கே தோன்றியவை. மக்கள் பக்தியுள்ளவர்கள்; இந்திய கலாச்சாரப்படி ஒருவரையொருவர் மதிக்க வேண்டும். இக்காரணத்தால்தான் பழங்கால மன்னர்கள் இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டினரை வரவேற்று உபசரித்தனர். பல ஆண்டுகளாக இந்தியாவை பல சிற்றரசர்கள் ஆண்டனர். இந்தியாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றிய மொகலாயர்கள் (Mughals) அதன் பன்முக கலாச்சாரத்தை புரிந்துகொண்டு அதை அப்படியே விட்டுவிட்டனர். இந்தியாவின்மீது ஐரோப்பியரின் படையெடுப்பு சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரப் பகுதிகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆங்கிலேயர் ஏனைய ஐரோப்பிய ஆதிக்கங்களை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றுவதில் வெற்றியடைந்தனர். அவர்கள் எளிதாக வியாபாரம் செய்வதற்காக ஆங்கில ஆட்சியின்கீழ் ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்க விரும்பினர். ஆனால், அவர்களது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் விளைவாக இந்திய விடுதலைப் போராட்டம் துவங்கியது; 15 ஆகஸ்ட் 1947-ல் நவீன இந்தியா பிறந்தது. ஆங்கிலேயருக்கு எதிரான பெரும்பாலான சுதந்திரப் போராட்டங்களை நடத்திய மகாத்மா காந்தி அவர்களுக்காகவும், உலகின் தலைசிறந்த அரசியல் அமைப்புகளுள்

ஒன்றினை இந்தியாவுக்கு அமைத்துக் கொடுத்த டாக்டர் பீம்ராவ் அம்பேத்கார் அவர்களுக்காவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்தியா – அதன் தற்போதைய போராட்டங்கள்

1947-ல் சுதந்திர இந்தியா உருவானதிலிருந்து, நாடு பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. கல்வி கற்றோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றில் நாம் முன்னேறியுள்ளோம். இன்றைய இந்தியா, உள்நாட்டு விண்வெளித் திட்டங்களைக் குறித்துப் பெருமையடைகிறது. இந்தியாவின் மொத்த வீட்டு உபயோகப் பொருட்களின் அளவு (GDP) அதிகரிப்பு, உலகின் பொருளாதாரத்தில் வேகமாக வளரும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மாற்றியுள்ளது. நவீன இந்தியா கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறினாலும், இந்தியர்களின் இருதயத்தில் உள்ள ஆன்மீகத் தேவையில் முன்னேற்றம் இல்லை. எப்படியாகிலும் முக்தி (இரட்சிப்பு) அடையவேண்டுமென்பதே ஒவ்வொரு பாரம்பரிய இந்தியரின் கதறல். இக்காரணத்தால்தான், நதிகள் மக்கள்வெள்ளத்தால் நிரம்பிவழிவதும், புன்னிய ஸ்தலங்களுக்கு கூட்டம் கூட்டமாக செல்வதும் காணப்படுகின்றன. வாழ்வின் பொதுவான அம்சங்களைத் தவிர, மேலான ஒன்றை மக்கள் தேடுகின்றனர். இந்த ஆன்மீக தேவைகள் அனைத்தையும் இயேசு மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

வாழ்வின் அர்த்தத்தைக் காண இயலாத மக்கள் தங்களையே மாய்த்துக்கொள்கின்றனர். உலகில் தற்கொலை அதிகமாயுள்ள நாடுகளில் ஒன்று இந்தியா. மட்டுமல்ல, இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்தில் மரிப்போரின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் கூடுதலாக உள்ளது. ஏழை – பணக்காரன் வேறுபாடு ஆபத்தான வேகத்தில் அதிகரிக்கின்றது; குற்றங்களின் எண்ணிக்கை உயருகின்றது. நாம் கல்வியறிவில் முன்னேறியிருந்தாலும், வேலையின்மை மிக மிக அதிகம். ஒழுக்கம் என்பது வளர்ந்துவரும்

புதுத் தலைமுறையினரால் மாற்றி வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் நமது பாரம்பரிய குடும்பக் கலாச்சாரத்தைத் தள்ளிவிட்டு நவீன கலாச்சாரத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் நல்லொழுக்கக் கல்வி மிகவும் குறைவுபட்டுள்ளது. மத்திய-கிழக்கு இந்தியாவிலுள்ள நக்சல் பிரச்னை (குடியாட்சியை விரும்பாத கலகக் கும்பல்) தேசீய ஒருமைப்பாட்டை அச்சுறுத்துகின்றது. மேலும், இயற்கைப் பேரழிவுகளினால் இந்தியாவில் பலர் உயிரிழக்கின்றனர்.

இந்தியா இப்படிப்பட்ட இயற்கைசீற்றங்களினாலும், ஒழுக்கக்கேடுகளினாலும், தற்கொலை மற்றும் விபத்துமரணங்களினாலும் தீவிரவாத இரத்தம்சிந்துதல்களிலும் சிக்கி கதறிக் கொண்டிருக்கிறது.

நமது தலைமுறையில் இந்தியா ஆசீர்வதிக்கப்படமுடியுமா?

இந்தியாவின் வடபகுதிகளில் 11 ஆண்டு காலம் சேவை செய்தபின், தேவன் என்னையும் என் மனைவியையும் தென்னிந்தியாவுக்கு வழிநடத்தினார். அது தீவிரமான இருதய ஆராய்ச்சி மற்றும் தற்பரிசோதனை நேரமாயிருந்தது. இறுதியில் நாங்கள் தெற்கே செல்லத் தீர்மானித்து, சென்னைக்கு வந்தோம். அந்நாட்கள் ஒன்றில் இன்றைய ஆசீர்வாத இளைஞர் இயக்கத் தலைவர் திரு. டிக்சன் அவர்களிடமிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. 1974-ல் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM) துவங்கிய "புராஜெக்ட் இந்தியா" ("Project India") என்ற திட்டத்தைக் குறித்துப் பேசினார். இத்திட்டத்தைப் பற்றி அறிய நான் மிக ஆவலாயிருந்தேன். இந்தியாவை எக்கிரயம் செலுத்தியேனும் ஆசீர்வதிப்பதற்காக தலைவர்கள் எடுத்த முயற்சி இது என்று அறிந்துகொண்டேன். 40 ஆண்டுகளுக்குப்பின் 2014-ல் இந்த செயல் திட்டத்தை புதியவடிவில் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டது. இதன் திட்டக் கூடுகைக்கு நானும் அழைக்கப்பட்டதில் மகிழ்ச்சி. நமது தலைமுறையில் இந்தியாவை ஆசீர்வதித்தல் என்ற எண்ணம் மிகவும் முக்கியமானதுதான். இருப்பினும் இத்தனை வேறுபாடுகள் நிறைந்த இந்தியாவை சந்திக்க முடியுமா என்று சந்தேகம் கொண்டேன். நமக்கு ஏராளமான மொழிகளும் கலாச்சாரங்களும் உண்டு (27 முக்கிய மொழிகள் மற்றும் 880 பிராந்திய மொழிகள்). "கர்த்தாவே, இது சாத்தியமா?" என்பதே எனது கேள்வி. நாம் வேறுபடுவது நமது கலாச்சாரங்களிலும், மதங்களிலும் மட்டுமல்ல; தங்கள் வம்ச வரலாற்றைப் பரிசுத்த தோமாவில் துவங்கும் மார்த்தோமா சபை முதல் நவீன பெந்தெகொஸ்தே சபையினர் வரை பல சபைப் பிரிவுகளை நாம் கொண்டிருக்கிறோம்.

கலாச்சார வேறுபாடுகள் மற்றும் உள்ளூர் நீதிநெறிமுறைகள் காரணமாக ஒரு மாநிலத்தில் செயல்படுத்தும் ஊழிய முறைகள் அருகிலுள்ள மாநிலத்தில் படுதோல்வியடைகின்றன. சில நேரங்களில் வடஇந்தியாவிலுள்ள தலைப்பாகை அணிந்த சீக்கியருக்கும், தென்னிந்தியாவிலுள்ள வேட்டியணிந்த தமிழருக்கும் இடையே என்ன சம்பந்தம் என்று நான் வியந்ததுண்டு. அல்லது மேற்கிந்தியாவிலுள்ள குஜராத்தியருக்கும், குள்ளமான அழகான வடகிழக்கிந்தியருக்கும் என்ன ஒற்றுமை இருக்க முடியும்? இந்தியா பல நாடுகளைக் கொண்ட நாடு. அது துணைக்கண்டம் என்று அழைக்கப்படுவது ஆச்சரியமல்ல. இந்தியாவின் மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 130 கோடி - அதாவது உலக மக்கள் தொகையில் 1/6 பங்கு என்பது நம்மைப் ஆச்சரியப்படவைக்கிறது. “கர்த்தாவே, இந்தியா சந்திக்கப்பட முடியுமா?” என்பதுதான் எனது கதறல்.

நான் திட்டக்கூடுகைக்காகப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, கர்த்தர் பின்வரும் வசனத்தின் மூலம் என்னை உற்சாகப்படுத்தினார்: “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (சக 4:6).

நாங்கள் இத்திட்டத்தை வடிவமைத்து அதை “Bless Bharat” என்றழைத்தோம். இத்திட்டத்திற்கு எங்களை வழி நடத்திய கொள்கைகளாகிய எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

1. இந்திய திருச்சபை எழுப்புதலடையும்போது, இந்தியாவைச் சந்திப்பது எளிதாகிவிடும்

இந்தியாவில் நமக்கு ஒரு அசாதாரனமான எழுப்புதல் தேவை. ஒவ்வொரு சபையிலும், இயக்கத்திலும், ஐக்கியத்திலும் ஆவியானவரின் அசைவு நமக்குத் தேவை. நமது நாட்டில் கடந்த 60 ஆண்டுகளில் தோன்றியுள்ள ஏராளமான மிஷனரி அமைப்புகளுக்காக தேவனைத் துதிக்கிறேன். ஆனால், அந்த அக்கினியை நாம் தொடர்ந்து எரியச் செய்ய வேண்டும். மங்கியெரிகிற திரிகள் பிரகாசமாக எரிய வேண்டும். இந்தியத் திருச்சபை மிக வலுவான அடித்தளத்தைப் பெற்றுள்ளது. பரிசுத்த தோமா இந்தியாவுக்கு வந்து இரத்தம் சிந்தி மரித்தார். பின்னர், பல கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த மிஷனரிகள் இம்மகத்தான நாட்டுக்காகத் தங்கள் முழு வாழ்வினையும் தியாகம் செய்தனர். இந்தியா மிஷனரிகளின் கல்லறைகளால் நிறைந்திருக்கிறது.

இந்திய திருச்சபை மிஷனரிகளின் வியர்வை, கண்ணீர் மற்றும் இரத்தத்தினால் கட்டப்பட்டது. அவர்கள் விட்டுச்சென்றதை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். தியாகமும், கடின உழைப்பும் திருச்சபையினரின் மூச்சாக இருக்கவேண்டும். வருந்தத்தக்கதாக, அவ்வாறு இல்லை. ஆரம்பகால மிஷனரிகளின் அர்ப்பணிப்பும் தாகமும் இன்றைய இந்தியக் கிறிஸ்தவர்களால் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்பட்டு வருகிறது. மிஷன் சொத்துகள் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. திருச்சபைகள் நடத்துகின்ற நிறுவனங்களில் ஊழல் கட்டுப்பாடின்றி பெருகுகிறது. கிறிஸ்தவத் தலைவர்களிடம் நேர்மை காணப்படவில்லை, மேலும், சுயபாணி ஊழியர்கள் தங்களது சொத்துகளைப் பெருமளவு உயர்த்தியுள்ளதால், சாதாரண கிறிஸ்தவனுக்குப் பின்பற்றுவதற்கு கிறிஸ்துவைப் போன்ற மாதிரி இன்று இல்லை. எனவே, நமது இந்திய திருச்சபைகளில் ஓர் எழுப்புதல் தேவை.

2. நமது தேசம் ஆசீர்வதிக்கப்பட தமிழ்நாடு மாநிலம் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்

வியக்கத்தக்க விதமாய், தமிழகத்தில் மிஷனரி தாகத்தை அதிகமாகக் காண்கிறோம். இந்திய மிஷனரி இயக்கங்களுக்கு தென்னிந்தியாவிலுள்ள சபைகளே அதிக மிஷனரிகளை அனுப்பி, தாங்கிவருகின்றன. இதற்கு கடந்த நூற்றாண்டில் வந்த மேற்கத்திய மிஷனரிகள் கொடுத்த ஊக்குவிப்பு காரணமாக இருக்கலாம். தேவன் தமிழ்நாடு மாநிலத்தைப் ஆசீர்வதித்துள்ளார். பாரத ஆசீர்வாத திட்டத்தின் கீழ் (Bless-Bharat Project) ஒரு மாநிலத்தைத் தத்தெடுத்தல் (Adopt - A - State) என்ற ஒரு திட்டம் உள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டக் கிறிஸ்தவர்களும் இந்தியாவின் ஒரு மாநிலத்திற்காக ஜெபிக்க ஊக்குவிக்கப்படுகிறார் கள். எடுத்துக்காட்டாக, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் மத்தியப் பிரதேசம் மாநிலத்திற்காக ஜெபிப்பார்கள். அவர்கள் அம்மாநிலத்தைச் சந்திக்கச் செல்வார்கள். அவர்களது மாவட்டத்திலுள்ள மற்ற கிறிஸ்தவர்களையும் அம்மாநிலத்தை ஆசீர்வதிக்க உற்சாகப்படுத்துவார்கள். இந்தத் திட்டத்தைச் சபைப் பாகுபாடற்ற, இயக்க பாகுபாடற்ற முறையில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதன் மூலம் ஒவ்வொரு மிஷனரி இயக்கமும் ஒவ்வொரு திருச்சபையும் ஆசீர்வதிக்கப்படும்.

3. ஒவ்வொரு கிறிஸ்தவ திருச்சபையும் ஒரு மிஷனரி நிறுவனம் போலச் செயலாற்ற வேண்டும்

நமது தலைமுறையிலேயே இந்தியா ஆசீர்வதிக்கப்பட

வேண்டுமானால், ஒவ்வொரு சபையும், ஜக்கியமும் ஒரு மிஷனரி இயக்கம் போலச் செயல்பட வேண்டும். சபைத் தலைவர்கள் எல்லாரும் இதைப்பற்றிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். முக்கிய வரிசையிலுள்ள சீர்திருத்த அல்லது பெந்தெகொஸ்தே சபை ஒவ்வொன்றிலும் ஒரு மிஷன் நிர்வாகக் குழுவும், ஒரு மிஷன் ஆலோசனைக் குழுவும் இருத்தல் அவசியம். பகுதிநேரப் பணியாளர் குழுவும் அவர்களது சபையில் மிஷனரி தாகத்தை உருவாக்குவதை இலக்காகக் கொள்ள வேண்டும். அவர்கள் மிஷன் ஆலோசனைக் கூட்டங்களை (Mission Conferences) ஏற்பாடு செய்து, அதற்குப் பணிக்களங்களிலிருந்து மிஷனரிகளை அழைக்க வேண்டும். அவர்கள் ஏற்கனவே இருக்கும் மிஷனரி இயக்கங்களுடன் ஒருங்கிணைந்து, தங்கள் சொந்த மிஷனரி பணிக்களங்களைத் தொடங்க வேண்டும். மேலும் 3 அல்லது 7 அல்லது 10 நாட்களுக்கு மிஷனரி பயணங்களை ஏற்பாடு செய்து, முதன்முறையாகச் செல்பவர்களுக்கு மிஷனரி சவாலை உருவாக்க வேண்டும். தற்போது இந்தியாவில் பயணஞ்செய்வது கடினமானது அல்ல. இந்தியாவின் ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் விமான நிலையம் உள்ளது; ஏறக்குறைய எல்லா இடங்களையும் இரயில் போக்குவரத்து இணைத்துள்ளது.

4. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் ஆத்துமாதாயகனாக மாற வேண்டும்.

கிறிஸ்துவுக்கு ஒவ்வொரு ஆத்துமாவும் விலையேறப்பெற்றது. ஓர் ஆத்துமாவின் மதிப்பு, இயேசுகிறிஸ்துவின் ஜீவனின் மதிப்புக்கு ஈடானது. அவர் உலகிலுள்ள ஒவ்வோர் ஆத்துமாவுக்காகவும் மரித்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் ஆத்துமாதாயப்பணியில் ஈடுபட வேண்டும். இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கிறிஸ்தவர்கள் சுமார் இரண்டு கோடி பேர் உள்ளனர். இவர்களுள் ஒருகோடி பேர் விசுவாசிகள் என்று எடுத்துக்கொண்டால், ஒரு மாதத்தில் ஒவ்வொருவரும் ஓர் அவிசுவாசிக்கு சுவிசேஷத்தைப் பகிர ஆரம்பித்தால் என்ன நிகழும் என்பதைக் கற்பனை செய்வோம்.

1 மாதம் = 1 கோடி மக்கள் நற்செய்தியால் ஆசீர்வதிக்கப்படுவர்.

12 மாதங்கள் = 12 கோடி மக்கள் நற்செய்தியால் ஆசீர்வதிக்கப்படுவர்.

12 ஆண்டுகள் = 144 கோடி மக்கள் நற்செய்தியால் ஆசீர்வதிக்கப்படுவர்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் மாதத்திற்கு ஒரு நபர் என்ற வீதத்தில் தனிநபர் நற்செய்திப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தால், இந்தியா கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் ஆசீர்வதிக்கப்பட முடியும். இந்தியாவிலுள்ள எல்லாத் திருச்சபைகளும், சபைத் தலைவர்களும் சாட்சி பகருதலுக்கும், ஆத்துமாதாயம் செய்யவும் முக்கியத்துவம் கொடுத்தால், நமது தலைமுறையிலேயே 'பாரதம் ஆசீர்வதிக்கப்படுதல்' என்ற கனவு நனவாகும். இதற்காகவே பாரத ஆசீர்வாத திட்டத்தின் கீழ் "ஆளுக்கொரு ஆத்துமா" (ESAV -Each one SAVe one) என்ற செயல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். உதவிக்கு எங்களை தொடர்புகொள்ளவும்.

5. எஜமானரின் ஊழியக்காரர் பராமரிக்கப்படுதல் வேண்டும்

நமது தேசத்தை ஆசீர்வதிக்கும் உற்சாகம் மற்றும் தாகத்தில் மூழ்கிய நாம், ஒரு சபையாக எஜமானரின் ஊழியரைப் பராமரித்தல் அவசியம் என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது. அவர்கள் நன்றாகப் பராமரிக்கப்பட வேண்டும். அவர்கள் பிள்ளைகள் முடிந்த அளவு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்களது உடல் நலனையும் அக்கறையுடன் கவனிக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னரும் அவர்களைப் பராமரிக்க வேண்டும். இத்தகைய தேவைகளைச் சந்திக்க தேவன் எழுப்பியுள்ள (Missionaries Upholders Trust -MUT) போன்ற இயக்கங்களுக்கு நன்றி கூறுவோம். தங்களது பணியாளர்களைப் பராமரிக்க வேண்டியது ஒவ்வொரு சபை மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவ மிஷனரி இயக்கத்தின் பொறுப்பு என்பதை நாம் மறக்கக்கூடாது. **இயக்கங்கள் தங்களது பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துப் பெருமை பாராட்டுவதைவிட, பணியாளர்களை எவ்வளவு நன்றாகப் பராமரிக்கிறோம் என்று பெருமை பாராட்டலாம்.** ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் ஒரு மிஷனரியைத் தாங்க ஆரம்பித்தால், நமது எஜமானரின் ஊழியர் நன்றாகப் பராமரிக்கப்படுவர். இதைச் நிறைவேற்றுவதற்காக "குடும்பத்திற்கொரு மிஷனரி" (EFAM-Every Family A Missionary) என்றழைக்கப்படும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது ஆசீர்வாத இளைஞர் இயக்க மிஷனரிகளுக்கு மட்டுமல்ல, இறைப் பணியாளர் அனைவருக்கும் ஆசீர்வாதத்தின் மூலமாக (ஆரம்பமாக) அமையுமென நம்புகிறோம்.

தேவஊழியரை கரிசனையுடனும், மரியாதையுடனும் நடத்தாவிட்டால், தேவன் நமது தேசத்தை ஆசீர்வதிக்க முடியாது.

6. இந்திய திருச்சபைகள்மேல் ஒருமனப்பாட்டின் ஜெப ஆவி ஊற்றப்படவேண்டும்.

இது ஓர் ஆவிக்குரிய யுத்தம். ஜெபத்துடன் நம்மை ஆயத்தப்படுத்தாவிட்டால், இந்த யுத்தத்தை நாம் செய்ய இயலாது. நமக்குத் தனி ஜெபமும், கூட்டு ஜெபமும் தேவை. நமது பணித்தலங்களிலும், நிறுவனங்களிலும் சிறு குழுக்களை ஏற்படுத்தி, வாரம் ஒருமணி நேரமாவது இந்தியாவுக்காக ஜெபிக்க வேண்டும். பாரத ஆசீர்வாத திட்டத்தில் இதனை 'வீதிக்கொரு ஜெபக்குழு' (ESAP-Every Street A Prayer Cell) என்று பெயரிட்டு செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். நாம் ஜெபிக்கும்போது தேவன் வல்லமையாய்ச் செயல்படுகிறார். நம்மனைவருக்கும் ஜெப ஆவி தேவை. இந்தியாவின் தேவைகள் நம்மை முழங்காலிடச் செய்ய வேண்டும். எல்லா இடங்களிலும் நாம் கர்த்தரிடம் திரும்பி, அவரது இரக்கத்துக்காகக் கெஞ்சுவோம். கர்த்தர் நமது நாட்டை ஆசீர்வதிக்கும்படி கதறி அழுவோம்.

அத்தியாயம் 9

நீங்கள் என்ன செய்ய முடியும்?

செயல்படுவதற்கான கதறல்

"ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும் என்றேன்."
அப் 22:10

தேவனுக்கு நம் ஒவ்வொருவரைக் குறித்தும் ஒரு சித்தம் உண்டு. நமது வாழ்விற்கான அவரது சித்தத்தை வெளிப்படுத்தும்படி நாம் ஆண்டவரிடம் கேட்க வேண்டும். கர்த்தர் பவுலின் வாழ்வில் இடைபட்ட போது, இதுவே அவனது ஜெபமாயிருந்தது. அவன் உடனடியாகக் கர்த்தரிடம், தான் என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டான். நம்மில் பலர், "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியைக் கேட்பதில்லை. இதுவரை இப்புத்தகத்தைப் படித்த நீங்கள், தொடர்ந்து வாசிக்குமுன் ஜெபித்து, கர்த்தரது வழிநடத்துதலுக்கு உங்களை அர்ப்பணிக்குமாறு அழைக்கிறேன். தேவனின் இதயக்கதறல்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் நீங்கள் உங்களை அர்ப்பணிக்கும் நேரமிது.

அர்ப்பணிப்பு ஜெபம்

"கர்த்தாவே, எனது அழைப்பைப் புரிந்துகொள்ள எனக்குதவும். நான் என்ன செய்ய வேண்டுமென்று காண்பியும்; உமது சித்தப்படி என்னை வழிநடத்தும். ஆமென்."

நமது அழைப்பை நாம் உறுதியாக்க வேண்டுமென வேதம் கூறுகிறது.

"ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (2 பேது 1:10).

ஆழமில்லாத கிறிஸ்தவத்தை இயேசு எவ்விதம் எச்சரித்தார் என்று கவனியுங்கள்:

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிற வனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை” (மத் 7:21).

நமது வாழ்வில் தேவனின் சித்தத்தைப் புரிந்துகொள்ள நாம் பொதுவான ஊழியச் செயல்பாடுகளினின்று (பொதுவான அழைப்பு) குறிப்பான ஊழியச் செயல்பாடுகளுக்கு (தனிப்பட்ட அழைப்பு) நேராகச் செல்ல வேண்டும்.

இரட்சிப்பின் அனுபவம் பெற்றவுடன் பவுல் கர்த்தருக்காகக் காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். அவன் சாட்சிபகரவும், நற்செய்தியைப் பிரசங்கிக்கவும் ஆரம்பித்தான். அவன் கர்த்தருக்குள் வளர்ந்து வந்தபோது, தூய ஆவியானவர் அவனைப் புறவினத் தவருக்கு அப்போஸ்தலனாகும் குறிப்பான அழைப்புக்கு நேராக வழிநடத்தி, பயன்படுத்தினார் (அப் 13:2).

கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாம் பல்வேறு ஊழியச் செயல்பாடுகளில் ஈடுபட முடியும். இந்த ஊழியங்களில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, தேவன் நமது தனிப்பட்ட அழைப்புக்கு நேராக நம்மை வழிநடத்துவார்.

நீங்கள் உடனடியாகக் கர்த்தருக்குச் செய்யக்கூடிய பல்வேறு ஊழிய முறைகளின் ஒரு சிறு பட்டியலை தர விரும்புகிறேன்.

1. சிறுவர் வேதபாட வகுப்பு *(Children Bible Class)*

நீங்கள் சிறுவர்களுடன் நன்றாகப் பழகுவீர்களானால், இது ஒரு பெரிய ஊழியம். நீங்கள் கதை சொல்லும் திறமையையும், பேச்சுத் திறனையும் வளர்ப்பது அவசியம். கதை சொல்வதில் நீங்கள் இன்னும் முன்னேற வேண்டிய அம்சங்கள் இருக்கலாம். நீங்கள் சந்திக்கும் பிள்ளைகளின் மனதை புரிந்துகொள்ளும் அடிப்படை அறிவும் உங்களுக்குத் தேவை.

2. உதவிகள் செய்யும் ஊழியம் *(Ministry of Helps)*

உங்களது சபை அல்லது ஐக்கியத்திற்கு, கூடுகைக்கு முன்னர் சுத்தப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் போன்ற சிறு உதவிகள் தேவைப்படும். இவ்வித ஊழியத்தை நீங்கள் திறம்படச் செய்ய வேண்டுமெனில் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு நேரத்துக்கு முன்ன

தாகவே செல்ல வேண்டும். இவ்வூழியம் கூட்டம் நடத்துபவரின் பாரத்தைக் குறைக்கும்.

3. பாடுதலும், ஆராதனையை நடத்துதலும்
(Singing and Leading worship)

நீங்கள் ஆண்டவருக்காகப் பாடலாம்! பாடுதல் என்று சொல்லும்போது, பாடலை இயற்றுதலும் உள்ளடங்கும். தேவன் இத்தகைய தாலந்துகளை உங்களுக்கு ஈந்திருப்பாரெனில், இவ்வரங்களை செயல்படுத்த நேரம் செலவிடுங்கள். உங்கள் வரங்களைச் சிறிய ஜெபக்குழுக்களிலும், ஐக்கியங்களிலும் பயன்படுத்துங்கள். எப்பொழுதும் பெரிய கூடுகைகளில் மட்டுமே செயல்படுத்த நினைத்து ஏமாற வேண்டாம்.

4. இசை *(Music)*

இசை என்பது தேவமகிமைக்காகப் பயன்படுத்தப்படும்போது ஓர் அற்புத வரமாகும். கிட்டார் (Guitar), கீ–போர்ட் (Key-board) அல்லது ரிதம்ஸ் (Rhythms) போன்றவற்றை இசைக்கும் வரம் உங்களுக்கிருந்தால், அதைக் கர்த்தருக்காகப் பயன்படுத்த ஆரம்பியுங்கள். முதலாவது சிறு ஜெபக்கூட்டங்களில் துவங்குங்கள்.

5. பதின்வயதினர் ஊழியம் 13–19 வயது *(Teens Outreach)*

உங்களது சபையில் அல்லது ஊரில் இருக்கும் பதின்பருவத்தி னரைக் குறித்து தேவன் உங்களைப் பாரப்படுத்தினால் ஜெபித்து செயல்படுங்கள். அல்லது உங்கள் குடும்பத்தில் ஒரு பதின்வயது பிள்ளையை வளர்த்த அனுபவத்தில் நீங்கள் தேறியிருந்தால், இப்பணிக்கு நீங்கள் மிகவும் பொருத்தமானவர்கள். உங்களது சபையில் பதின்வயதினர் ஐக்கியம் இல்லாதிருந்தால், நீங்கள் அதை ஆரம்பிக்கலாம். Scripture Union (SU) போன்ற குழுவினர் அவர்கள் மத்தியில் ஊழியஞ் செய்கின்றனர். நீங்கள் அவர்களிடம் பயிற்சி பெற்று, ஊழியஞ்செய்யத் தொடங்கலாம்.

6. ஆலோசனை கூறுதல் *(Counseling Ministry)*

மேடைப்பிரசங்கம் கடினமானது என்றெண்ணுபவர்களுக்கு, “ஆலோசனை கூறும் ஊழியம்” அற்புதமான ஒன்று. எளிதில் உணர்கின்ற ஓர் இருதயம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அல்லது உங்கள் வாழ்வின் அனுபவங்கள் உங்கள் இருதயத்தை உணர்வுள்ளதாக்கியிருந்தால், ஆலோசனை கூறும் ஊழியத்தைச் செய்வதற்கு நீங்கள்தான் சரியான நபர். வேதனை மிகுந்த காயங்களுடன் மக்கள் பலர் உண்டு. அவர்களது காயம் ஆற

வேண்டும். ஆவிக்குரிய ஆலோசனைகள் மன ஆறுதலையும் புதுப்பித்தலையும் கொண்டு வரும். "நபருக்கு நபர்" (Person to Person) போன்ற இயக்கங்கள் இதற்குப் பயிற்சி அளிக்கின்றனர்.

7. சந்திப்பு ஊழியங்கள் *(Visitation Ministry)*

அருகில் ஒரு முதியோர் இல்லம் இருந்தால், அவர்களைப் பார்க்கச் செல்லத் தயங்க வேண்டாம். நீங்கள் வாராந்தர சந்திப்பைத் திட்டமிடலாம். இத்தகைய மக்களுடன் நேரம் செலவிடுதல் பரலோகில் உங்களுக்குப் பெரும் பங்கைக் கொண்டு வரும். நீங்கள் புற்றுநோய் நல்வாழ்வு மையங்களையும், HIV நோயாளிகளையும், குணமாக்க இயலாத வியாதிகளில் வருந்துவோரையும் சந்திக்கச் செல்லலாம். நீங்கள் செய்ய வேண்டியது, அந்த நிறுவனப் பொறுப்பாளரைச் சந்தித்து, அம்மக்களுடன் நேரம் செலவிடும் உங்கள் விருப்பத்தைத் தெரிவியுங்கள். ஒத்த மனதுடைய இன்னொரு விசுவாசியையும் உங்களுடன் அழைத்துச் செல்லலாம்.

8. வாலிபர் ஜெபக்குழுக்கள் (Youth Prayer Cells)

உங்களது சபை அல்லது ஊரில் இருக்கும் வாலிபப் பருவத்தினரைக் குறித்த பாரம் உங்களுக்கிருந்தால், ஒரு வாலிபர் ஜெபக்குழு ஆரம்பிக்கத் திட்டமிடுங்கள். ஆரம்பிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று பேர் இருந்தால் போதும். அவர்களுடன் நேரம் செலவிடுங்கள்; நட்பான முறையில் சாதாரணமாக வேதபாட வகுப்புகளை ஆரம்பியுங்கள். சட்டதிட்டங்களுடன் இருப்பது அவர்களைச் சலிப்படையச் செய்யலாம். உண்மையில், அவர்கள் இன்னொரு பிரசங்கத்தைக் கேட்க விரும்பமாட்டார்கள். வாலிபர்களுக்குப் பயனுள்ள முறையில் ஊழியஞ்செய்ய உங்களுக்குப் பயிற்சியும், விழிப்புணர்வும் தேவைப்படலாம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே நடத்துவது நல்லது. உதவிக்கு நீங்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

9. முன்னேற்றப்பணிகள் *(Developmental Works)*

உங்கள் துறையில் நீங்கள் தொழில்திறன் மிக்கவராக இருந்தால், விண்ணரசுப்பணியில் உங்களது தொழில் அறிவைப் பயன்படுத்தக்கூடிய பகுதிகளைக் கண்டால், தன்னார்வமாக நீங்கள் உதவி செய்யலாம். நீங்கள் ஒரு மென்பொருள் பொறியியலராயிருந்தால், கிறிஸ்தவ இயக்கங்களுக்குப் பயன்தரும் திட்டங்களை உருவாக்கலாம்.

10. எழுதுதல் (*Writing)*

நீங்கள் எழுதும் வரம் பெற்றிருந்தால், எழுத ஆரம்பியுங்கள்.

வலைத்தளத்தில் உங்கள் சொந்த வலைப்பதிவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி, உங்கள் திறமைகளை வளருங்கள். உங்களது எழுதும் திறனைக் கூர்மையாக்க வலைத்தளத்தில் வாய்ப்புக்கள் (Online Resources) பல உள்ளன. நமது புத்தகங்களை நாமே வலைத்தளத்தில் வெளியிட பல்வேறு சாத்திய கூறுகள் இன்று உண்டு.

11. வடிவமைத்தல் *(Designing)*

வடிவமைக்கும் கலையில் உங்களுக்கு ஆர்வமிருந்தால், சுவரொட்டிகள், விளம்பரத்துணுக்குகள், ஊக்குவிக்கும் மேற்கோள்கள் மற்றும் வேதவசனங்கள் ஆகியவற்றை வடிவமைத்து விண்ணரசுப்பணிக்கு வழங்கலாம். சமூக ஊடகங்களில் அவற்றை வெளியிடலாம். Photoshop, Illustrator, Corel-Draw போன்ற புது மென்பொருள்களையும் நீங்களாகவே கற்கலாம்.

12. ஊழிய பங்காளர் திரட்டுவோர் *(Mission Mobilizer - MM)*

நீங்கள் மிஷனரிப் பாரத்தால் உந்தப்பட்டு மிஷனரி களுக்கு உதவ எண்ணினால், மிஷனரி பணியைப் பற்றி மற்ற வர்களுக்கு அறிவியுங்கள். பணிக்களங்களை நேரில் பார்வையிட்டு, பணிக்களத்தின் உண்மை நிலவரங்களை பார்த்து வாருங்கள்; பணிக்கள மிஷனரிகளுடன் கலந்துரையாடுங்கள். உங்கள் நண்பர்களை பணிக்களங்களுக்கு அழைத்துச் சென்று மிஷனரித் தாகத்தை அவர்களுக்கும் ஏற்படுத்துங்கள். மிஷனரி பணிக்காக நிதி திரட்டுங்கள். திட்டமிட்டுச் செயல்படுங்கள்.

13. ஜெப வீரர் *(Prayer Warrior)*

உங்கள் வயது அல்லது வேலை உங்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்குமானால், இந்த ஊழியத்தைக் கருத்தில் கொள்ளுங்கள். நம் தேசத்துக்காக மாநிலவாரியாக, மாவட்டவாரியாக ஜெபிக்க ஆரம்பியுங்கள். உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளுக்காகவும் நீங்கள் ஜெபிக்கலாம். Operation Mobilization ஜெபப்புத்தகம் உங்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.

14. வேத பாடம் *(Bible Study)*

நீங்கள் வேதமாணாக்கராயிருந்தால், நீங்கள் வேதவசனத் தைப் பகுப்பாய்வு செய்து படிப்பதை விரும்புகிறவரானால், வேதத்தைப் போதிப்பதற்கு உங்களுக்கு அழைப்பு இருக்கலாம். ஒரு சிறு குழுவுடன் ஆரம்பித்து அவர்களுக்குப் போதியுங்கள். வேத

விளக்கவுரைகள், வேத அகராதிகள் மற்றும் ஒத்துவாக்கிய அகராதிகள் ஆகியவற்றின் உதவியுடன் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

15. பெண்கள் ஊழியங்கள் *(Women Specific Ministries)*

நீங்கள் இருக்குமிடத்தில் விசுவாசிகளாகிய பெண்களைச் சந்தித்தால், அவர்களை ஒன்று சேர்த்து ஒரு சிறு ஜெபக்குழுவை அமைக்கலாம். நீங்கள் வாரம் ஒரு முறை கூடி வேதாகமத்தைக் கற்க ஆரம்பிக்கலாம். நீங்கள் ஒரு குழுவாக இணைந்து சந்திப்பு ஊழியத்தில் ஈடுபடலாம்.

16. மிஷனரி ஜெபக்குழு *(Missionary Prayer Group)*

உங்களது ஊரில், பணிபுரியும் இடத்தில் ஒரு மிஷனரி ஜெபக் குழுவை நீங்கள் உருவாக்கலாம். இந்தியாவிலுள்ள வெவ்வேறு இயக்கங்களின் மிஷனரிப் பணிகளைப்பற்றிய செய்திகளைச் சேகரித்து அவற்றிற்காக ஜெபிக்க ஆரம்பிக்கலாம்.

17. தனித்தாள் ஆத்தும ஆதாயம் *(One to One Evangelism)*

நீங்கள் தனிநபர் நற்செய்திப்பணியும் செய்யலாம். இதை வாரம் ஒருமுறை அல்லது மாதத்திற்கொருமுறை எனத் திட்டமிடலாம். நீங்கள் கைப்பிரதிகளையும், புதிய ஏற்பாடு கட்டுகளையும் எடுத்துச் செல்லலாம். நீங்கள் ஒளிவுமறைவின்றி பேசக்கூடியவராகவும், எளிதில் நண்பர்களாக்கக்கூடியவராகவும் இருந்தால் இதுதான் உங்களது ஊழியம்.

18. சிறப்புநாட்கள் நற்செய்திப்பணி *(Events Evangelism)*

கிறிஸ்துமஸ், காதலர் தினம், நண்பர்கள் தினம் போன்ற விசேஷித்த நாட்களைத் தவறவிடாதீர்கள். இந்த நாட்களெல்லாம் சுவிசேஷத்தை அறிவிக்கப் நல்ல தருணங்கள். உங்கள் நண்பர்களுக்கு கிறிஸ்துமஸ் விருந்தை ஒழுங்குபடுத்தி, நற்செய்தியை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம். இதைப் போன்ற பல்வேறு வழிமுறைகளைச் சிந்தியுங்கள்.

19. ஒருங்கிணைத்தல் *(Organising)*

நீங்கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் திறம்பெற்ற வரானால், உங்களது சபை அல்லது இயக்கத்தில் நிகழும் சிறு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்வதற்குத் தன்னார்வத்துடன் நீங்கள் முன்வரலாம். ஆவிக்குரிய வட்டாரங்களில் உங்களது திறமை தெரியாமலிருக்கலாம். எனவே, உங்கள் சபை அல்லது இயக்கத்தில் தன்னார்வமாய்ச் செயல்பட உங்களை ஊக்குவிக்கிறேன்.

20. விருந்தோம்பல் *(Hospitality)*

விருந்தினரை உபசரிக்கும் திறமை உங்களுக்கிருந்தால், உங்களது வீடுகளில் மிஷனரிகளை வரவேற்று, உபசரித்து அவர்களுக்குப் புத்துணர்வூட்டுங்கள். அவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படுமானால், உங்கள் வீட்டிலிருந்து அவர்கள் சிகிச்சைபெற நீங்கள் திட்டமிடலாம், அல்லது ஒரு மிஷனரிக் குடும்பம் அவர்களது கோடை விடுமுறையில் சில நாட்கள் உங்களுடன் செலவிட நீங்கள் அனுமதிக்கலாம்.

21. கிராம ஊழியம் *(Village Outreach)*

உங்களுக்கருகிலுள்ள சந்திக்கப்படாத கிராமங்களைக் குறித்த கரிசனை உங்களுக்கிருக்குமானால், நீங்கள் ஒரு கிராம சந்திப்புக் குழுவை ஏற்படுத்தி, கிராமங்களைச் சந்திக்கலாம். ஆரம்பத்தில், அக்கிராமத்தில் கிறிஸ்தவ சாட்சி ஒருவரும் இல்லையெனில் நீங்கள் படக்காட்சி ஊழியமும் கைப்பிரதி விநியோக ஊழியமும் திட்டமிடலாம். கிராமங்களில் உங்களுக்குத் தொடர்புகள் கிடைக்குமானால், அவர்களை வாராந்தர அடிப்படையில் சந்தியுங்கள்.

22. கூடாரம் அமைக்கும் ஊழியம் *(Tent - Making Ministry)*

தேவன் உங்களைச் சொந்த ஊரைவிட்டு நகர்ந்து, பவுலைப்போல ஒரு கூடாரம் அமைக்கும் மிஷனரியாக அழைப்பாரென்றால், நீங்கள் முன்னோக்கிச் செல்லலாம். தேவன் உங்களை அனுப்ப விரும்பும் இடத்துக்கு நீங்கள் செல்லும்படியான வழிநடத்தலுக்காக ஜெபியுங்கள். அப்பகுதியில் வேலைக்காக நீங்கள் மனுசெய்து, இயேசுவுக்குப் பயனுள்ள சாட்சியாக அங்கு வாழலாம்.

23. முழு நேர ஊழியம் *(Full Time Ministry)*

தேவன் உங்களை முழுநேரப்பணிக்கு அழைத்தால், அவருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் எந்த இயக்கத்துடன் இணைந்து பணியுரிய தேவன் விரும்புகிறார் என்றறிய ஜெபியுங்கள். தேவன் உங்களை வழிநடத்துவார்.

மேற்கண்ட பட்டியல் முழுமையானதொன்றல்ல. எனினும், தேவ ராஜ்யப்பணியில் நீங்கள் ஒரு பயனுள்ள பாத்திரமாக உங்களது பணியைத் தொடங்க இது உங்களுக்குதவும். உங்களது தாலந்துகளையும் வரங்களையும் நீங்கள் தெரிந்துகொண்டு, அவரது மகிமைக்காகப் அவற்றை பயன்படுத்த தேவன் உங்களுக்கு உதவிசெய்வாராக.

அத்தியாயம் 10

நாம் ஒன்றாக இருக்க முடியாதா?

ஒருங்கிணைப்புக்கான கதறல்

"ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்" 1 கொரி 12:26

இசைவல்லுநர்கள் பலர் ஒன்று சேர்ந்து, அற்புதமாக ஒருங்கிணைந்து ஒத்திசைத்து நிகழ்த்துவதுதான் இன்னிசை நிகழ்ச்சி. இசை நிகழ்ச்சியில் ஓர் இசைக்கருவியின் தனித்த ஒலியை நாம் கேட்பதரிது. இதைத் தான் கொரிந்தியருக்கு எழுதின நிருபங்களில் பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். பின்வரும் வசனங்களை நோக்குங்கள்.

1 கொரி 14:33, "தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல் சமாதானத் திற்குத் தேவனாயிருக்கிறார்."

1 கொரி 14:40, "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது."

இது இன்றைய கிறிஸ்தவத் திருச்சபையிலும் காணப்பட வேண்டும். ஆனால் வருந்தத்தக்கவிதமாக, அப்படி காணப்படவில்லை. திருச்சபையானது அதற்குள் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும், சபையானது ஒரு இயக்கமாக ஒழுங்கிணைக்கப்படாத நிலையில் இருந்தது. இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் சபைத் தலைவர்களுக்கிடையே பல்வேறு போதனைகளும் வேறுபாடுகளும் காணப்பட்டன. பேரரசர் கான்ஸ்டன்டைன் சபையை ஒன்றாக இணைக்க முயற்சித்தார். ஒன்றுபட்ட சபை மீண்டும் கி.பி. 1054-ல் மேலைநாட்டுத் திருச்சபை (The Roman Catholic Church) மற்றும் கீழைநாட்டு திருச்சபை (The Orthodox Church) என்று முதலாவது

பிளவுபட்டது. இப்பிளவுக்கு அடிப்படைக் காரணம் இறையியல் கோட்பாடுகளில் அவர்களுக்கிடையேயிருந்த வேறுபாடுகளாகும். மீண்டும் கி.பி. 1517-ல் மார்ட்டின் லூத்தர் ஜெர்மனியிலுள்ள பேராலயக் கதவுகளில் வேதத்தின் அடிப்படையில் தொண்ணூற்றைந்து நியாயங்களை ஆணியறைந்தபோது, சீர்திருத்த மறுமலர்ச்சி ஆரம்பித்தது. இந்த 95 குறிப்புகளிலும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையுடன் லூத்தர் ஒத்துப்போகவில்லை.

அதிலிருந்து சபைப்பிரிவுகள் மற்றும் சபைகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே செல்கின்றது. உலகக் கிறிஸ்தவக் கலைக்களஞ்சியத்தின்படி ஏறத்தாழ 33,000 சபைப்பிரிவுகள் இருக்கின்றன. (Barrett, Kurian, Johnson; Oxford Press, 2nd edition, 2001). கார்டன்-கான்வெல் இறையியல் பயிற்சி நிலையத்திலுள்ள உலகக் கிறிஸ்தவக் கல்வி மையம், சபைப்பிரிவுகள் 2000-ம் ஆண்டில் 34,000 ஆகவும், 2012ல் 43,000 ஆகவும் உயருமென மதிப்பிட்டது.

மக்கள் வசிக்கும் இடத்தின் அடிப்படையில். பல சுதேச சபைப்பிரிவுகள் தோன்றுவதால் இந்த எண்ணிக்கை மிக உயர்ந்துள்ளது. எனவே, இன்று தேவனுக்காகப் பணிபுரியும் பல சபைப்பிரிவுகளும், குழுக்களும், இயக்கங்களும் நம்மிடையேயுள்ளன.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒன்றிசைவும், ஒருங்கிணைப்பும் இருக்கத்தக்கதாக, 21 ஆம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களாகிய நமக்குச் சில காரியங்களில் விழிப்புணர்வு தேவை என நான் நம்புகிறேன்.

கிறிஸ்துவின் சரீரம்

வெவ்வேறு ஊழியங்கள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவதற்கு முதலாவது நாம் கிறிஸ்துவின் சரிரத்தை குறித்த சத்தியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்:

எபே 4:15,16 - “அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிற வர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது

அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது."

எபே 5:23,24 - "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்."

1 கொரி 3:11 - "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது."

இவ்வசனங்கலெல்லாம் இயேசு கிறிஸ்துக்கு சபைமீதான அதிகாரத்தை வெளிக்காட்டுகிறது. இயேசு கிறிஸ்து சபைக்குத் தலையானவர்; சபையானது அவருக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். நாமனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள். தனது வாழ்வில் கிறிஸ்துவைத் தலையாக ஏற்றுக் கொள்ளாத எவரும் ஒரு அங்கமாக இருக்க முடியாது.

இதிலிருந்து நாம் ஒரு மிக முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிராத எந்தவொரு சபையும், சபை என அழைக்கப்பட முடியாது. கர்த்தர், தேவன் போன்ற வார்த்தைகளை நாம் பயன்படுத்துவது நல்லதுதான். ஆனால், இயேசு கிறிஸ்துவின் நாமம் மேலான கனத்துக் குரியதாகக் கருதப்பட வேண்டும். ஒரு நபர் அல்லது குழு, கிறிஸ்துவின் மேலான அதிகாரத்தை ஏற்காதிருந்தால், அதனுடன் ஒன்றிணையும் நோக்கம் என்பது தேவதூஷணம். இயேசு கிறிஸ்துதான் நமது அஸ்திபாரம்; நமது மூலைக்கல்லும் அவரே.

கிறிஸ்தவ ஒருங்கிணைப்பு

கிறிஸ்தவ ஒருமைப்பாட்டின் அடித்தளத்தை நிறுவியபின், ஊழியத்தில் ஒருங்கிணைப்பு ஏன் தேவை என்பதை நாம் அறிய வேண்டும். "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். எப்படியெனில் சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரி 12:11,12).

திருச்சபையைக் குறித்த தேவ திட்டம் ஒன்று உண்டு. சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் விண்ணரசுப்பணியில் ஒரு பங்கை நிறைவேற்ற வேண்டும். இதை விளக்க பவுல் அப்போஸ்தலன் உடலுறுப்புகளின் உவமையைப் பயன்படுத்துகிறார்; கால்கள், கைகள், கண்கள், செவிகள். ஒரு பயனுள்ள பணியைச் செய்ய எல்லாம் இணைந்து செயல்பட வேண்டும். அவர் கிறிஸ்தவ ஊழிய ஒருங்கிணைப்பின் வல்லமையான சத்தியங்களை மிக அழகாக வெளிப்படுத்துகிறார். அத்தகைய நான்கு சத்தியங்களைத் தியானிப்போம்.

1. தனித்த அடையாளக் கொள்கை
(Principle of Individual Identity)

1 கொரி 12:15,16 – "காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?"

1 கொரி 12:17 – "சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே?"

ஒரு கிறிஸ்தவ ஊழியத்தை இன்னொன்றுடன் ஒப்பிடுவது சரியானதல்ல. ஒவ்வொரு இயக்கமும் தனித்தன்மை வாய்ந்தது. அது தேவனுக்காகச் செயல்படுவதால் விசேஷித்தது. அவை ஒவ்வொன்றும் மற்ற அங்கங்களிருந்து வேறுபட்டிருக்கும். ஒரு கையின் வேலை, கால் செய்யும் வேலையினின்று முற்றிலும் வேறுபட்டது. கண்ணின் பணி, செவியின் பணியினின்று வேறுபட்டது. எனவே, ஒருமைப்பாடு என்றால் நமது அடையாளத்தை இழந்துவிடுதல் என்று பொருளல்ல.

உண்மையில் நாம் நமது அடையாளத்தையும், தனித்தன்மையையும் காத்துக்கொள்ளல் வேண்டும். இப்படி செய்வதன் மூலம் நமது உள்ளான திறமை கிறிஸ்துவின் சரீரத்திற்கு பயனை விளைவிக்கும். நாம் இன்னொரு இயக்கத்தின் அல்லது நபரது நகலாக மாறுவதைத் தவிர்க்க வேண்டும், இல்லையெனில் அது இறைப்பணியில் ஒரே வேலையைத் திரும்பச் செய்வதாக அமையும். நாம் நமது வேறுபாடுகளின் மதிப்பை உணர்ந்து, நமது ஊழியம் தெய்வீக திட்டத்தில் எவ்வாறு அழகாகப் பொருந்துகிறது என்பதைத் விளங்கிக்கொள்ள வேண்டும்.

2. ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் கொள்கை
(Principle of Mutual Dependance)

1 கொரி 12:21 – “கண்ணானது, கையைப் பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது, கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை என்றும் சொல்லக்கூடாது.”

நமக்குத் தனித்த அடையாளமும் நோக்கமும் இருப்பினும், நாம் தனித்து இயங்க முடியாது. நாம் ஒருவரது உதவியுமின்றி முன்செல்ல முடியும் என்பதுபோல் தோன்றினாலும், உடலின் ஏனைய அவயவங்களும் தேவை என்பதை நாம் உணரவேண்டும். மற்ற எந்த ஊழியங்களையும் ஏற்றுக்கொள்ளாத இயக்கங்கள் உண்டு. ஆனால் அப்படிப்பட்ட ஊழியமோ சபையோ ஆரோக்கியமான தாயிராது என்பதை நாம் கண்டறியலாம். உதாரணமாக, ஒரு சபை தவறான உபதேசங்களால் திசைதிருப்பப்படும்போது, அதற்கு ஆரோக்கியமான வேதப் போதகர் தேவை. அதைப்போல, ஒரு மிஷன் நிறுவனத்தில், தனித்து விடப்பட்ட மிஷனரிகளின் பெற்றோருக்கு ஒரு சபை மேய்ப்பனின் பராமரிப்பு தேவை.

3. ஒருவரையொருவர் மதிக்கும் கொள்கை
(Principle of Mutual Respect)

1 கொரி 12:22,23 – “சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிற வைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்.”

சரீரத்தின் அங்கங்களாகிய ஒவ்வொருவருக்கும் நாம் மரியாதை கொடுக்க வேண்டும். சரீரத்தில் சில அங்கங்களுக்கு மற்றதைவிட அதிக கனம் கொடுக்கப்படலாம். ஆனால் நாம் ஒருவரையும் புறக்கணிக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக, கண்கள் கால்களைவிட அதிக கனத்துக்குரியவை. மக்கள் ஒருவரோடொருவர் போசும்போது கண்களையே பார்ப்பர். கண்கள் முக்கியமான இடத்தில் இருக்கிறது. ஆனால், நாம் கண்கள்மீது அதிக பாரம் வைக்கமுடியாது. அவை மிகவும் உணர்ச்சி வாய்ந்தவை. கண்களை ஓடிப்போய் பெரிய பாரம் சுமக்கச் சொல்ல மாட்டோம். ஆனால், கால்கள் அதைச் செய்யும். அதன் வேலையினால் பாதங்கள் அழுக்காகலாம். கால்கள் அழுக்காயிருப்பதால் கண்கள் அவற்றை அவமரியாதை செய்யக்கூடாது. அதுபோல கால்கள் கண்கள்மேல்

பொறாமை கொள்ளக்கூடாது. தேவன் ஒவ்வொருவருக்கும் அவரவர் கிரியைகளின்படி பலனளிப்பார். எனவே, தேவன் நாம் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்வோம். தேவனது சித்தத்திலும் திட்டத்திலும் நாம் திருப்தியாயிருப்போம்.

4. ஒருவருக்கொருவர் உதவும் கொள்கை

(Principle of Mutual Help)

1 கொரி 12:26 - "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்."

உடலின் ஓர் உறுப்பு பாடுபட்டால், மற்றெல்லா உறுப்புகளும் ஒன்று சேர்ந்து உதவுவது அவைகளின் கடமையாகும். உதாரணமாக, பாதங்கள் காயமடைந்தால், வாய் சத்தமிடுகிறது; கண்கள் பார்க்கின்றன. கைகள் வலியைக் குறைப்பதற்காகக் கால்களுக்குச் செல்கின்றன. இதற்கு மாறாக, "அது காலின் பிரச்னை" என்று வாய் சொன்னால், நாளடைவில் அதுவும் பாதிக்கப்படும் (கால்களின் உதவியின்றி அதற்கு உணவு கிடையாமற்போகலாம்). முழு உடலும் பாடுபட வேண்டியது வரும். அதைப்போல தேவ ராஜ்யப்பணியில், நாம் ஒருபோதும் பிற இயக்கங்களை அலட்சியப்படுத்தக்கூடாது. நாம் ஒருவர்மேல் ஒருவர் அக்கறை கொண்டு, ஒருவரையொருவர் நேசிக்கக்கடவோம்.

வாக்குத்தத்தத்தின் குமாரனும் மாம்சத்தின் குமாரனும்

ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் மகன்; ஆனால் சாராள்-ஆபிரகாமின் தீர்மானத்தின்படி பிறந்த மாம்சத்தின் மகன் இஸ்மவேல் (கலா 4:23). பல வேளைகளில், தேவனது வாக்குத்தத்த வழிநடத்துதலின்றி, சுயவிருப்பத்தின்படி தங்கள் சொந்த இயக்கங்களை ஆரம்பிக்கத் தீர்மானிக்கும் மக்களை நாம் காண்கிறோம். அவர்கள் கிறிஸ்துவின் உடலில் பிரிவுகளும், பிரிவினைகளும் ஏற்படக் காரணமாயிருக்கின்றனர்.

ஈசாக்கும் இஸ்மவேலும் ஒரேயிடத்தில் இருக்கமுடியாது. இருவரும் பிரிக்கப்பட வேண்டும். எனவே, இத்தகைய இயக்கங்கள் மற்றும் சபைகளுடன் ஒருமைப்பாடு சாத்தியமல்லவெனினும் அவைகள் தனித்தியங்கி வளர அனுமதிக்கப்பட வேண்டும். இஸ்மவேல் ஈசாக்கை விட்டு வெளியே அனுப்பப்பட்டதையும், தேவன் இஸ்மவேலையும் ஆசீர்வதித்ததையும் கவனியுங்கள். ஓர்

ஆவிக்குரிய மனிதன் இக்காரியங்களையெல்லாம் கண்டறிவான். சில நேரங்களில் சில ஊழியங்களைத் தனித்து வளரவிடுவது நல்லது. தேவனது தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களால் அவரது நோக்கங்கள் நிறைவேற்றப்படும்.

ஓர் எச்சரிப்பின் வார்த்தை - துர்வுபதேசங்கள் மற்றும் சமநிலையற்ற போதனைகள்

மாம்சத்தின் குமாரரால் மட்டும் நாம் பிரிவினைகளைச் சந்திப்பதில்லை. கள்ளச் சகோதரர், கள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் ஆகியோரையும் நாம் காண்கிறோம் (கலா 2:4, 2 பேது 2:1, 1 யோவா 4:1). அவர்களுடன் ஒருமைப்பாடு சாத்தியமன்று. ஆனால் ஒரு முடிவுக்கு வருமுன் நாம் கவனமாக இருக்கவேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் மேலான அதிகாரத்தை ஏற்றுக்கொள்கிறார்களா? (1 யோவா 4:3) அவர்கள் வேறொரு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்களா? (2 கொரி 11:4) அவர்கள் வெறுமனே ஒரு கிறிஸ்தவத் தலைவரைப் பின்பற்றுகிறார்களா? (1 கொரி 1:12) என்பதை நாம் கண்டறிய வேண்டும். இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டைத் தெரிந்திருக்கவேண்டும்.

பொதுவாக, சத்தியத்திற்கு மாறான காரியங்களைப் போதிப்பவர்கள் அவர்களது பிரசங்கங்களில் கிறிஸ்துவை பிரசித்தப்படுத்தமாட்டார்கள். கிறிஸ்துவுக்கு மேலாகத் தங்களை உயர்த்தும் துர்வுபதேசக் குழுக்கள் சில உள்ளன. அவர்கள் தங்களது போதனைகள் மட்டுமே சத்தியம் எனக் கருதுவர். அவர்களது பிரசங்கங்களும் ஊழியங்களும் அவர்களை மையப்படுத்தியேயிருக்கும். இது ஓர் ஆபத்தான போக்கு. இத்தகைய இயக்கங்கள் மற்றும் சபைகளினின்று நாம் விலகியிருக்க வேண்டும்.

சமநிலையற்ற போதனைகளைத் தவறான உபதேசம் என்று குறிப்பிட முடியாது. அது பிரசங்கியார் தேவனது வார்த்தையைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும் தனது சொந்த அனுபவங்களிலிருந்து பிரசங்கிப்பதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு பிரசங்கியார் மிஷனரி நற்செய்திப்பணியைவிட பரிசுத்த வாழ்வில் அதிக அக்கறையுடனிருக்கலாம். அவரது பிரசங்கத்தை கேட்பவர்கள் நற்செய்திப்பணியில் ஈடுபடுவது அபூர்வம்.

மாறாக, தனிநபர் சாட்சியைப் பலியாக்கி, ஊழியத்தை மட்டும் வலியுறுத்துதல் இன்னொரு சமநிலையற்ற அணுகுமுறைக்கு வழிநடத்தும். இந்த சமநிலையற்ற போதனைகள் தவறான

உபதேசங்களாக இல்லாவிட்டாலும், சரியான நேரத்தில் சமநிலைப்படுத்தாவிடில் அவ்வாறு மாற வாய்ப்புண்டு. இக்காரணத்தினால்தான் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவிடம் அவனது உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வலியுறுத்தினார் (1 தீமோ 4:16).

ஒருங்கிணைத்தலின் நோக்கம்

பல நூற்றாண்டுகளாக தேவதாசர்கள் சிறு வேறுபாடுகளின் காரணமாக நம்மில் பிரிவினை ஏற்படாமலிருக்க, சில பொதுவான ஆதாரங்களைக் காண முயற்சித்தனர். அவைகளில் ஒன்றுதான் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம். அதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம் என்பது திருச்சபையின் அடிப்படை உபதேசங்களின் கூட்டமைப்பு:

1. வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.
2. அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.
3. பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

விசுவாசப் பிரமாணமானது பரிசுத்த ஆவியானவரின் வரங்களை பற்றி கூறாவிடினும் கிறிஸ்தவ உலகின் ஓர் அடித்தள விசுவாச அறிக்கையாக உள்ளது.

எனவே, கிறிஸ்தவப்பணி மற்றும் சுவிசேஷம் அறிவித்தலுக்கு இயேசு கிறிஸ்துவை நமது தலையான மூலைக்கல்லாகக் கொண்டு, ஒன்றிசைந்து நாம் பணியாற்ற வேண்டும்.

நற்செய்தியறிவித்தல் - ஓர் ஒன்றுபடுத்தும் காரணி

மாற் 16:15 - "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."

இயேசு தமது சீடர்களை, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அழைத்தார். அந்தக்கட்டளை இப்பொழுது நம்மிடம் வந்துள்ளது. நாம் ஏன் ஒன்றுசேர்ந்து இன்னும் சிறப்பாக அவருக்குச் சேவை செய்யக்கூடாது?

இந்தியாவில் இயக்கங்களும் சபைகளும் தன்னிச்சையாக செயல்படுகின்றன. நமது தேசத்தை ஆசீர்வதிக்க ஓர் ஒருங்கிணைந்த முயற்சி தேவை என நான் விசுவாசிக்கிறேன். ஏராளமான மக்களும் மூலதனங்களும் ஏதோ ஒரு வகையில் வீணாகின்றன. நாம் நமது மூலதனத்தை நாடு முழுவதற்கும் சமமாக விநியோகிக்க வேண்டும். அதற்கு நாம் ஒருங்கிணைந்த முறையில் செயலாற்ற வேண்டும்.

திருச்சபைகள், மிஷனரி அமைப்புகள், மிஷனரிப் பள்ளிகள், மிஷனரி மருத்துவமனைகள், கிறிஸ்தவ ஆதரிக்கும் (Advocacy) குழுக்கள், கிறிஸ்தவ நிதி அமைப்புகள் ஆகியவற்றைக் கிறிஸ்துவின் அன்பு இணைத்துக் கட்டுவதாக. இந்திய திருச்சபை ஒரு வல்லமையான உந்துவிசையாக மாற வேண்டும். நீண்ட காலமாக நாம் பழைய பாரம்பரியங்களினால் பிரிந்திருக்கிறோம். நாம் ஒன்று சேர்ந்து ஜெபிப்போம். ஒவ்வொரு நகரத்திலும், மாவட்டத்திலும், மாநிலத்திலும் இயக்கப் பாகுபாடற்ற ஐக்கியங்கள் உருவாகட்டும். அனைத்திடங்களிலும் சபைப் பாகுபாடற்ற போதகர்மார் கூட்டம் நடைபெறுவதாக.

சுவிசேஷப்பணி நம்மை ஒன்று சேர்ப்பதாக!

தேவனின் அன்பு நம்மை இணைத்துக் கட்டுவதாக!

அவரது அரசு வருவதாக! ஆமென்.

குற்றஞ்சாட்டு

கிறிஸ்தற்ற குற்றவுணர்விலும் மனச்சோர்பிலும்
நூறாயிரம் ஆத்துமாக்கள் ஒவ்வொறு நாளும்
ஒவ்வொருவராய்க் கடந்து செல்கின்றனர்.

அந்தப் பயங்கர நியாயத்தீர்ப்பின் நாளிலே
அவர்கள் அழிவுக்கு உன்னைக் குற்றஞ்சாட்டும்போது
ஓ! கிறிஸ்துவின் சபையே, என்ன சொல்லப் போகிறாய்?

- Dr. A.B. சிம்சன்

அத்தியாயம் 11

ஒரு கடிதம்

எதிர்ப்பாளரின் கதறல்

"சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?"

அப் 9:4

மிஷனரி அவர்களுக்கு,

நீங்கள் இந்தியாவைவிட மேலைநாடுகளை அதிகம் நேசிப்பதால் நான் உங்களை வெறுக்கிறேன். நம் நாட்டைவிட மேலைநாடுகளை அதிகம் நேசிக்கும் நீங்கள் ஏன் அங்குபோய் குடியிருக்கக்கூடாது? உங்கள் மதம் அங்கிருந்து வந்தது. எங்களை விட்டுவிடுங்கள்.

நீங்கள் மேற்கிலிருந்து பணம் பெற்று என் மக்களை மதமாற்றம் செய்வதால் நான் உங்களை வெறுக்கிறேன். எனது மக்கள் களங்கமற்றவர்கள். அவர்கள் கிறிஸ்தவர்களான பின்பும் எப்படி ஏழைகளாக இருக்கிறார்களென்று பாருங்கள். ஆனால் நீங்கள் பணக்காரராகிவிட்டீர்கள். நீங்கள் ஏழைகளுக்காக, தேவையுள்ளோருக்காகப் பெற்ற பணத்தைக்கூட அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

கிராமத் திருவிழாக்களுக்கு நீங்கள் பணம் ஏதும் கொடாமலிருப்பதால் நான் உங்களை வெறுக்கிறேன். நீங்கள் கிறிஸ்துமஸ் விழாவுக்கு எங்களை அழைத்தபோது, நாங்கள் வந்து நீங்கள் கொடுத்த இனிப்புகளை வாங்கிச் சாப்பிடுகிறோம். ஆனால் நாங்கள் அழைத்தபோதோ, நீங்கள் எங்களுடன் சாப்பிடமாட்டோம் என்கிறீர்கள். நீங்கள் ஒரு சந்தர்ப்பவாதி.

நீங்கள் அப்பாவி மக்களைச் சந்தித்து பிரசாரம் செய்து, அவர்களை உங்கள் மதத்தைப் பின்பற்றுகிறவர்களாக

மாற்றுவதால், நான் உங்களை வெறுக்கிறேன். செல்வந்தரும் செல்வாக்குள்ளவர்களுமாகிய எங்களிடம் வந்து நீங்கள் ஏன் பிரசங்கிப்பதில்லை? பழங்குடி இனத்தவரிடமும் ஏழைகளிடம் மட்டும் ஏன் செல்கிறீர்கள்?

எங்கள் மக்களிடையே நீங்கள் பிரிவினை ஏற்படுத்தியுள்ளதால், நான் உங்களை வெறுக்கிறேன். முன்னர் எங்கள் கிராமங்களில் அனைவரும் ஒரே குடும்பம்போல் இருந்தனர். ஆனால் நீங்கள் செய்ததைப் பாருங்கள். ஒரு பிரிவினர் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர்; ஏனையோர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடுகின்றனர்.

நீங்கள் கல்வியறிவைக் கொடுத்து அவர்களை முன்னேற்று வதால், நான் உங்களை வெறுக்கிறேன். அவர்களுக்குப் பள்ளிகளும் கல்லூரிகளும் கட்டிக் கொடுத்து, அவர்களுக்காகப் பேராயங்களையும் நிறுவுகிறீர்கள். இறுதியில், பேராயர் தேர்வின்போது காவலரின் பாதுகாப்பைத் தேடுகிறீர்கள். எங்கள் சமூக சூழ்நிலையை முழுவதுமாகப் பாழாக்கிவிட்டீர்கள்.

நீங்கள் மேற்கத்திய கலாச்சாரத்தைக் கொண்டுவந்து, எங்கள் வாலிப மக்களை கவருவதால், நான் உங்களை வெறுக்கிறேன். அவர்கள் இப்பொழுது எவ்வளவு குறைவான ஆடை அணிகிறார்கள் என்பதைப் பாருங்கள். “வணக்கம்” என்பதைக் “கைகுலுக்கலாக” மாற்றிவிட்டீர்கள். எங்கள் பெண்களுடன்கூடக் கை குலுக்குகிறீர்கள். வெட்கக்கேடு.

எனக்கு எல்லாவற்றையும்விட எனது தேசம் முக்கியமானது. நான் எனது நாட்டுக்காக வாழ்ந்து மரிப்பேன். அதன் கலாச்சாரத்தைப் பாதுகாக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். எங்கள் மக்களை நீங்கள் கட்டாயமாகவும் தந்திரமாகவும் மதமாற்றம் செய்திருக்கிறீர்கள். நான் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, நான் வன்முறையில் என் எதிர்ப்பை தெரிவிக்கிறேன். நான் தேவாலயங்களை எரித்து, விசுவாசிகளுக்குப் பிரச்னைகளைக் கொடுக்கிறேன். நான் செய்வது தவறு என்று எனக்குத் தெரியும். ஆனால், ஒரு மேன்மையான காரியத்துக்காக இதைத் தொடர்ந்து செய்வேன்.

வெறுப்புடன்,

எதிர்ப்பவன்

மிஷனரியிடமிருந்து எதிர்ப்பவருக்குப் பதில்

பிரிய நண்பரே,

உங்களது வெளிப்படையான கடிதத்துக்கு நன்றி. முதலாவதாக, உங்களது திறந்த மனதை நான் பாராட்ட விரும்புகிறேன். சில முக்கியமான காரியங்களை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தயவு செய்து இக்கடிதத்தைப் பொறுமையுடன் வாசியுங்கள்.

நண்பரே, கிறிஸ்தவம் மேலை நாட்டு மதம் அல்ல என்ற உண்மையை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்தவம் மேற்கே பரவுவதற்கு வெகு முன்னரே இந்தியாவுக்கு வந்துவிட்டது. இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான தோமா என்பவர் முதல் நூற்றாண்டி லேயே இந்தியாவுக்கு வந்தார். இந்திய வரலாற்றின்படி அவர் தென்னிந்தியாவிலுள்ள சென்னையில் மரித்தார்.

மேலும் நீங்கள் நம் நாட்டின்மீது மிகுந்த பற்றுடையவர் எனக் காண்கிறேன். இந்தியாவின் நல்வாழ்வுக்காக உங்களைப் போன்ற தீவிர ஆர்வமுடைய பல மிஷனரிகள் உண்டு என்பதையும் நீங்கள் அறியவேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானம் எடுப்பதற்கு மிஷனரி ஆண்ட்ரூஸ் முக்கிய பங்கு வகித்தார் என்பதை நீங்கள் மறக்கக் கூடாது. மிஷனரிகள்தான் முதலாவது அச்சு இயந்திரத்தை இந்தியாவுக்குக் கொண்டுவந்தனர். அவர்கள் மதமாற்றம் செய்வதற்காக அல்ல, மக்களுக்குச் சேவை செய்யவே பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் கட்டினார்கள். மதமாற்றம் செய்வது மட்டுமே மிஷனரிகளின் ஒரே நோக்கமாயிருந்தால், இந்நேரத்தில் கதையே வேறாக இருந்திருக்கும். பார்வையற்றவர்களுக்கும், மாற்றுத் திறனாளி களுக்கும் கல்வியளிப்பதில் மிஷனரிகள் முன்னோடிகளாய்த் திகழ்ந்தனர்.

மதமாற்றங்கள் பணத்தின்மூலம் செய்யப்படுவதாக உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். இயேசு கற்பித்தது “மதமாற்றம்” அல்ல, “மன மாற்றம்” மட்டுமே என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். அது வாழ்வின் பழைய பாவப் பழங்கங்களினின்று மனம் மாறுவதேயாகும். இயேசு இருதயம் மாற்றமடைவதையே வலியுறுத்தினார். அவர் பாவத்தைப் பற்றியும், எந்த மதத்தின ராயினும் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் பாவி என்பதையும் போதித்தார். இது கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கும். ஒருவனது

பெற்றோர் கிறிஸ்தவராயிருப்பதால் அவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று அழைத்துக்கொள்ளலாம். ஆனால் அவன் ஒரு பாவி என்றும், அவன் இரட்சிக்கப்பட இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்றும் பைபிள் சொல்கிறது. நாங்கள் மக்களிடம் பிரசாரம் செய்கிறோ மென்று குற்றஞ்சாட்டினீர்கள்; நாங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியையே பிரசங்கிக்கிறோம் என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் மதமாற்றம் செய்வதுமில்லை, மதமாற்றத்தை ஊக்குவிப்பதுமில்லை. இயேசு எங்களை "மதமாற்றம்" செய்யச் சொல்லவில்லை, "பிரசங்கிக்கவே" சொன்னார்.

நாங்கள் மேலை நாடுகளிலிருந்து பணம் பெறுகிறோம் என்பது உங்களது இன்னொரு குற்றச்சாட்டு. நீங்கள் சொல்வதில் கொஞ்சம் உண்மையிருக்கலாம். ஆனால், பெரும்பாலான இன்றைய மிஷனரிகள் தங்களது வருமானம் மிகுந்த உலக வேலையை துறந்து, அடர் காடுகளுக்குள் செல்கின்றனர். அவர்களது வருமானச் சான்றிதழ்களையும், வங்கிக் கணக்குகளையும் பாருங்கள், உங்களுக்குப் புரியும்.

கிராம விழாக்களுக்கு நாங்கள் நன்கொடை வழங்குவதில்லை என்றீர்கள். கிராம விழாக்களில் கலந்துகொள்ளும் பிள்ளைகளுக்கு நாங்கள் இனிப்புகளும் பலகாரங்களும் மகிழ்வுடன் வழங்குவோம். ஆனால், பெரும்பாலான கிராமத் திருவிழாக்கள் மதம் சம்பந்தப்பட்ட விழாக்களாக இருப்பதால் நாங்கள் கலந்துகொள்ள முடியவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சமூக விழாக்களில் கலந்துகொள்ள எங்களுக்கு எந்தப் பிரச்சனையுமில்லை.

கிராமங்களில் பிரிவினை ஏற்படுத்துகிறோம் என்கிறீர்கள். ஒரு குடும்பம் அல்லது ஒரு நபர் "மன மாற்றம்" அடையும்போது, அவர்கள் திருமுழுக்கின் மூலம் கர்த்தரை ஏற்றுக்கொள்ளத் தங்களது விருப்பத்தைத் தெரிவிக்கின்றனர். அந்த நபர் தனது தீய பழக்கங்களாகிய குடியையும், தன் மனைவியை அடிப்பதையும் விட்டவுடன், உங்களது நண்பர்களில் சிலர் அவனுக்கும் அவனது குடும்பத்துக்கும் எதிராக வன்முறையில் ஈடுபடுவதை நான் கண்டிக்கிறேன்.

கல்வி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் ஒரு தவறான பிரசாரத்தால் முற்றிலும் தவறாக வழிநடத்தப்பட்டிருக்கிறீர்கள். கல்வி நமது சமுதாயத்துக்கும் பிள்ளைகளுக்கும் ஒளியைக் கொடுத்திருக்கிறது. ஏராளமான சமூகத்

தீமைகளுக்கு எதிராக மிஷனரிகள் போராடியுள்ளனர். உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், நரபலி, தீண்டாமை, கோவில் விபசாரம் போன்ற பல சமூகத் தீச்செயல்கள் (கல்வி நிறுவனங்கள் மூடநம்பிக்கைகளுக்கெதிராக அறிவொளி ஏற்படுத்தியதால்) நீக்கப்பட்டுள்ளன. கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனித இனம் மதிப்பு மற்றும் மரியாதையுடன் நடத்தப்பட பைபிள் போதிக்கிறது.

கலாச்சாரத்தை இழப்பதைக் குறித்த உங்கள் இதய வேதனையை நான் புரிந்துகொள்கிறேன். கலாச்சாரங்கள் மாறக்கூடியது, மாறிக்கொண்டேயிருப்பது என்பதை நீங்கள் அறிய வேண்டும். இந்தியாவின் இந்தச் சந்ததியினர் மேலை நாட்டுக் கலாச்சாரம் நம்முடையதைவிடச் சிறந்தது என எண்ணுகின்றனர். (என்னைப் பொறுத்தவரையில், சில காரியங்களில் அது சரியாயிருக்கலாம், ஆனால் எல்லாவற்றிலும் அல்ல). எதேச்சையாக, நாம் பெப்சி, கோலா, (KFCs) மற்றும் லெவிஸ் (Levis) முதலியவற்றைத் தேர்ந்தெடுக்கிறோம்.

கலாச்சார உணர்வுகளை மதிக்காமல் எங்களில் சில சகோதரர் பெண்களிடம் நடந்துகொண்டதால் நீங்கள் மிகவும் புண்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்காக நான் வருத்தம் தெரிவிக்கிறேன். ஆனால், திருச்சபையானது இன்றைய இந்திய சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்தியுள்ளது என்பதை நீங்கள் மறக்கலாகாது. பெண்களை இழிவுபடுத்திய பல சமூகத் தீமைகளுக்கெதிராக மிஷனரிகள் போராடியுள்ளனர்.

இறுதியாக, நாங்கள் ஏன் ஆதிவாசிகள் மற்றும் ஏழைகளிடம் செல்கிறோம் என்று கேட்டிருக்கிறீர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்பொழுதும் ஏழைகள் மற்றும் தேவையுள்ளோரிடம்தான் முதலாவது சென்றார். எங்கள் எஜமானரின் காலடிகளை நாங்கள் பின்பற்ற வேண்டாமா? ஆம், சில வேளைகளில் செல்வந்தரும், செல்வாக்குள்ளோரும் கர்த்தரிடம் வரலாம், ஆனால் அது ஏழை மக்கள் வருவதைவிட மிகக் கடினமானது. எனினும், உங்கள் இல்லத்துக்கு நாங்கள் வரவேண்டுமென நீங்கள் விரும்பினால், நான் முதல் நபராக வந்து உங்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வேன்.

நீங்கள் வன்முறையை நம்பியிருப்பதால் நான் துக்கப்படுகிறேன். இயேசு தீமையை நன்மையினால் வெல்லும்படி போதித்தார். அவர், உங்களுக்காக ஜெபிக்கவும் உங்களை

ஆசீர்வதிக்கவும் கட்டளையிட்டுள்ளார். இக்கடிதம் உங்களது சில சந்தேகங்களைத் தெளிவுபடுத்தியிருக்குமென நம்புகிறேன்.

கடவுள் உங்களை நேசிக்கிறார், அவரை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களது பாவத்துக்காக மரித்தார் என்பதையும், நீங்கள் விசுவாசித்தால் அவர் உங்களுக்குப் புதுவாழ்வைத் தருவார் என்பதையும் மறவாதேயுங்கள். எங்கள் ஜெபங்களில் எப்பொழுதும் நீங்கள் இருப்பீர்கள்.

அன்புடன்,

மிஷனரி

அத்தியாயம் 12

புலம்பல்கள்

மிஷனரிகளின் கதறல்

“என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன்” - எசேக் 34:15

நாம் 21-ம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டுகளுக்குள் நுழைந்திருக்கிறோம். எல்லைகள் சுருங்குகின்றன; தூரங்கள் குறைகின்றன. தொடர்பு தொழில்நுட்பம் எல்லைமீறி வளருகின்றது. இந்த மாற்றங்கள் மிஷனரிப் பணியில் பெரிய விளைவுகளை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளன. முன்னர் உட்பகுதியில் இருந்த கிராமங்களெல்லாம் இப்பொழுது சாலை வசதிகளினிமித்தம் எளிதில் செல்லக்கூடியவையாக மாறிவருகின்றன. ஒரு காலத்தில் நாட்டில் இணைப்பின்றி இருந்த பகுதிகளெல்லாம் இப்போது கைபேசிகளினால் இணைக்கப்பட்டுள்ளன. அரசின் நல்ல திட்டங்கள்மூலம் ஏழை மக்கள் பயனடைகின்றனர். நம் நாட்டின் தொலைவிடங்களில் எது நிகழ்ந்தாலும், தீவிரமாகச் செயல்படுகின்ற நமது இந்திய ஊடகங்கள்மூலம் ஒளிபரப்பப்படுகின்றன. பாரம்பரிய இந்தியக் கிறிஸ்தவர்கள் செல்வந்தராகி மிஷனரிப்பணியைத் தாங்கக்கூடிய செல்வாக்குள்ள நிலையில் உள்ளனர். மாற்றங்களை ஏற்றுக்கொள்வதும், அதற்கேற்றாற்போல் செயல்படுவதுமே இன்றைய தேவை.

மிஷனரிப்பணியில் ஒரு குறிப்பிட்ட மாதிரியை நீண்ட காலமாகப் பின்பற்றுவது மிக அபூர்வம். இவ்வுண்மையைக் காணத்தவறும் தலைவர்கள், உலகெங்கும் அடித்துச்செல்லும் மாறுதல்களாகிய அலையின் பின்னால் மறைந்து போவர். வாழ்வின் காலாச்சார மற்றும் சமூக-பொருளாதார பகுதிகளில் ஏற்பட்டுவரும்

மாறுதல்களுடன் இணைந்து செல்வதற்கு, மிஷனரிப்பணியிலும் தேவையான மாற்றங்கள் செய்யப்படவேண்டும்.

இந்திய நற்செய்திப் பணிக்கு 20-ம் நூற்றாண்டு மிகவும் கடினமானது. 1947-ல் இந்தியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல வெளிநாட்டு மிஷனரி நிறுவனங்கள் தங்களது பணிக்களங்களையும் ஊழியங்களையும் தகுதிவாய்ந்த இந்தியர் கையில் ஒப்படைத்துவிட்டு, தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். சுதந்திரத்திற்குப்பின் 1950 களிலிருந்து உள்நாட்டு மிஷனரி இயக்கங்கள் வளர்ந்தன. இவையெல்லாம் இந்திய மிஷனரிப் பணியின் வரலாற்றில் தற்செயலாக நிகழ்ந்தவை அல்ல. தேவன்தாமே வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பி, இந்திய திருச்சபையை ஒரு மகிமையான ஆரம்பத்துக்குள் வழிநடத்தி வருகிறார்.

சென்ற நூற்றாண்டின் முடிவிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும், ஒரு குறிப்பிட்ட மக்கள் குழு அல்லது ஒரு குறிப்பிட்ட பணியை மட்டும் மையமாகக்கொண்டு சிறிய இயக்கங்கள் தோன்றியுள்ளதைக் காண்கிறோம்.

இந்திய மிஷனரிப் பணிகள் இம்மட்டும் நெடுந்தூரம் வந்துள்ளதற்காய் தேவனைத் துதிப்போம்.

ஆனால், இத்தனை முன்னேற்றங்கள் இருந்தும், இந்தியாவில் மிஷனரி இயக்கங்கள் செய்ய வேண்டியவை இன்னும் ஏராளம் உண்டு. இன்னும் சந்திக்கப்படாத பல மக்கள் குழுக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும்; இன்னும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டிராத மக்கள் இலட்சக்கணக்கானோர் உள்ளனர்.

சாத்தானின் கோட்டைகளைத் தகர்த்து மக்களை மீட்க ஒரு சேனை யாக முன்னேறிச் செல்லும் நாம் நமது மிஷனரி இயக்க நிர்வாகத்தில் பயன்படுத்தும் முறைகளையும் திட்டங்களையும் குறித்து கவன மாயிருத்தல் அவசியம். மிஷனரிப்பணி என்பது அபாயகரமானதும், சில நேரங்களில் ஆபத்தானதுமான ஆவிக்குரிய யுத்தமாக இருந்தாலும், தலைவர்களாகிய நாம் விபத்துகளைக் குறைப்பதற்கு நம்மால் இயன்றவற்றைச் செய்ய வேண்டும்.

மிஷனரிகளைக் குறித்து என் மனதை வருத்துகின்ற சில காரியங்களை வெளிக்கொணர விரும்புகிறேன். இங்கே நான் பகிர்ந்துகொள்வது முற்றிலும் என் சொந்தக்கருத்து; எந்தவொரு இயக்கத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இவை கடந்த இரு பத்தாண்டுகளாக சிறிதும் பெரிதுமான பல்வேறு மிஷனரி

இயக்கங்களின் மிஷனரிகளுடனான எனது தனிப்பட்ட சந்திப்புகளிலிருந்து நான் கற்றவை.

மேய்ப்பனா நிர்வாகியா?

"தூய ஆவியானவரின் ஊழியத்தை" நாம் எவ்வாறு நிர்வாகம் செய்யமுடியுமென நான் அடிக்கடி வியந்ததுண்டு. ஒரு பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கலாம்; ஓர் அலுவலகத்தை நிர்வகிக்கலாம்; ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கலாம். ஆனால், தேவன் சில மனிதர்களிடையே பரிசுத்த ஆவியானவர் மூலம் கிரியை செய்து ஓர் இயக்கம் தோன்றும் போது, அதை எப்படி நிர்வகிக்க முடியும்? இங்கேதான் பிரச்னை ஆரம்பமாகிறது என்றெண்ணுகிறேன். வேதாகமத்தில் கிறிஸ்தவ தலைமத்துவத்துக்குச் சிறந்த உவமையாக "மேய்ப்பனின் ஊழியம்" கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இயேசு தம்மைத்தாமே ஒரு நல்ல மேய்ப்பன் என்று சொன்னார் (யோவா 10:11).

தேவன் தாவீதைத் தமது இருதயத்திற்கேற்ற மனிதனாகக் கண்டதற்கு அடிப்படைக் காரணம் அவன் தனது விலையேறப் பெற்ற உயிரை அற்பமான ஆட்டுக்குட்டிகளுக்காகக் கொடுக்கத் துணிந்திருந்தான். இதுவே இன்றைய நாளின் தேவை. கிறிஸ்தவ இயக்கங்களின் தலைவர்களுக்கு இயேசுவை போன்ற மேய்ப்பனின் இருதயம் தேவை. இன்றைய நாளில் கிறிஸ்தவ இயக்கங்களில் இப்படிப்பட்டவர்களைக் காண்பதரிது. அப்படியே இருந்தாலும் மிகச் சிலரே உள்ளனர். சில தாலந்துகள், சமூக உயர்நிலை அல்லது உயர் கல்வித்தகுதி போன்ற சிலவற்றின் அடிப்படையில் மக்கள் தலைமைத்துவ இடத்துக்கு உயர்த்தப்படுகின்றனர்.

பணியாளர்களுக்காகத் தங்கள் சொந்த வாழ்வைத் தியாகம் செய்யத் துணியும் தலைவர்கள் எங்கே?

நான் சிறிதளவு மிகைப்படுத்திச் சொன்னால், ஆழமான அர்ப்பணிப்புள்ள மிஷனரிகளுக்கு, நுட்பமாகக் கண்காணிக்கப்படுதலோ, மேலாண்மை செய்தலோ அவசியமில்லை. ஊழியத்தில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காதபோது, அவர்களுக்கு ஊக்குவித்தலே தேவை; அல்லது அவர்கள் பல்வேறு வியாதிகளால் வருந்தும்போது உற்சாகமூட்டும் வார்த்தைகளே இன்று அவசியம்.

நிர்வாகம் செய்பவரின் உதவிகள்

1 கொரி 12:28 – "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது

போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், **ஆளுகைகளையும்,** பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்."

"ஆளுகை" என்பது ஓர் ஊழியம் என்பதை நாம் மறக்கக் கூடாது. எந்தவொரு ஊழிய அமைப்பிலும் இது ஒரு முக்கியமான அங்கமாகும். (மத் 24:45; தீத்து 1:7) மிஷனரி பணிக்களச் செய்திகளைச் சேகரிப்பதும், தேவையிலிருக்கும் மிஷனரிகளுக்கு வேண்டிய பொருட்களை வழங்குவதும் நிர்வாகம் செய்பவர்களின் பணிகளாகும். இதுவே நிர்வாகத்தின் மிக முக்கிய பணி. ஆனால், இந்தப் பதவி தங்களையே பேணிக்கொள்ளும் மக்களால் தவறாகப் பயன்படுத்தப்பட முடியும். மூலதனம் அவர்களிடமிருப்பதால், அவர்கள் மக்கள்மேல் அதிகாரஞ்செலுத்தவும், வேதத்திற்கு மாறான முறையில் வழங்கவும் வாய்ப்புள்ளது. இந்தப் பதவி தவறாகப் பயன்படுத்தப்படும்போது, மிஷனரிகள் பாடனுபவிக்கின்றனர். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் 6-ம் அதிகாரத்தில் "ஆளுகை" ஊழியத்தின் மூலம் விதவைகளும் பயனடைந்தனர் என்ற சிறந்த எடுத்துக்காட்டைக் காண்கிறோம்.

நாங்கள் சம்பளம் தருகிறோம், நீங்கள் வேலை செய்யுங்கள்

இக்குழப்பத்திற்குப் பகுதி காரணம் மேலை நாடுகளிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட முதலாளித்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட தலைமைத்துவ மாதிரிகளும் தொடர்பணிகளும்தான். முதலாளித்துவ-நிர்வாக அமைப்பானது அறிக்கைகள் மற்றும் விளைவுகளின் அடிப்படையில் செயல்படுகிறது. ஆனால், இயேசு ஒருபோதும் அறிக்கைகளையோ விளைவுகளையோ மையப்படுத்தவில்லை. தேவ சித்தத்தையும், தேவ மகிமையையும் மட்டுமே அவர் முக்கியப்படுத்தினார். அறிக்கைகள், தாங்குவோரின் எதிர்பார்ப்புகள், அடுத்துள்ள தலைவர்களின் நுட்பமான கண்காணிப்பு ஆகியவை அடிக்கடி மிஷனரிகளின் மனநிலையைப் பாதிக்கின்றன. மாறாக, நாம் ஏற்கனவே பார்த்தபடி, பங்காளர்குழு மிஷனரிப் பணி நிகழும் இடத்துக்கு வெகு தொலைவில் இருப்பதால் சிலநேரங்களில் அறிக்கைகள் கட்டாயம் அவசியம். அவர்களுக்கு அவ்வப்போது செய்திகளைத் தெரிவிக்கவேண்டும். எனவே, மிஷனரிகள் அனுப்புவது தன்னார்வமாய்ச் செய்யப்பட வேண்டும். அதை அவர்கள் பெறும் நிதி உதவியுடன் சமன்படுத்தக்கூடாது.

மிஷனரியும் ஒரு பலவீனமான பாண்டம். அவருக்குத் தேவ

வார்த்தையிலிருந்து இடைவிடாத வழிநடத்துதலும், போஷாக்கும் கிடைக்கவேண்டும். நாம் ஒருவரையும் ஊழியஞ்செய்வதற்குப் பணத்தின் மூலம் வசீகரிக்க முடியாது. கிறிஸ்தவ தலைவர்களுக்கிடையே இத்தகைய மனப்பாங்கைக் காணும்போது, உண்மையுள்ள ஒரு மிஷனரியின் உள்ளம் சோர்ந்துவிடுகிறது. ஏனெனில் அவர் பணத்தையும், உலகையும் உதறித் தள்ளிவிட்டுத்தான் மிஷனரியாக வந்திருக்கிறார் என்பதை மறக்கக் கூடாது.

அதே நேரத்தில் ஊழியர்களும், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாமை, அடுத்த தலைமுறைத் தலைவர்களை உருவாக்காமை, ஆவிக்குரிய தேக்கம், போன்ற தவறுகளை செய்கின்றனர். இத்தகைய தவறுகளையெல்லாம் பட்டயத்தோடு அல்ல, மேய்ப்பனின் கோலோடுதான் கையாள முடியும்.

ஓர் உணர்வுள்ள உக்கிராணக்காரன்

சில நேரங்களில் பணிக்களத்தின் நடைமுறைச் சூழ்நிலை மற்றும் மிஷனரியின் மனது ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல் இல்லாமற்போகிறது. கீழ்நிலையிலிருந்து உயர்ந்து தலைமை பொறுப்பிற்கு வந்தத் தலைவர்கள்கூட உடன் சகோதரரின் தேவைகளைச் சொல்லத் தவறுகின்றனர். பணிக்கள மிஷனரிகளுக்கும் நிர்வாகத் தலைவர்களுக்குமிடையேயுள்ள தூரம் அதிகரிக்கும்போது, கூடுதல் விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் தேவைப்படுகின்றன. மேலும், இயக்கத்தைச் சிறியதாக வைத்துக்கொள்ளல் ஞானமாகும். இயக்கம் விரிவாகும்போது, குடும்ப ஐக்கியத்தை இழந்துவிடுகிறது. தனிப்பட்ட கலந்துரையாடல்களின் இடத்தை விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் பிடித்துக் கொள்கின்றன. இது பல இதயக் காயங்களுக்கு மூலகாரணமாக அமைகின்றது.

ஏசா 10:2, "அநியாயமான தீர்ப்புகளைச் செய்கிறவர்களுக்கும், கொடுமையான கட்டளைகளை எழுதுகிறவர்களுக்கும் ஐயோ!"

நமக்கு விதிமுறைகள் தேவை; ஆனால், சட்டங்கள் மட்டும் எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு அல்ல என்பதை நாம் அறிய வேண்டும். நாம் விதிமுறைகளை மட்டும் சார்ந்திருந்தால், அவை மேலாளர்களால் மிஷனரிகளை நசுக்குவதற்குத் தவறாகப் பயன்படுத்தப்பட முடியும். ஒரு மேய்ப்பனின் இதயத்துடன் செயல்படுத்தப்படும்போது விதிமுறைகள் நல்லதுதான். அதேநேரத்தில் மிஷனரிகள், எதிரிகளின் துன்புறுத்தலினாலல்ல, அதிகார மனப் பாங்கினாலும், நிர்வாகத்தின் அழுத்தங்களாலும் பாடனுபவித்து

மரித்தார்கள் என்பதை எதிர்காலம் நமக்குக் கூறும். இக்கால மிஷனரிகள் பலரின் உடல்நலக் குறைவுக்கு, சட்டதிட்டங்களில் கண்டிப்பாயிருக்கும் சில மேலாளர் அல்லது நிர்வாகத்தினால் ஏற்பட்ட ஏதோ ஒருவித மனநல பாதிப்புதான் காரணமென நான் ஆணித்தரமாக நம்புகிறேன்.

இதை உணர முயற்சியுங்கள் - நமது நிர்வாகக் குழுக்கள் மற்றும் ஆலோசனைக்குழுக்களில் எடுக்கும் சில தீர்மானங்களால் பலர் மரித்திருக்கின்றனர் அல்லது மெதுவாக மரித்துக்கொண்டிருக்கின்றனர், என்ற இவ்வுண்மையை உங்களால் ஒத்துக்கொள்ள முடிகிறதா? எச்சரிக்கை அவசியம்! நிர்வாகத்தில் நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்தின் பின் இருக்கும் நோக்கம் நல்லதாக இருக்கலாம். தேவனுடைய வீட்டின் உக்கிராணக்காரராகிய நாம் தனிநபராகவோ அல்லது கூட்டு அமைப்பாகவோ எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்தின் விளைவுகளைக் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்திருக்க வேண்டும். கிறிஸ்துவை எதிர்ப்போர் நமது தேவாலயங்களை எரிக்கும்போது நாம் போராட நினைக்கிறோம். ஆனால், நமது இந்திய மிஷனரி இயக்கங்கள் சரிசெய்ய வேண்டிய காரியங்களோ ஏராளம்.

எல்லாருக்கும் எல்லாம்

"நமக்கு விதிமுறைகளை உருவாக்க மட்டுமல்ல, அவைகளை உடைக்கவும் தெரிந்திருக்க வேண்டும்" என்று அன்னை தெரசா ஒருமுறை சொன்னார்கள். மேய்ப்பனான தலைவன் (Shepherd Leader) எப்பொழுது விதிகளை தளர்த்த வேண்டும் என்றறி வான். சட்டங்களை விட்டுக் கொடுக்காத சில மேலாளர்கள் இக்காரியங்களை 'ஒத்துப்போகுதல்' என்று கருதுகின்றனர். அவர்களது அதிகாரபூர்வமான பதவி, கல்வித்தகுதிகள் மற்றும் உறுதியான தர்க்கங்கள் காரணமாக அவர்களது வாக்குவாதங்கள் சிறந்தவையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சுதந்திரமாக விட்டால், இத்தகைய தலைவர்கள் இயக்கத்தை மெதுவாக மரணத்திற்கு நேராக நடத்துவார்.

சில நேரங்களில் நிகழ்வதுபோல், விதிகளை வளைத்தலும் முறித்தலும் தனிநபரை ஆதரிப்பதற்காக இருக்கக்கூடாது; அது ஒருவருக்கு இருக்கும் பதவி அதிகாரத்தைக் காட்டுவதாகவும் இருக்கக்கூடாது. ஆனால், அது அன்பும் மனதுருக்கமும் நிறைந்த இருதயத்தினின்று புறப்பட்டுவரவேண்டும். இயேசு மனதுருக்கத்தினால் நிறைந்து, நியாயப்பிரமாணத்துக்கு மாறாகக் குஷ்டரோகியைத்

தொட்டார்; மரித்துப்போன வாலிபனின் சவப்பெட்டியைத் தொட்டார். அந்தச் செயலின்மூலம் சடங்காச்சாரத்தின்படி அவர் தீட்டுள்ளவர் ஆவார் என்று அறிந்திருந்தார். அவரது இருதயம் விதவையின் துயர நிலையை எண்ணி வருந்தியது. **இயேசுவின் இருதயம் ஒரு நல்ல மேய்ப்பனின் இருதயம்.** வேதனைப்படும் ஆட்டிற்காக தான் மரிப்பதையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார். அவரைப்போல நாமும் மந்தையை வழிநடத்த வேண்டுமென எதிர்பார்க்கிறார். இதனால் தான் அவர் உயிர்த்தெழுந்தபின் பேதுருவிடம் "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார் (யோவா 21:17).

நமது பணியாளர்கள் வியாதியில் நலிந்திருக்கும்போதும், சில அற்பமான தவறுகளுக்காக எல்லாராலும் குற்றஞ்சாட்டப்படும்போதும், அவர்களே குற்றவுணர்வுடன் பாரமடைந்திருக்கும் போதும், நாம் என்ன செய்கிறோம்?

ஒரு தலைவர் மிஷனரியுடன் நேரம் செலவிடும்போதும், அடிக்கடி அவரைச் சந்திக்கும்போதும், அவரது பணியைத் தன தாக்கிக்கொள்ளும்போதும், அவரை அன்பாக வழிநடத்தும்போதும், மென்மையாகத் திருத்தம் செய்யும்போதும் அவர் தேவனது இருதயத்திற்கேற்ற ஒரு மேய்ப்பனாக இருப்பார். அவர் தனது ஆடுகளின் வேதனையான புலம்பல்களைக் கேட்பார்.

பணம்

மலைச்சரிவில் வெட்டியெடுத்தாலும்,
மலையடிவாரத்தில் கழுவப்பட்டாலும்,
நான் மனிதரின் அடிமை அல்லது அதிகாரி.

என்னைச் சம்பாதியுங்கள், உங்களை ஆசீர்வதிப்பேன்;
என்னைத் திருடுங்கள், உங்களைச் சபிப்பேன்;

என்னை உறுதியாகப் பற்றிப்பிடியுங்கள்,
நண்பனைப்போல உங்களைப் பிடித்திருப்பேன்.

எனக்காகப் பொய்யுரையுங்கள், மரியுங்கள்,
பேராசைப்படுங்கள், என்னை நாடுங்கள்

தேவதூதனாக அல்லது பிசாசாக
நீங்கள் உருவாக்குவதுபோல் நானிருப்பேன்.
– யாரோ.

அத்தியாயம் 13

தேவன் மறுக்கும்போது..

பலிபீடத்திலிருந்து கதறல்

"இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்."
ஏசாயா 1:13

தேவன் நம்முடைய காணிக்கைகளை மறுப்பாரா? அவர் நம்மையும் நமது காணிக்கைகளையும் இருக்கும் வண்ணமாக ஏற்றுக்கொள்ளமாட்டாரா? அவருடைய அன்பு நிபந்தனையற்றது தானே? என்ற பல கேள்விகளுக்கு வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

ஏசாயா 1:13 – "இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும் சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்."

ஆண்டவர் இங்கு இஸ்ரவேல் ஜனங்களின் காணிக்கைகளை ஏற்க மறுப்பதை நாம் காண்கிறோம். அவர்களது பலிகளில் அவர் பிரியப்படவில்லை. அசுத்தமான வாழ்க்கை வாழும் அவர்களின் நன்கொடைகளை தேவன் புறக்கணித்தார்.

ஆண்டவரை அறியாத ஜனங்கள் தங்கள் குல தெய்வங்களை பிரியப்படுத்தப் பலிகளைச் செலுத்துவதுண்டு; அப்படி செலுத்துவதால், தங்கள் வாழ்க்கை வளம் பெறும் என்றும், தங்களின் வியாபாரம் செழிக்கும் என்றும் நம்புகின்றனர். இவ்வகையான சிந்தனைகள் இன்று கிறிஸ்தவ வட்டாரங்களிலும் ஊடுருவிவிட்டது. கண்மூடித்தன மான நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் உண்மையான விசுவாசத்தை வகையறுப்பது சற்று கடினமே.

சில நாட்களுக்கு முன் ஒரு கூடுகைக்காக, அதிகமான ஒரு தொகை தேவைப்பட்டது. அத்தேவையை சந்திக்க பல லட்சங்களைக் கொடுக்கும் ஒரு சிலர் இருந்தால் போதும் என்று எண்ணினேன். ஆனால் தேவன், இது வேதாகம முறை இல்லை என்று எனது தவறை உணர்த்தினார்.

தேவனுடைய பார்வையில் உண்மையான இருதயத்தோடு கொடுக்கும் சிறு காணிக்கை மிகவும் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது. உலகம் அதிகப் பணம் கொடுக்கும் நபர்களை பாராட்டும், ஆனால் நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை அவசியம்.

தேவன் சிறு காணிக்கைகளை வைத்துதான் பெரிய காரியங்களைச் செய்கிறார். அநேக வேளைகளிலே, நாம் நம்மிடம் உள்ள சிறிய காரியங்களை அற்பமாய் எண்ணுவதால், தேவனுடைய நிறைவான ஆசீர்வாதத்தைப் பெறத் தவறிவிடுகிறோம். நம்மிடத்திலுள்ளவைகளிலிருந்தே தேவன் நம்மை ஆசீர்வதிக்கிற வராய் இருக்கிறார்.

வெகுமதிகளை வாங்க மறுத்த தேவ மனிதர்கள்:

வேதாகமத்தில், மனிதரிடமிருந்து வெகுமதிகளை வாங்க மறுத்த நான்கு தேவ தாசர்களைக் குறித்து நாம் தியானிப்போம்.

1. ஆபிரகாம்

ஆதி 14:22 - “ஆபிரகாம் சோதோமின் ராஜாவைப் பார்த்து, ஆபிரகாமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக் கொள்ளேன்.”

இங்கே சோதோமின் ராஜாவின் உதாரத்துவமான வெகுமதிகளை ஏற்க ஆபிரகாம் மறுத்தார். தன்னுடைய ஆசீர்வாதத்தின் காரணராகிய தேவாதி தேவனை, சோதோமின் ராஜா அசட்டை செய்யக் கூடும் என ஆபிரகாம் கருதினார். தேவன் ஒருவர் மட்டுமே நம் வாழ்வில் மகிமைப்பட வேண்டும். “நான் தான் உன்னை பெரியவனாக்கினேன்.” என்று ஒருவரும் நம்மைப் பார்த்து கூறும் நிலை ஒருபோதும் வரக்கூடாது. இப்பேர்ப்பட்ட மனப் பாங்குடன் ஒருவர் காணிக்கை அளித்தால், அதை நிராகரித்தல் சாலச் சிறந்தது. ஒருவேளை நமக்குத் தேவைகள் இருக்கலாம்; நமது குழந்தைகளுக்கு உதவிகள் தேவைப்படலாம்; ஆனால், “வேண்டாம்” என்று மறுப்பதே மேன்மை. மனிதர்களின் கையில் விழுவதைப் பார்க்கிலும் நெருக்கத்தில் இருப்பது நல்லது.

நாம் வாழும் நுகர்வோர் கலாச்சாரத்தில், தேவைகள் எப்போதுமே இருந்துகொண்டுதான் இருக்கும். இப்பேர்ப்பட்ட சூழலில் காணிக்கைகளை வேண்டாம் என்று கூறுவதற்கு ஒரு ஆவிக்குரிய பலம் அவசியம். வேதமா, உலகமா என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

2. எலிசா

2 இராஜா 5:15,16 – "உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ள வேண்டும் என்றான். அதற்கு அவன்: நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான்."

2 இராஜா 5:26 – "பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும் திராட்சைத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?"

இங்கு தீர்க்கனான எலிசா ஒரு சீரிய நாட்டு உயர் அதிகாரியினிடம் காணிக்கை வாங்க மறுப்பதைப் பார்க்கிறோம். அவன் மறுத்ததன் காரணத்தையும் சொல்வதை நாம் காண்கிறோம் (2 இராஜா 5:26). எலிசா ஒரு மோசமான காலகட்டத்தில் வாழ்ந்துவந்தான். இஸ்ரவேல் தேசத்தில் பாகாலின் ஆராதனை ஓங்கியிருந்தது. யேகோவாவின் நாமம் மறக்கப்பட்ட காலமது. அத்தகைய காலத்தில், தேவ நாம மகிமை ஒன்றைமட்டுமே தீர்க்கன் எலிசா வாஞ்சித்தார். நல்ல அமைதியான வாழ்க்கையையோ, உலகச் செழிப்புகளையோ, அவர் நாடவில்லை. அவரது உதவியாளரான கேயாசியோ தன் எஜமானுக்கு நேர்மாறாக நடந்தான். நடந்த எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த கேயாசி தன் எஜமானர் தவறு செய்துவிட்டார் என்று கருதியிருக்கக்கூடும். அவருக்கும் தேவை பல இருந்திருக்கலாம். பொருளாதாரத்தில் தடுமாறிக் கொண்டிருந்திருக்கலாம். "எலிசா ஞானமாய் நடந்து கொள்ளவில்லை" என கேயாசி நினைத்திருக்கலாம்.

இன்றும் அப்பேர்ப்பட்ட சூழலில் நாம் நிற்கிறோம். தேவனுடைய சபையிலே பணம் ஆளுகை செய்வதை நாம் பார்க்கிறோம். இதனால் விக்கிரக ஆராதனையும் தலைவர்களை முகஸ்துதி செய்யும் கலாச்சாரமும் பெருகிவிட்டது. நமது சங்கங்கள் பணம்படைத்தவர்களால் ஆளுகை செய்யப்படுகிறது.

லஞ்ச ஊழல்கள் இன்று சர்வசாதாரணம் (சபைக்குள்ளே). விசுவாசிகளின் காணிக்கைகள் ஒரு தனி மனித சாம்ராஜ்யங்களை உருவாக்கிவருகிறது. எங்குமே உண்மையில்லாத நிலை. இன்றுள்ள ஊழியர்கள்மேல் ஒரு தணிக்கை (Audit) எடுப்போமானால் அநேகர் கம்பி எண்ண நேரிடும்.

நம்மைச் சுற்றியுள்ள அவிசுவாசிகளின் நீதியின் தரத்திற்குகூட நாம் வராவிட்டால், கிறிஸ்துவை எவ்வாறு பிரசங்கிக்க முடியும்? ஊழல் நிறைந்த பிரசங்க மேடையிலிருந்து தேவனுடைய பரிசுத்த வார்த்தையை பிரசங்கிப்பது தேவதூஷணத்துக்கு சமமாகும். நம் சாட்சி தேவனுடைய நாமத்திற்கு இழுக்கை உண்டாக்கிவிட்டதல்லவா? நம்முடைய பரிதாபமான வாழ்க்கை முறை ஜனங்களை கிறிஸ்துவுக்கு தூரமாக்கிவிட்டதல்லவா?

நம்முடைய வாழ்வைக் குறித்தும், எதிர்காலத்தை குறித்தும் மட்டுமே சிந்திக்கின்றோமே! இது கண்ணீர் சிந்துகிற காலம்! தேவனுடைய இரக்கத்திற்காய் கெஞ்சுகிற நேரம்! உங்களுடைய தேவைகளை குறித்து கவலை கொள்ள வேண்டாம். உங்களுடைய ஊழியத்தை நிறைவேற்றுங்கள். நமக்கு நேரம் இல்லை. நாகமானின் நன்கொடைகளுக்கு மயங்க வேண்டாம்.

3. தானியேல்

தானியேல் 5:17 – தானியேல் ராஜ சமூகத்தில் பிரதியுத்தரமாக, “உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்; இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து, இதின் அர்த்தத்தைத் தெரிவிப்பேன்.”

“உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்” இப்படித்தான் ராஜாவுக்கு பதில் அளிப்பதா? தானியேலுக்கு என்ன ஆயிற்று? ராஜாவுக்கான கனத்தை அவன் கொடுக்க வேண்டாமா?

இராஜாதி ராஜாவை சேவித்த தானியேல் இப்போது ஒரு ராஜாவின் முன் நிற்கிறான். அவன் மேலான அதிகாரத்திற்கு உட்பட்டவன் என்பது அவனுக்குத் தெரியும். எனவே அஞ்ச அவசியமில்லை! மரணமேயானாலும் அதை சந்திக்க ஆயத்தமாயிருந்தான் தானியேல். பரலோகத்திற்கு பிரியமான புருஷனான (தானி 10:11) தானியேலின் வாழ்க்கைத்தரம் அவ்வண்ணமாயிருந்தது.

பாபிலோனின் ராஜா தானியேலின் பதிலைக் கேட்டு அதிர்ச்சியடைந்திருக்கக்கூடும். இவ்வகையான நன்கொடைகளை

தாம் விரும்பும் நபருக்கு அளிப்பது ராஜாக்களின் பண்பாக இருந்தது. தானியேலோ அவைகளை மறுப்பதன் மூலம், ஒரு செய்தியைப் பகிர்ந்துகொண்டான். ராஜா தன்னை மகிழ்விக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய தாசனாகிய தானியேலுக்கு மனிதர்களின் முகஸ்துதி தேவையில்லை. ஜனக்கூட்டத்தின் அங்கீகரிப்பும் அவசியமில்லை. தானியேல் சர்வவல்லவரின் ஊழியக்காரன். இராஜாதி ராஜாவை மகிமைப்படுத்தாத ராஜாவிற்கு கனத்தைக் கொடுக்க தானியேல் மறுத்தான்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தானியேலைப் போன்ற ஊழியர்கள் இன்று எங்கே? நம் சபைகளும், சங்கங்களும் இத்தகைய தலைவர்களால் நிரப்பப்படவேண்டும். பணபலத்துக்கும், பகட்டு கௌரவத்திற்கும் மரித்து, தேவனுடைய வார்த்தையை அதிகாரத்தோடு முழங்கும் தேவ தாசர்கள் இன்று தேவை.

4. பேதுரு

அப் 8:20-"பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது".

தேவனுடைய கிருபைகளை பணத்தினால் வாங்கிவிடலாம் என்று சீமோன் என்ற மாயவித்தைக்காரன் எண்ணினான். தேவனுக்கே லஞ்சம் கொடுத்துவிடலாம் என்று நினைத்தான். அவனுக்கு இறைச் சேவை செய்ய ஆவல். அவனிடம் பணம் இருந்ததால் தாமதிக்க மன மில்லை. இன்றும் அநேகர் தங்களிடம் பணம் இருப்பதால், ஊழியம் செய்துவிடலாம் என்று எண்ணுகின்றனர். அவர்களுக்கு ஊழியம் செய்ய "விருப்பம்" உண்டு, எனவே ஒரு சபையைத் தொடங்குகிறார்கள். தேவனுக்கு நாம் விருப்பத்தோடு காரியங்களைச் செய்வதில் தவறில்லை. ஆனால், பணம் இருப்பதால், களத்தில் இறங் கிவிடுவோம் என்ற எண்ணம் அபாயகரமானது. நாம் தேவனைச் சார்ந்து இருக்க வேண்டும். தேவ ஆவியானவரின் வழிநடத்துதலைச் சார்ந்து இருக்க வேண்டும். தற்போதுள்ள சபையிலோ, இயக்கத்திலோ சில பிரச்சனை இருக்கின்றது என எண்ணி தனி ஊழியம் ஒன்றைத் துவங்க வேண்டாம். உங்களை நிரூபிப்பதற்காக ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற கட்டாயத்திற்காக, எதையும் செய்ய வேண்டாம். அப்படிச் செய்வோமாகில், அதின் விளைவுகள் துக்ககரமாக முடியலாம். தேவன் கிருபையுள்ளவர்தான், ஆனால் நாம் விதைப்பதை நாம்தான் அறுக்க வேண்டும்.

சகலத்தையும் அதினதின் காலத்திலே செய்யும் தேவனிடத்தில் உங்களை முழுவதுமாய் அர்ப்பணியுங்கள். தேவன் அவரின் சித்தத்தின்படியே உங்களைக் குறைவில்லாமல் நடத்துவார்.

நாம் கடைசிக் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இக்காலகட்டத்தில் பணத்தைக் குறித்த கவனம் நமக்கு அவசியம். உலகத்தோடு ஒத்துப்போகும் வாழ்க்கை நமக்கு வேண்டாம்.

பண பலத்தினால் வழி மாறிய ஊழியங்கள் பல, அதிக பணத்தால் திசை மாறிய ஊழியர் அநேகர் எனவே, போதுமென்ற மனதுடன் கூடிய தேவ பக்தியோடு நமது ஊழியத்தை நிறை வேற்றுவோம். ஏழையோ பணம்படைத்தவரோ, வித்தியாசம் பாராமல் வேதத்தைப் பறைசாற்றுவோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 14

வரப்போகும் நியாயத்தீர்ப்பு

சிங்காசனத்திலிருந்து கதறல்

"கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?" யோவேல் 2:11

நாம் கடைசி நாட்களில் வாழ்கிறோம். ஒருவேளை, இது மனித வரலாற்றின் இறுதி அத்யாயமாய் கூட இருக்கலாம். வேதத்தில் முன்னறிவிக்கப்பட்ட எல்லாத் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறி முடியும் நிலையில் உள்ளன. உலகம் முழுவதும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. குமாரன் வாசலுக்கு வெகு அருகில் வந்துவிட்டார். அவரைச் சந்திக்க நாம் ஆயத்தமா? தேவன் நம்மிடத்தில் கொடுத்திருக்கிறவர்களை ஆயத்தப்படுத்திவிட்டோமா?

நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கண்டும் கேட்டும் இருக்கிறோம். கிருபையும் சத்தியமும் அவர் மூலமாய் உண்டாயின (யோவா 1:17). அவர் அன்பே உருவானவர். நம் சத்துருக்களை நேசிக்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும், அவர்களை ஆசீர்வதிக்கவும் அவரே நமக்கு கற்றுக்கொடுத்தார். இயேசுவின் முதலாம் வருகையில் தேவனின் மனதுருக்கத்தையும் அன்பினையும் வெளிப்படுத்தினார். அவர் அடிமையின் ரூபமெடுத்து அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாக வந்தார். இரண்டாம் வருகையிலோ எக்காள சத்தத்தோடும் பரமசேனையின் திரளோடும் நியாயாதிபதியாக யூத இராஜ சிங்கமாய் வருவார். அந்நாளைத் தீர்க்கதரிசிகள் "கர்த்தருடைய நாள்" என்று அழைத்தனர்.

பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்:

ஏசா 2:12 – "எல்லாம் தாழ்த்தப்படும்பொருட்டு சேனைகளுடைய **கர்த்தரின் நாளானது** பெருமையும் மேட்டிமையுமானவை எல்லாவற்றின்மேலும், உயர்ந்தவை எல்லாவற்றின்மேலும் வரும்."

ஏரே 46:10 – "இது சேனைகளின் கர்த்தராகிய **ஆண்டவரின் நாளும்**, அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது."

யோவேல் 2:11 – "கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்; அவருடைய பாளயம் மகா பெரிது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது; **கர்த்தருடைய நாள்** பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?

மேற்கண்ட எல்லா வசனங்களிலும் தீர்க்கதரிசிகள் "கர்த்தருடைய பெரிய நாளின்" வருகையை முன்னறிவித்தனர்.

இயேசுவும் தமது பிரசங்கத்திலே இந்நாளைக் குறிப்பிட்டுள்ளார்:

மத் 24:36 – "**அந்த நாளையும்** அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர, மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்."

அப்போஸ்தலர்கள் பவுலும் பேதுருவும் தங்களது நிருபங்களில் இந்நாளைக் குறிப்பிட்டுள்ளனர்:

1 தெச 5:2 – "இரவிலே திருடன் வருகிற விதமாய்க் **கர்த்தருடைய நாள்** வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்."

2 பேது 3:10 – "**கர்த்தருடைய நாள்** இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம்; பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்."

நாம் இந்நாளைச் சந்திக்கப்போகிறோமென்று வேதம் தெளிவாகப் போதிக்கிறபடியால், இந்த "கர்த்தருடைய நாளுக்காக" நாம் ஆயத்தமாயிருத்தல் ஞானமாகும். கடைசி நாட்களில் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய ஐந்து முக்கிய பகுதிகளை விவரிக்க விரும்புகிறேன்.

1. உங்களைத் தூய்மையாகக் காத்துக்கொள்ளுங்கள்

வெளி 22:11 – "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்."

நாம் மென்மேலும் கிறிஸ்துவைப்போல் மாறுகிறோமா?

நாம் பரிசுத்தத்தில் வளருகிறோமா? நாம் மனிதரிடம் குறைவாகப் பேசவும், தேவனிடம் அதிகமாகப் பேசவும் கற்றிருக்கிறோமா? நமது இருதயங்களிலிருந்து எல்லாவிதக் கசப்பையும் பிடுங்கியெறிந்து விட்டோமா? சகோதரனுக்கெதிராக வெறுப்பெண்ணங்கள் இன்னும் நம்மிடம் உண்டா? –இவை ஆராய்ந்து பார்க்க வேண்டிய கேள்விகள்.

இறுதி நாட்களில் மக்களில் இரு பிரிவினர் இருப்பர். அவர்கள் திருச்சபைக்குள்கூடக் காணப்படுவர். ஒரு பிரிவினர் மென்மேலும் அசுத்தமாவர்; இன்னொரு பிரிவினர் மென்மேலும் பரிசுத்தமடைவர். இரண்டாவது பிரிவினர் சிறுபான்மையினர்; அவர்களைக் காண்பது கூட அரிதாயிருக்கலாம். ஆனால் முந்தைய பிரிவினர் எல்லா இடங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் இருப்பர். அவர்கள் தலைவர்களாக, பொறுப்பாளர்களாக, மேலாளர்களாக மற்றும் ஆலோசகர்களாக இருந்து, எல்லா முக்கிய பதவிகளையும் வகிப்பர். கர்த்தருக்காகப் பரிசுத்தமாய் வாழ்வதை அவர்கள் வெளிப்படையாக எதிர்ப்பதை நாம் ஒருபொருட்டாக எண்ண வேண்டியதில்லை. அவர்களது அசுத்தத்தைக் குறித்து நாம் அக்கறை கொள்ளவும் தேவையில்லை. அது நம்மை அசைக்கக்கூடாது. நாம் கர்த்தரை நோக்கிப் பார்த்து, இன்னும் அவரைப்போல் மாறவேண்டும். நாம் தூய்மையின்மேல் தூய்மையை நாட வேண்டும்.

ரோமர் 1:24, 25ல் வேதம் கூறுவதைக் கவனியுங்கள். "இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை **அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.** தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென் றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென்"

தேவனே அவர்களை அவர்களது இச்சைக்கு ஒப்புக்கொடுத்தார். இக்காரணத்தால்தான் வெளிப்படுத்துதல் 22:11 -ல் நாம் அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்கிறதை வாசிக்கிறோம். இது அவனை நியாயத்தீர்ப்புக்கு முழுமையாக்குகிறது. பலர் நினைப்பது போல் தேவன் தமது பரிசுத்தத்தின் தரத்தைக் குறைக் கவேயில்லை. அவர்கள், நாம் "புது உடன்படிக்கையின் காலத்தில்" இருக்கிறோம் என்கின்றனர். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் தூய ஆவியான வரின் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை அவர்கள் உணரத்

தவறிவிட்டனர் (யோவா 16:8). தேவனிடம் பொய் சொன்ன போது அனனியாவுக்கும் சப்பீராளுக்கும் நிகழ்ந்ததையும் நாம் வாசிக்கிறோம் (அப் 5:1-10).

நாம் பரிசுத்தத்தில் உலகோடு ஒத்துப்போனால், நாம் தேவனுக்காகச் செய்தவையெல்லாம் வீணாகிவிடும். இதைவிடக் கொடிய காலங்கள் வருவதை தேவனுடைய வார்த்தை எச்சரிக்கிறது.

2 தீமோ 3:1-5 - "மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு."

"பரிசுத்தத்திற்காக" நிற்பதற்கு அதிகமான கிருபையும் பலமும் தேவை. பாவம் பெருகியிருப்பதால், பாவஞ்செய்வது சுலபமாகவும் எளிதாகவும் உள்ளது. ஒரு விரல் தொடுதலில் பாவ சிற்றின்பங்கள் கிடைக்கின்றன. ஆனால் கறைப்பட்ட இவ்வுலகில் அவரது பிரதி நிதிகளாகிய நாம் பாவத்திற்க்கெதிராக நிற்க வேண்டும்.

2. தேவ சித்தத்தை நிறைவேற்றுங்கள்

மத் 7:21 - "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை"

நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்பும் அனைத்தையும் நாம் நிறைவேற்றுகிறோமா? நமது "அழைப்பு" என்னவென்று நமக்குத் தெரியுமா? இப்பூமியில் நமது வாழ்வின் நோக்கம் என்ன வென்று நமக்குத் தெரியுமா? நமக்குக் குறிக்கப்பட்ட பந்தயத்தில் நாம் தொடர்ந்து ஓடுகிறோமா?

கர்த்தரிடமிருந்து பெற்ற ஊழியத்தை நிறைவேற்றுவதில்

அப்போஸ்தலன் பவுல் மிகவும் கவனமாயிருந்தார். **தேவ அழைப்புக்கும் சித்தத்துக்கும் இசைந்தபடி நமது வாழ்வை ஒழுங்கமைத்தல் அதிமுக்கியத்துவமானது.** நமது விருப்பப்படியும் சித்தப்படியும் அல்ல; தேவனது சித்தப்படியே செய்ய வேண்டும்.

ஆனால் இன்றைய நாளில் பல மக்களும் ஊழியர்களும் தங்களது சுய விருப்பங்களின்படியே செயல்படுவதைக் காண்கிறோம்.

பின்வரும் வசனத்தை நோக்குங்கள்:

மத் 7:22 - "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்."

தீர்க்கதரிசனஞ்சொல்லுதல், பிசாசுகளைத் துரத்துதல் மற்றும் பலத்த காரியங்களைச் செய்தல் ஆகியவை தீயச் செயல்கள் அல்ல. ஆனால், இம்மக்கள் தேவனது திட்டத்திற்கும் நோக்கத்திற்கும் வெளியே அவற்றைச் செயல்படுத்தினர். கிறிஸ்தவ வாழ்வில் தேவனோடு நடக்க ஆரம்பித்த நாட்களில் நாம் அவருக்காகப் பல காரியங்களைச் செய்வதில் ஆர்வங்காட்டியிருக்கலாம். ஆனால், தேவனது சத்தத்தையும் அவரது சித்தத்தையும் அறிந்துகொள்ள கற்றபிறகு, நம் வாழ்வில் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிதலும் அதை நிறைவேற்றுதலுமே நாம் செய்ய வேண்டியவை.

நாம் பிறரைக் காப்பியடித்தல் அல்லது பிறருடன் போட்டியிடுதல் கூடாது. ஒவ்வொருவரும் தனிப்பட்ட கிருபைகளையும் வரங்களையும் பெற்றிருக்கிறோம். மேற்கண்ட வசனத்திலுள்ள (மத் 7:22) மக்கள் பிறர் பார்க்கும்படியான ஊழியங்களைத் தெரிந்தெடுத்தனர். கிறிஸ்தவ ஊழியத்தில் மற்றவர் பார்க்க வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்கிற ஊழியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நாம் அவரது சித்தத்தை நிறைவேற்ற அழைக்கப்பட்டிருக்கிறோமே தவிர மற்றவர் பாராட்டுக்காக அல்ல.

லூக் 7:30- "பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ... தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்."

பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மதத் தலைவர்களும் எல்லாவற்றையும் மக்கள்

காணவேண்டுமென்று செய்தார்கள். தேவனிடமிருந்து புகழ்ச்சி பெறுவதைவிட மக்களிடமிருந்து பாராட்டு பெறுவதில் அதிக அக்கறை காட்டினர். இத்தகைய மக்களை இயேசு தனது உபதேசங்களில் கடிந்துரைத்துள்ளார். தங்களது வாழ்வில் தேவனது சித்தத்தைப் புறக்கணித்துக்கொண்டேயிருப்பவர்களுக்கு நியாயத் தீர்ப்பு காத்திருக்கிறது.

3. தூய உள்நோக்கங்கள் உடையவராயிருங்கள்

1 கொரி 4:5 – "ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, **இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்;** அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்."

தேவன் நமது இருதயத்தின் நோக்கங்களின்படி நம்மை நியாயந்தீர்ப்பார். நாம் வெளியே சில காரியங்களைச் செய்யலாம், ஆனால் தேவனுக்கு நமது உள்நோக்கங்கள் முக்கியமானவை.

நாம் செய்கிறதை ஏன் செய்கிறோம் என்பது விலைமதிக்க முடியாத கேள்வி.

நான் ஏன் தேவாலயத்திற்குச் செல்கிறேன்?

நான் ஏன் தசமபாகம் கொடுக்கிறேன்?

நான் ஏன் ஊழியம் செய்கிறேன்?

நான் ஏன் பிரசங்கம் பண்ணுகிறேன்?

நான் ஏன் நன்கொடை வழங்குகிறேன்?

நான் ஏன் இப்புத்தகத்தை எழுதுகிறேன்?

நான் ஏன் கோபப்படுகிறேன்?

நான் ஏன் புத்திமதி சொல்கிறேன்?

அந்த வேலையை நான் ஏன் தேர்ந்தெடுக்கிறேன்?

நான் ஏன் பணியிட மாற்றத்தை நாடுகிறேன்?

இவை நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்விகள். தேவன் ஒவ்வொருவருக்கும் அவர்களது இருதயத்தின் நோக்கங்களின்படி பலனளிப்பார்.

1 பேதுரு 5:2-4, "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, **கட்டாயமாய் அல்ல,** மனப்பூர்வமாயும்

அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் **ஆளுகிறவர்களாக அல்ல**, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

நமது வாழ்விலும் ஊழியத்திலும் நமக்குப் பின்வரும் நோக்கங்கள் இருக்கலாம்.

1. நாம் மக்களது பாராட்டையும் ஏற்றுக்கொள்ளலையும் பெறுவதற்காகப் பணியாற்றலாம்.
2. நாம் பண ஆதாயத்திற்காக வேலை செய்யலாம்.
3. நாம் கட்டாயத்தின்பேரில் பணிபுரியலாம்.
4 நாம் தேவனுக்காகப் பணி செய்யலாம்.

தேவன் நமது வாழ்வின் நான்காவது நோக்கத்தை மட்டுமே கனப்படுத்துவதால், எப்பொழுதுமே நமது நோக்கங்களைச் சரிபார்த்தல் நல்லது.

மக்கள் நமது செயல்களால் நம்மை நியாயந்தீர்ப்பர், ஆனால், தேவன் நமது நோக்கங்களால் நம்மை நியாயந்தீர்ப்பார்.

4. வார்த்தைகளைக் குறித்து கவனமாயிருங்கள்

மத் 5:22 - "தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்."

மத் 12:36 - "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங்குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மனிதரிடம் நாம் கொஞ்சமாகவும் கவனமாகவும் பேசுவோம். நமது வீணான வார்த்தைகள் ஒவ்வொன்றுக்காகவும் நியாயந்தீர்க்கப்படுவோம் என்பதை மறக்க வேண்டாம். இந்நாளில் நம்மில் பலர் நாம் பேசும் வீணான வார்த்தைகள் எல்லாவற்றிற்கும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதையறியாமல் மனம்போல வார்த்தைகளைப் பேசுகிறோம்.

நாம் ஒருமுறை பேசுமுன் இருமுறை சிந்திக்க வேண்டும். வார்த்தைகளைத் தேர்ந்தெடுப்பதிலும் நமக்கு கவனம் தேவை. "எனக்கு நல்ல உள்ளம் இருக்கிறது. அந்த வார்த்தைகளை என்னை

யறியாமல் சொல்லிவிட்டேன்" என்று நாம் சொல்லக்கூடாது. உள்ளத்தின் நிறைவினாலேயே வாய் பேசும் (மத் 12:34).

நமது வார்த்தைகளில் நாம் கவனமாயிராவிட்டால் நாம் தேவனுக்குத் தொண்டு செய்யத் தகுதியற்றவர்கள். நமது நாவை அடக்க முடிந்தால், நமது முழு உடலையும் அடக்கக்கூடியவர்களாயிருப்போம் (யாக் 3:2).

5. தீமையை நன்மையினால் மேற்கொள்ளுங்கள்

ரோமர் 12:21 - "நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு."

சகோதர அன்பில் குறைவுபடாதிருப்போம். நமது ஐக்கியங்களிலும் குழுக்களிலும் நாம் ஒருவருக்கொருவர் அளவற்ற அன்பினால் நிறைந்திருப்போம். ஒருவருக்கெதிராகவும் தீங்கெண்ணம் கொள்ளாதிருப்போம். தன் சகோதரனை நேசிக்காதவன் கொலைபாதகன் என அன்பின் அப்போஸ்தலன் கூறுகின்றார் (1 யோ 3:15). நான் காண்கிற ஒரு சகோதரனை நேசிக்காவிடில் காணாத தேவனிடத்தில் நான் எப்படி அன்புகூர முடியும்? (1 யோ 4:20). என் சகோதரனின் மீறுதல்களை நான் மன்னிக்க முடியாதிருந்தால், தேவன் எனது பாவங்களனைத்தையும் மன்னிக்க நான் எதிர்பார்ப்பதெப்படி? (மத் 18:35).

கடைசி நாட்களில் நாம் அன்பைக் காணமுடியாது (2 தீமோ 3:3). பிதாவானவர் தமது ஒரே பேறான குமாரன் கிறிஸ்து இயேசுவைப் பலியாக்கினதினாலே காண்பித்த மாறாத அன்பை, தேவப்பிள்ளைகளாகிய நாம் உலகிற்குக் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இவ்வுலகில் பூரணமானவர்கள் ஒருவருமில்லை. கசப்பின் வேர் எதுவும் நம்மிலிருந்து முளைத்தெழும்பாதிருப்பதாக. நாம் தீமையை நன்மையினால் வெற்றி கொள்வோம். நமக்கெதிராக ஒருவர் பேசினால், நமது ஜெபத்தின்மூலம் அவரை ஆசீர்வதிப்போம். நமது மனதில் பழிவாங்கும் எண்ணத்தைத் தேக்கி வைக்காதிருப்போம். நாம் எப்பொழுதும் ஒவ்வொரு விசுவாசியின் சாதகமான பக்கத்தை மட்டும் பார்ப்போம். தேவன் அவர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார்; அவர்களது ஆவிக்குரிய நிலையை விமர்சிக்க நாம் யார்? தேவன் அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார்; அவர்களைக் குற்ற வாளிகளாக்க நாம் யார்? (ரோ 8:33,34). எனவே காலத்திற்கு

முன்னே நியாயந்தீர்க்காதிருப்போம். கர்த்தரின் நாளுக்காகக் காத்திருப்போம்.

ரோமர் 14:10-12, "நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிற தென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்."

நான் புரிந்துகொள்ள உதவும்!

உலகம் வேதனைகளாலும் பாடுகளாலும் நிறைந்துள்ளது;

கர்த்தாவே! ஆறுதலளிப்பவனாயிருக்க **எனக்குதவும்.**

உலகம் நம்பிக்கையின்மையினாலும்
நிராசையினாலும் நிறைந்துள்ளது;

கர்த்தாவே! நம்பிக்கையூட்டுபவனாயிருக்க **எனக்குதவும்.**

உலகம் வெறுப்பாலும் பகைமையாலும் நிறைந்துள்ளது;

கர்த்தாவே! உண்மை அன்பை வெளிக்காட்ட **எனக்குதவும்.**

உலகம் கசப்பாலும் பொறாமையாலும் நிறைந்துள்ளது;

கர்த்தாவே!அதற்குப் பக்தியைக் காட்ட **எனக்குதவும்.**

உலகம் துரோகத்தாலும் வஞ்சனையாலும் நிறைந்துள்ளது;

கர்த்தாவே! உண்மையான பற்றுதலை
வெளிப்படுத்த **எனக்குதவும்.**

உலகம் பெருமூச்சுகளாலும் கண்ணீராலும் நிறைந்துள்ளது;

கர்த்தாவே! அதன் கதறுதலைப் புரிந்துகொள்ள **எனக்குதவும்.**

அத்தியாயம் 15

வெற்றி முழக்கம்

முதல் இரத்தசாட்சியின் கதறல்

“அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு...” அப் 7:55

மனிதரின் ஆத்துமாக்கள் பிசாசின் மாபெரும் சொத்து. பிசாசு பணத்தையும் அதிகாரத்தையும் குறித்துக் கவலைப்படுவதில்லை. அவன் மனிதரின் ஆத்துமாக்களைப்பற்றியே அதிகம் கவலைப்படுகிறான். நாம் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும் ஒவ்வொரு ஆத்துமாவும் பிசாசுக்கு ஒரு பெரிய இழப்பு. நாம் கிறிஸ்துவுக்காக ஓர் ஆத்துமாவை ஆதாயப்படுத்தினால், அந்த ஆத்துமாவை மீண்டும் பெறுவதற்காகப் பிசாசு தன்னாலியன்ற அனைத்தையும் செய்வான். பற்ற வைத்த நெருப்பை அணைக்கவும், அர்ப்பணிப்புகளை ஒன்றுமில்லாமலாக்கவும் அவன் முயற்சிப்பான்.

வானமண்டலங்களில் மனிதரின் ஆத்துமாக்களுக்காகக் கடும் யுத்தம் நடக்கிறது. பிசாசின் முதல் தந்திரம் நம்மைப் பழைய பாவநிலைக்குக் கொண்டு செல்வதுதான் என்பதை நாம் அறியவேண்டும். அவன் நமது பழைய பாவங்களை நினைப்பூட்டி குற்றப்படுத்துவான்; கிறிஸ்துவுக்கள் நமது தற்போதைய நிலையை மறக்கச் செய்வான். மட்டுமல்ல, விசுவாசிக்கு எதிராக யுத்தஞ்செய்ய பிசாசு உலகைப் பயன்படுத்துகிறான். இவ்வுலகின் தற்போதைய அதிபதி பிசாசு. அவன் உலக அமைப்புகளை ஆளுகை செய்கிறான். இயேசுதாமே பிசாசை உலகத்தின் அதிபதி என்றார் (யோவா 14:30).

நமது சமுதாயங்களில் நாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று நாமனைவரும் விரும்புகிறோம். அது ஒவ்வொரு நபரின் மனரீதியான அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. நமது

குடும்பங்கள், உடன் பணியாளர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியில் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால், இயேசு தமது சீடர்களிடம் மனிதர் உங்களைப் பகைப்பார்கள் என்று எச்சரித்தார் (யோவா 15:18). சீடர்களை மக்கள் வெறுத்தது மட்டுமல்ல, முழு உலகமே அவர்களுக்கு எதிராக வந்தது. சபை வரலாற்றின்படி, யோவானைத் தவிர இயேசுவின் சீடர்கள் அனைவரும் இரத்த சாட்சிகளாய் மரித்தனர். இயேசுவைப் பின்பற்றுவதற்கு நாம் செலுத்த வேண்டிய விலைக்கிரயம் உண்டு.

நாம் கிறிஸ்துவுக்கு நம்மை அர்ப்பணித்திருந்தால், உலகம் நம்மை ஏற்றுக்கொள்வது கூடாத காரியம்.

நாம் நமது சாட்சியின் ஆழத்தைக் குறைத்து, உலகத்தோடு சில காரியங்களில் ஒத்துப்போனால் உலகம் மகிழ்வுடன் நம்மை ஏற்றுக்கொள்ளும்.

"என் இரட்சகருக்கு முட்கிரீடத்தைக் கொடுத்த உலகிடமிருந்து பொற்கிரீடத்தை ஏற்றுக்கொள்வது எனக்குத் தூரமாயிருப்பதாக" என்றார் சார்ல்ஸ் ஸ்பர்ஜன்.

இயேசு சொல்வதை பாருங்கள், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவா 16:33).

விசுவாசிக்கெதிராக உலகம் வரலாம்; பிசாசு திட்டம் தீட்டலாம்;
மாம்சம் போரிடலாம்;

ஆயினும் உலகை ஜெயித்த இயேசு நம்மோடு உள்ளார்.

அவர் பிசாசை சிலுவையில் ஜெயித்தார் (கொலோ 2:15).

எனவே திடன்கொள்ளுங்கள்!

ஸ்தேவான் - சபையின் முதல் இரத்தசாட்சி

நாம் ஸ்தேவானைப்பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் வாசிக்கிறோம். அவன் பந்தி விசாரணைக்கு நியமிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவன் (அப் 6:5); பின்னர் நற்செய்திப்பணியாளனாக மாறினான். **அவன் விசுவாசமும், பரிசுத்த ஆவியும், கிருபையும் ஞானமும் நிறைந்தவன்.** அவன் ஆழமான அர்ப்பணிப்பும், வல்லமையான ஆவியும் உடையவனாயிருந்தான். இதனால் உலகம் அவனை அதிகம் வெறுத்தது. அவன் பரிசுத்தஆவியின் நிறைவுள்ளவனாய் உலகை எதிர்த்தான். ஆனால் உலகம் இத்தகைய நபரை ஒரு வினாடி

கூட சகிக்கமுடியவில்லை. நரகம் முழுவதும் அவனுக்கெதிராக வந்தது; அவன் புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் முதல் இரத்தசாட்சி ஆனான்.

உலகம் வெறுப்பதைக் குறித்துக் கவலைப்படாமல் நிறைவான வாழ்க்கை வாழ்ந்த ஸ்தேவானின் வாழ்வினைத் தியானிப்போம்.

1. ஸ்தேவான்–விசுவாசம் நிறைந்தவன்

அப் 6:5 – "அப்பொழுது விசுவாசம் நிறைந்தவனாகிய ஸ்தேவானைத் தெரிந்துகொண்டார்கள்."

தேவனை விசுவாசிப்பது ஒன்று, விசுவாசத்தால் நிறைந்திருப்பது மற்றொன்று. ஸ்தேவான் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீட்பின் கிருபையில் விசுவாசம் வைத்திருந்தது மட்டுமல்ல, விசுவாசத்தால் நிறைந்தவனுமாயிருந்தான். நாமும் விசுவாசத்தால் நிறைந்திருப்பது அவசியம். இயேசுவின் நாமத்தின் வல்லமையில் நமக்கு விசுவாசம் தேவை. அவரின் இரத்தத்தின் வல்லமையில் நமக்கு விசுவாசம் தேவை.

இயேசு கிறிஸ்துவினால் விடுவிக்கக்கூடாத பாவம் என்று ஒன்றுமேயில்லை. அனைத்து நாமங்களுக்கும் மேலான நாமம் இயேசுவின் நாமம். அவரின் நாமத்தில் நமக்கு விடுதலை உண்டு, சுகம் உண்டு. இயேசுவின் பெயரைக் கேட்டதும் பிசாசு நடுங்குகிறான். இயேசுவின் நாமத்தில் வல்லமையுண்டு. ஆ! எத்தனை ஆச்சரியமான நாமம்!

இயேசுவின் நாமத்தில் நாம் பின்வரும் ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம்.

பிரசன்னத்தின் வாக்குறுதி

மத் 18:20 – "இரண்டு பேராவது மூன்று பேராவது **என் நாமத்தினாலே** எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்."

பராமரிப்பின் வாக்குறுதி

யோவா 14:14 – "நீங்கள் **என் நாமத்தினாலே** எதைக் கேட்பீர்களோ... அதைச் செய்வேன்."

வல்லமையின் வாக்குறுதி

யோவா 14:26 – "**என் நாமத்தினாலே** பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப்

போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்."

பிலிப் 2:9-11 - "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கு... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."

நமது ஆவிக்குரிய வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் வரலாம். ஆனால் எப்பொழுதுமே வெற்றி நமது பக்கம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் இடைவிடாமல் கழுவப்படுங்கள். தோல்விகள் உங்களை மனந்தளரச் செய்ய வேண்டாம். ஒவ்வொரு தோல்வியிலும் ஒரு விசுவாசப்பாடம் உண்டு! **ஒவ்வொரு தோல்வியையும் தேவன் ஆசீர்வதிக்கும் தருணமாக மாற்ற முடியும்! தவறுதலை தீரச்செயலாகவும், சோதனையையும் ஜெயமாகவும், பின்னடைவை வெற்றியாகவும் மாற்றக்கூடியது விசுவாசமே ஆகும்.**

விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவா 5:4); விசுவாசமே சத்துருவின் அக்கினி அம்புகளுக்கெதிராக நம்மைப் பாதுகாக்கும் கேடகம் (எபே 6:16).

நமது வார்த்தைகள் நம்பிக்கையினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்திருப்பதாக. நம்பிக்கையற்ற வார்த்தைகளையோ கூற்றுகளையோ பயன்படுத்தவேண்டாம். விசுவாசத்தால் நிறைந்த வார்த்தைகளையே பேசுவோமாக (நீதி 18:21).

2. ஸ்தேவான் - தூய ஆவியால் நிறைந்தவன்

அப் 6:5 - "அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்த வனாகிய ஸ்தேவானைத் தெரிந்து கொண்டார்கள்."

நாம் எப்பொழுதும் தூய ஆவியால் நிறைந்திருக்கவேண்டும். தூய ஆவியானவரின் உதவியின்றி ஒரு முழுமையான வாழ்வை நடத்துவது முடியாத காரியம். எல்லா நேரமும் எல்லா நாளும் நாம் அவரையே சார்ந்திருக்க வேண்டும். அவரது மெல்லிய அமர்ந்த சத்தத்தைக் கேட்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஏசா 30:21 - "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்."

பாவம் பல மடங்கு பெருகியிருப்பதை இந்நாட்களில் நாம் காண்கிறோம். எனவே, நமக்குத் தூய ஆவியானவராகிய தேவனின் அபிஷேகமும் பிரசன்னமும் இன்னும் அதிகம் தேவை. நாம் தாகத்தோடு கேட்கவேண்டும். நாம் நாள்தோறும் குறைந்தது அரை மணி நேரமாவது ஆவியில் நிறைந்து ஜெபிக்க வேண்டும். உங்கள் பயணங்களைத் தூய ஆவியானவராகிய தேவனுடன் ஐக்கியங்கொள்ளும் நேரமாக்கிக் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் ஒரு வல்லமை அல்ல, அவர் ஒரு நபர். அவரோடு ஐக்கியங்கொள்ளுங்கள். அவர் உங்கள் நண்பராக இருக்கட்டும். உங்களது கவனத்தை அவர்மீது திருப்புங்கள். ஆவியின் நிறைவு ஒரு குறிப்பிட்ட நாளின் அனுபவம் அல்ல. அது அனுதின அனுபவம். "கர்த்தாவே! என்னை இன்னும் அதிகமாய் நிரப்பும்! இன்னும் கூடுதலாக நிரப்பும்!" என்பது நமது கதறுதலாக இருக்கட்டும்.

எலிசா எலியாவிடம் எப்படி வேண்டினான் என்று பாருங்கள்.

2 இரா 2:9 - "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்."

எலிசா எலியாவைவிடக் கடினமான காலங்களில் தான் வாழ்வதை அறிந்தான். எலியாவின் அபிஷேகம் நிறைந்த ஊழியத்தின் போதுகூட யேசபேல் இன்னும் சிங்காசனத்தில் இருந்தாள். எனவே அவன் ஆவியின் இரட்டிப்பான வரத்தை நாடினான். ஆ! இன்றைய இளைஞர் தலைமுறை பல மடங்கு அபிஷேகத்தை எவ்வளவாய் நாட வேண்டும்.

விடமுடியாத தீய பழக்கங்கள் பெருகுகின்றன. தற்கொலைகள் அதிகரிக்கின்றன. வெற்றி, பிசாசின் அரசின் பக்கம் இருப்பதுபோல் தோன்றுகிறது. நமது வழிகள், அணுகுமுறைகள், திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் தோல்வியுறலாம். ஆனால், ஆவியானவரின் செயல்கள் ஒருபோதும் தோல்வியுறாது. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சக 4:6).

பிசாசுக்கு எதிராக நிற்பதற்குக் கூடுதல் அபிஷேகத்தை நாடும் எலிசாக்கள் எங்கே?

21 ஆம் நூற்றாண்டின் ஸ்தேவான்கள் எங்கே?

3. ஸ்தேவான் - கிருபையினால் நிறைந்தவன்

அப் 6:8, "ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் (கிருபையினாலும்) நிறைந்தவனாயிருந்தான்."

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் தூய ஆவியினாலும் மட்டும் நிறைந்திருக்கவில்லை, கிருபையினாலும் நிறைந்திருந்தான்.

அவன் கிருபையினால் நிறைந்திருந்தான். அதன் பொருள் என்ன?

அவன் தேவ கிருபையினால் வல்லமை பெற்ற ஒரு வாழ்வை நடத்தினான்.

தேவகிருபையின் மூலமாக மட்டுமே நாம் வெற்றியுள்ள வாழ்வு நடத்த முடியும்.

கிருபை என்பது பாவம் செய்வதற்கு உரிமைச் சீட்டு அல்ல, ஆனால், ஒருவர் தனது சுய பலவீனங்களைக் குறித்த நுண்ணிய விழிப்புணர்வு பெறச் செய்வது. அது தேவனை முழுவதும் சார்ந்திருத்தலைக் குறிப்பது.

பல தடவைகள் நாம் தீர்மானம் எடுத்து, அதன்படி வாழ முயற்சிக்கிறோம். தீர்மானங்கள் நல்லவை, முக்கியமானவை. ஆனால், தீர்மானத்தைக் கடைப்பிடிக்க நமது மாம்ச பலத்தை நாம் நம்ப முடியாது; நாம் தோற்று விடுவோம். நாம் தோல்வியுறும்போது, நாம் மனச்சோர்படைகிறோம். ஒருவேளை நமது சுய பலத்தை சார்ந்து நமது தீர்மானங்களின்படி வாழ முற்படும்போது நாம் சுயநீதியுள்ளவர்களாக மாறிவிடுவோம்.

நமது ஆண்டவரின் கிருபை மட்டுமே நம்மைத் தாழ்மையுடன் காத்துக்கொள்ளும், தாழ்மையுள்ள ஒரு நபர் மென்மேலும் கிருபையைப் பெற்றுக் கொள்வார்; கர்த்தரையே சார்ந்திருக்கும்போது வெற்றி வாழ்வு எளிதாகுகிறது.

யாக் 4:6 – “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

கிருபை என்பது நமது வாழ்விலும் ஊழியங்களிலும் தேவனது வல்லமையை வெளிப்படுத்தும் ஒரு வாகனமாகும்.

அது ஒருபோதும் நமது முயற்சிகளைப் பற்றியது அல்ல, தேவனைப்பற்றியது. முயற்சிகள் அவசியம், ஆனாலும், அவர் மூலமாகத்தான் நாம் காரியங்களைச் சாதிக்க முடியும். அவரே நமக்குத் பலம்கொடுக்கிறவர். அவரே நமது அர்ப்பணிப்புகளைக் காத்துக்கொள்ள நமக்கு உதவுகின்றவர்.

நமது ஆவிக்குரிய பெருமையினால்தான் நம்மில் பலர் தோல்வியுற்ற கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைக் கவனியுங்கள்:

2 கொரி 12:9 –"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்."

நாமும் அப்போஸ்தலன் பவுலுடன் சேர்ந்து, "நான் பெலவீனன். ஆனால், கர்த்தர் என்னைப் பலப்படுத்துகிறார். நான் செய்ய வேண்டுமென கர்த்தர் விரும்புகிறதைச் செய்வதற்கு அவரே என்னைப் பலப்படுத்துகிறார். நான் கவலைப்பட மாட்டேன். என் பலவீனங் களைக்குறித்து நான் பெருமைப்படுவேன்" என்று பாடுவோம்.

பிலிப் 4:13 – "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."

4. ஸ்தேவான் - ஞானம் நிறைந்தவன்

அப் 6:10 – "அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று."

ஸ்தேவான் ஞானத்தால் நிறைந்திருந்தான். அவன் வேதாகமத்தைக் கற்றுத்தேர்ந்திருந்தான். அவன் தேவ மனிதரின் வீரச்செயல்களைத் தியானித்திருந்தான். அவன் ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோரின் வாழ்க்கையினைத் தியானித்திருந்தான். ஆலோசனைச் சங்கத்தின் முன் அவனது சொற்பொழிவு இவ்வுண்மையை உறுதிப்படுத்துகிறது (அப் 7). அவன் இஸ்ரவேலரின் வரலாற்றை முழுமையாக அறிந்திருந்தான். ஸ்தேவானது உரையின் ஞானத்திற்கெதிராக எதிர்ப்பாளர்கள் நிற்க முடியவில்லை (அப் 6:10).

அவன் பந்திவிசாரணை செய்ய நியமிக்கப்பட்டவன் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவன் அந்தச் சிறு பணியை தெய்வீக ஞானத் துடன் செய்தான். அவனுடைய வேலையை உத்தமமாய்ச் செய்தான்.

நாமும் நமது கடமைகள் அனைத்தையும் உத்தமமாய் நிறைவேற்ற வேண்டும். அப்பொழுதுதான் தேவன் நம்மைத் பயன்படுத்துவார். நாம் சிறிய காரியங்களையும் மிகுந்த ஞானத் துடன் செய்யவேண்டும். தேவன் ஸ்தேவானை வல்லமையாய்ப் பயன்படுத்த ஒருநாள் வந்தது. நமது வாழ்வில் தேவனது திட்டத்தை ஒருவரும் தடை செய்ய முடியாது. நாம் ஓர் இயக்கத்தில்

பணியாற்றிக்கொண்டிருக்கலாம். நாம் ஒரு கடினமான அதிகாரியின் கீழ் பணிசெய்யலாம். ஆனால், தேவன் உங்களை அங்கே வைத்திருக்கிறார் என்பதை மறவாதேயுங்கள். நாம் தேவனுடைய வசனத்தை இரவும் பகலும் தியானிக்க வேண்டும். தேவ வார்த்தை மூலமாகத்தான் நாம் தெய்வீக ஞானத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

தேவனுடைய வார்த்தையை உற்சாகத்துடன் வாசியுங்கள், நுனிபுல் மேய்வது போலல்ல. அங்கொன்றும் இங்கொன்றுமாக வாசிக்க வேண்டாம். கிரமமாக வாசியுங்கள். அது உங்களை மகிழ்விக்கட்டும். வேத வசனங்களை மனனம் செய்யுங்கள்.

தேவன் யோசுவாவுக்குச் சொன்னதைக் கவனியுங்கள்:

யோசுவா 1:7 – "என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமானதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதைவிட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக."

வேத வசனத்தின்படி வாழ்ந்தால் நீங்கள் எங்கு சென்றாலும் வெற்றிபெறுவீர்கள்!

உங்கள் பணியிடமாயிருக்கலாம்! உங்கள் குடும்பமாயிருக்கலாம்! உங்கள் தேர்வாக இருக்கலாம்! உங்கள் நேர்முகத்தேர்வாக இருக்கலாம்! எங்கு சென்றாலும் வெற்றி உங்களுடையதே!

தேவ வார்த்தையைக் கனப்படுத்துங்கள், தேவன் உங்களைக் கனப்படுத்துவார் (1 சாமு 2:30).

ஸ்தேவான் விசுவாசம், தூய ஆவி, கிருபை மற்றும் ஞானம் ஆகியவற்றால் நிறைந்திருந்தான்.

ஆனால், உலகம் அவனுக்குக் கொடுத்தது மரணம். ஸ்தேவான் வெற்றியாய் மரித்தான்! அவன் ஒரு போர்வீரனைப் போல் மரணமெய்தி திருச்சபையின் முதல் இரத்த சாட்சியானான். ஸ்தேவான் பெற்றிருந்த அதே ஆவியும் அதே அபிஷேகமும் தேவை. மனிதர் சொல்வதைக் குறித்து நாம் கவலைப்படவேண்டாம். மற்றவர்களின் கருத்துகளைக் குறித்து நாம் துயரப்படவேண்டாம். உலகம் என்ன நினைக்குமென்று நாம் யோசிக்க வேண்டாம். நாம் இயேசுவையே நோக்கி, நமது ஓட்டத்தை ஓடி முடிப்போம்.

எபி 12:1,2, "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும்,

நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்."

அல்லேலூயா!

ஒரு சேனை

தேவனுக்காக தேவ மகிமைக்காக,
சாட்சியாக காட்சியாக; பணிசெய்ய போராட;
செய்தி சொல்ல செயல்முறைபடுத்த,
ஜெபிக்க கதற;
செல்ல அனுப்ப; எழும்ப வீழ்த்த;
திட்டமிட தயார்செய்ய;
சண்டையிட போராட;
வாழ மரிக்க.
தேவனுக்காக தேவ மகிமைக்காக.

- D. J

முடிவுரை

இன்னும் எரிகிறது

ஆண்டு: 1999, இடம் : கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

நான் கோயம்புத்தூர் தொழில் நுட்ப கல்லூரியில் (CIT) கட்டிடப்பொறியியல் பட்டப்படிப்பின் மூன்றாம் ஆண்டில் பயின்று கொண்டிருந்தபோது, என் வாழ்வின் இக்கட்டான சூழ்நிலையைச் சந்தித்தேன். எனது நண்பர்கள் GRE, TOEFL, GATE போன்ற உயர் கல்விக்கான போட்டித் தேர்வுகளுக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் வளாகப் பணி சேர்க்கைகளுக்காகத் (Campus Recruitments) தயாராகிக் கொண்டிருந்தனர். நானோ குழப்பத்தில் இருந்தேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் என்ன தீர்மானம் எடுக்கவேண்டும்? நான் ஒரு கட்டுமான நிறுவனம் ஆரம்பிக்கலாமா? நான் ஒரு நிறுவனத்தில் வேலையைத் தெரிந்து கொள்ளலாமா? அல்லது உயர் கல்விக்குச் செல்லலாமா? - இக்கேள்விகள் அடிக்கடி என் மனதைத் தாக்கின. அப்பொழுது எனது தாயார், “நீ ஒருநாள் மிஷனரி ஆவாய். நீ பிறப்பதற்கு முன்பே உன்னைத் தேவனுக்கு அர்ப்பணித்துவிட்டேன்” என்று அடிக்கடி சொன்னது என் நினைவிற்கு வந்தது. இது இன்னும் என்னை குழப்பத்திற்குள்ளாக்கியது.

நான் மிஷனரி ஆகவேண்டும் என்ற எண்ணத்தை எனது பள்ளி நாட்களில் ஏற்றுக்கொண்டிருந்தாலும், கல்லூரியில் நுழைந்தபின் அது ஓரளவு மறைந்துவிட்டது. இதற்கிடையில் எனது சகோதரி ஒடிஷாவுக்கு மிஷனரியாகச் சென்றார்கள்; நிதி நிலைமையில் அவர்களுக்கிருந்த நெருக்கடியைப் புரிந்துகொண்டேன். ஒரு நல்ல வியாபாரம் செய்து நூற்றுக்கணக்கான மிஷனரிகளைத் தாங்குவது சிறந்தது என எண்ணினேன். மிஷனரி ஆகவேண்டும் என்ற எண்ணம் எனக்குத் நல்லதாக தோன்றவில்லை.

இக்குழப்பத்தின் உச்ச நிலையில் கர்த்தரின் ஆலோசனைக் காக ஜெபிக்க ஆரம்பித்தேன்.

"கர்த்தாவே! உமக்கு சித்தமாக இருந்தால் மட்டும் நான் மிஷனரியாகச் செல்வேன். எனது தாயார் அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதற்காக நான் செல்ல விரும்பவில்லை. எனினும் மிஷனரிப்பணிக்கு நான் பணம் கொடுப்பேன்" என்று அவரிடம் ஜெபித்தேன்.

கர்த்தரோ,

"மகனே, உனது பணம் எனக்குத் தேவையில்லை, **நீதான் எனக்கு வேண்டும்!"** என்றார்.

அப்பொழுது நான் என்னைத் முழுமையாக விட்டுக்கொடுத்து தேவனது திருசித்தத்துக்கு அர்ப்பணித்தேன், "கர்த்தாவே, எனது வாழ்வில் நீர் செய்ய விரும்புவதையெல்லாம் செய்யும். இனி உமக்காகவே நான்."

பிறகு இன்னொரு கேள்வி எழுந்தது, "கர்த்தாவே! நான் எங்கு செல்ல வேண்டும்?"

இக்கேள்வியை நான் ஆண்டவரிடம் கேட்ட சில நாட்களில் ஒரு வாலிபர் கூடுகையில் கலந்துகொண்டேன். ஆஸ்திரேலியா மிஷனரி கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு மகன்களாகிய பிலிப்பும் தீமோத்தேயுவும் ஒடிஷாவில் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட காலம் அது. கூடுகையில் நான் கடைசி வரிசையில் அமர்ந்திருந்தேன். பிரசங்கியார் வாலிபர்களுக்குச் சவாலிட்டுக்கொண்டிருந்தார்– **"ஆஸ்திரேலிய மிஷனரியையும் அவரது பிள்ளைகளையும் எரித்தவர்கள், அவர்கள் பற்ற வைத்த நெருப்பானது மிஷனரி களைக் கொன்றுவிட்டு அணைந்துவிடும் என்று எண்ணினர்; ஆனால், அவர்கள் வாழ்வில் பெரிய தவறைச் செய்துவிட்டனர். அவர்கள் பற்றவைத்த நெருப்பானது அணையப்போவதில்லை. அது தொடர்ந்து எரிந்துகொண்டேயிருக்கும். அது ஏற்கனவே எரிய ஆரம்பித்துவிட்டது. அது இங்கேயும் எரிந்து கொண்டிருக்கிறது. இங்கிருக்கும் பல இளைஞரை அந்த நெருப்பானது பற்றிக்கொள்ளும். அவர்கள் ஒடிஷாவுக்குச் செல்வார்கள்!"**

அவ்வளவுதான்! அந்த அக்கினி என்னையும் பற்றிக்கொண்டது!

நான் மனதில் தீர்மானம் எடுத்தேன். என்னை அர்ப்பணம் செய்தேன். எப்படியாவது நான் ஒடிஷாவுக்குப் போகவேண்டும். பிற நாட்டு மக்கள் நமது நாட்டுக்காக மரிக்கிறார்கள். நான் ஏன் என் நாட்டுக்காக மரிக்க கூடாது?

அதே அக்கினியுடன் இந்த வார்த்தைகளை எழுதுகிறேன்.

நமக்குத் தேவை எழுப்புதலின் அக்கினி!

அவசரத் தேவை சுவிசேஷ அக்கினி!

மிக அவசரத் தேவை சுத்திகரித்தலின் அக்கினி!

சோம்பலையும் சோர்வையும் தூக்கி எரியுங்கள்!

அசதியையும் மந்த நிலையையும் விட்டு விலகுங்கள்!

கேளிக்கைகளையும் களியாட்டுகளையும் உதறித் தள்ளுங்கள்!

இச்சைகளையும் கவர்ச்சிகளையும் விட்டு ஓடுங்கள்!

உலகத்தையும் அதன் ஆசைகளையும் விட்டுவிடுங்கள்!

பண ஆசையும் பதவி ஆசையும் சுட்டெரிக்கப்படட்டும்!

கோபமும், பொறாமையும், பகைமையும் சாம்பலாக்கப்படட்டும்!

தேவனுக்காக தேவையற்ற எல்லாம் எரிந்துபோகட்டும்!

இதே அக்கினிதான் அப்போஸ்தலர்களுடைய உள்ளங்களில் எரிந்துகொண்டிருந்தது. அவர்கள் கிறிஸ்துவுக்காகப் பாடனுபவித்தலை சிலாக்கியமாக எண்ணினர். புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் இரத்த சாட்சிகளின் கிறிஸ்தவம்.

நெருப்பு இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது!

நீங்கள் கிறிஸ்துவுக்காக மரிக்க ஆயத்தமா?

கிறிஸ்துவுக்காக ஓர் ஆத்துமாகூட ஆதாயப்படுத்தாமல் நூறு ஆண்டுகள் வாழ்ந்து பயன் என்ன?

ஆத்துமாக்களைக் குறித்த வாஞ்சை இல்லாமல் பட்டம் பல பெற்று பயன் என்ன?

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிராமல் வணிக சாம்ராஜ்யங்களை கட்டியெழுப்புவதினால் பயன் என்ன?

பயன் என்ன? லாபம் என்ன?

“தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான், என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்” (மாற் 8:35).

பாரத ஆசீர்வாதத் திட்டம்

முதல் நிலை (2014–2018)

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மூலம் 2014-ல் தொடங்கப்பட்ட பாரத ஆசீர்வாதத் திட்டத்தைப் புரிந்து கொள்ள உதவிடும் கேள்விகள்

1. பாரத ஆசீர்வாதத் திட்டம் என்றால் என்ன?

பாரத ஆசீர்வாதத் திட்டம் இத்தலைமுறையிலேயே தேசத்தை சந்திப்பதற்காக ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தால் தொடங்கப்பட்ட ஒரு செயல் திட்டமாகும்.

2. யார் இதில் இணைந்து செயலாற்ற முடியும்?

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட மற்றும் பரிசுத்த வாழ்வு வாழ விரும்பும் விசுவாசிகள் எல்லோரும் இதில் இணைந்து செயலாற்றலாம். முழு சபையையும் ஒருங்கிணைத்து முழு சுவிசேஷத்தையும் முழு பாரதத்திற்குக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.

3. மிஷனரி நிறுவனங்கள் மற்றும் ஊழியர்கள் அநேக வருடங்களாக பல திட்டங்களையும், நிகழ்ச்சிகளையும் இதுபோன்று ஏற்படுத்தியுள்ளனர். இப்பாரத ஆசீர்வாதத் திட்டமும் இது போன்றதுதானா?

இல்லை. இது சற்று வேறுபட்டது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவையுள்ள தேசங்களுக்கு மிஷனரி யாகச் செல்ல வேண்டும்; அப்படி போகமுடியவில்லை என்றால் இன்னொருவரை அனுப்புங்கள் என முழக்கமிட்டார், ஆஸ்வால்ட் J. ஸ்மித் எனும் மாபெரும் ஊழியர். “போ அல்லது அனுப்பு” என்ற அறைகூவலும் உருவானது. ஆனால் 127 கோடி மக்கள் தொகை உள்ள இத்தேசத்தில் சுவிசேஷப் பணியை முழு நேர மிஷனரிகளால் மட்டும் செய்துவிட முடியாது.“ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் மிஷனரி; கிறிஸ்தவரல்லாத ஒவ்வொருவரும் ஓர் மிஷனரித்தளம்”. வேதத்தை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் செயல் வீரர்களாக மாறும்போது, இந்தியா முழுவதும் சந்திக்கப்படும். இதுதான் பாரத ஆசீர்வாதத் திட்டத்தின் முயற்சி. இதை ஒரு திட்டம் மற்றும் நிகழ்ச்சி என்று சொல்வதைப்பார்க்கிலும் தேவனின் இதயபாரம் என்று சொன்னால் மிகையாகாது.

4. நான் அலுவலக வேலைகளை விட்டு, இதில் இணைந்து செயல்பட வேண்டுமா?

இல்லை. நாங்கள் சொல்வது என்னவென்றால் நம்மால் இயன்றமட்டும் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டுமென்பதே. நாம் பணிபுரியும் இடத்திலோ அல்லது அருகாமையில் உள்ள கிராமங்களிலோ நாம் நற்செய்திப்பணியில் ஈடுபடவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கூடாரத்தொழிலாளியாய் இருந்தாலும் சுவிஷேப்பணிக்கே தன் பேரார்வத்தைக் காட்டினார். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில், பிலிப்பும், ஸ்தேவானும் பந்தி விசாரிப்புகாரர்களாக நியமிக்கப்பட்ட போதிலும், ஊழியம் செய்வதற்கான தாக்கம் அவர்களுக்குள் இருந்தது. எனவே நாம் எந்த பணியில் இருந்தாலும், கிறிஸ்துவுக்காக செயல்படுவது அவசியம். 2 கோடி கிறிஸ்தவர்கள் இந்தியாவில் உள்ளனர். அனைத்து கிறிஸ்தவர்களும் வாரத்திற்கு ஒரு புதிய ஆத்துமாவிற்கு சுவிசேஷம் சொல்வதாக இருந்தால் ஒரு வருடத்தில் இந்தியாவில் சுவிசேஷத்தை அறிவித்து விட முடியும்.

5. நான் ஆலயத்திற்கு வழக்கமாகச் சென்றுவருகிறேன், நான் தசமபாகம் கொடுக்கிறேன், நல்வாழ்வு வாழ்கிறேன். இது போதாதா?

இது போதுமானதாக இருக்காது. இது நாணயத்தின் ஒரு பக்கம் மட்டும். மாபெரும் அப்போஸ்தலர் சொல்கிறார். “சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிடில் எனக்கு ஐயோ”. நமது சகோதரர்களுக்குச் சிறந்த பரிசான இயேசுவைக் கொடுப்போம். “கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பை சுவிசேஷமாய் அறிவியுங்கள்”(சங் 96:2).

6. நான் புதிய விசுவாசி, எனக்கு வேதாகமக் கல்வி (Theological Education) **இல்லை, என்னால் இத்திட்டத்தில் சேர்ந்து செயலாற்ற முடியுமா?**

மெழுகுவர்த்தி ஏற்றியவுடனே வெளிச்சம் வந்துவிடுகின்றது. உங்கள் வாழ்க்கையில் தேவன் செய்ததை உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்குச் சொல்ல வேதாகமக் கல்வி அவசியம் அல்ல. நீங்கள் கைப்பிரதிகளை வழங்குவதன் மூலமாகவோ அல்லது ஊழிய அனுபவத்தைப் பெற்ற தேவ பிள்ளைகளோடு இணைந்தோ அல்லது உங்கள் சபையின் ஊழியங்களில் இணைந்தோ செயல்பட முடியும்.

7. நான் ஒரு பெண், நான் அதிகமாகப் படித்தவள் அல்ல, நான் என் வீட்டில் பேசுவதற்குக் கூட பயப்படுவேன்; நான் என்ன செய்ய முடியும்?

நீங்கள் பாரத ஆசீர்வாத திட்டத்தில் இணைந்து தேவனுக்காய் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். சபையின் சரித்திரத்தில் பெண்கள் ஓர் முக்கிய பாத்திரமாக இருந்து வருகிறார்கள். இந்தியா இன்னும் கிராமங்களில் வாழ்ந்து வருகிறது. நீங்கள் கிராமப்புற இடங்களுக்குக் குழுவாகச் செல்லலாம் அல்லது மருத்துவமனை மற்றும் முதியோர் இல்லங்களுக்கு தேவ வார்த்தையை எடுத்துச் செல்லலாம். சிறுவர் ஊழியத்தை கவனித்துக் கொள்ளலாம். நீங்கள் சிறு வகையிலே ஆண்டவருக்காகச் செய்யத் தொடங்குங்கள், ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார். வார்த்தையினால் மட்டும் அன்பைக் காட்ட முடியாது. அன்னை தெரசாவின் சிரிப்பிலே பல லட்சம் மக்கள் கிறிஸ்துவைக் கண்டனர்.

8. பாரத ஆசீர்வாதத் திட்டம் தோன்றுவதற்கான காரணங்கள் என்ன? இது மனித திட்டமா அல்லது தேவனால் ஏவப்பட்ட ஒன்றா?

1971-ம் ஆண்டில், பொறியியல் மாணவர்களின் சிறு குழுவானது, R. ஸ்டான்லி அவர்களின் தலைமையில் தென் இந்தியாவில் ஜெபிக்கும் போது, ஆண்டவர் அவர்களை சந்தித்து "ஆசீர்வாதமான மழை பெய்யும்" (எசே 34:26) என்று வாக்களித்தார், இதன் விளைவாக ஆசீர்வாத இளைஞர் இயக்கம் தோன்றியது. இந்த இளைஞர்களின் பாரம் இந்தியா முழுவதும் சுவிசேஷம் சென்றடையக் வேண்டுமென்பதே. எனவே, "இந்தியா செயல் திட்டம்" (Project India) 1974-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இச்செயல் திட்டத்தின் நீட்டிக்கப்பட்ட நிகழ்ச்சியே பாரத ஆசீர்வாதத் திட்டமாகும் (Bless Bharat).

9. ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தைப் பற்றி மேலும் சொல்ல முடியுமா?

ஆசீர்வாத இளைஞர் இயக்கம் ஒரு எழுப்புதல் இயக்கமாகும். தன்னார்வ ஊழியர்களால் தொடங்கப்பட்ட இவ்வியக்கம், இன்று சுமார் 500 தன்னார்வ ஊழியர்களையும் 398 முழு நேர மிஷனரி களைக் கொண்டு 15 மாநிலங்களில் பணியாற்றிவருகிறது. நீங்கள் இவ்வியக்கத்தை பற்றி மேலும் தெரிந்து கொள்ள இணையதள முகவரியைப் பார்க்கவும் <www.bymonline.org> அல்லது எங்களுக்கு எழுதுங்கள்.

10. பாரத ஆசீர்வாதத் திட்டம் இன்று அவசரமான ஒன்றா?

மத்தேயு 24:14-ன்படி "ராஜ்யத்தினுடைய இந்தச்சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும்." எனவே நாம் ஊழியத்தில் இணைந்து தேவ ராஜ்ஜியத்தைக் கட்டுவோம்.

11. எனக்கு, ஊழியத்திற்கு தனிப்பட்ட அழைப்பு இல்லை. ஆண்டவரிடமிருந்து தெளிவான அழைப்பு இல்லாமல் முன்வரலாமா?

ஆம், ஆண்டவர் நம்மை அழைத்தால் முழு நேர மிஷனரிகளாக முன்செல்லலாம். ஆனால் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குச் சொல்ல ஆண்டவர் நம்மை ஏற்கனவே அழைத்திருக்கிறார். மத்தேயு 28:19இன் படி எல்லா விசுவாசிகளுக்கும் ஆண்டவரது அழைப்பு உள்ளது. எனவே இப்பொழுது கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமை என்பதில்தான் விஷயம் உள்ளது.

12. பாரத ஆசீர்வாதத் திட்டத்தில் முழு நேர மிஷனெரிகளின் பங்கு என்னவாக இருக்கும்?

முழு நேர மிஷனரிகள் இந்த முதல் ஐந்து ஆண்டுகளில் திட்டமிட்டு இலக்குகளை நியமித்து செயல்பட்டு வருகின்றனர். வட இந்தியாவில் தன்னார்வ ஊழியர்களை எழுப்புவதிலும் முழு மூச்சாய் செயல்படுகின்றனர்.

13. பாரத ஆசீர்வாதத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகள் நடந்தது என்ன?

கடந்த 2015 ஆம் ஆண்டு, டிசம்பர் வரை, 516 ஜெபக் குழுக்களும், 180 தன்னார்வ ஊழியர்களும், 128 புதிய ஆராதனைக் கூடங்களும் எழும்பியுள்ளன.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

1) ஒரு மாவட்டம் - ஒரு மாநிலம் (Adopt - A - State) திட்டத்தின் கீழ் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டமும் ஒரு வட மாநிலத்தை தத்தெடுத்து அதற்காக ஜெபித்துச் செயல்படுதல்.
2) ஊழியர் ஆலோசனைத் திட்டம் (Individual Mentorship Programme) இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மிஷனரிக் குடும்பத்திற்கும் ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டு அவர்களைப் பலப்படுத்துதல்.
3) ESAP - "வீதிக்கொரு ஜெபக்குழு" திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீதியிலும் தேசத்திற்காக ஜெபிக்க ஒரு ஜெபக்குழு அமைத்தல்.

4) EFAM - “குடும்பத்திற்கொரு மிஷனரி” திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் ஒரு மிஷனரியை அனுப்ப உற்சாகப்படுத்தப்படுகின்றனர்.

14. பாரத ஆசீர்வாதத் திட்டத்தில் நான் இணைந்து செயலாற்ற விரும்புகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

(i) நீங்கள் ESAP ஜெபக் கூடுகையை உங்கள் பகுதியில் நடத்தலாம். இரண்டு அல்லது மூன்று விசுவாசிகளைக் கொண்டு தேசத்தின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

(ii) நீங்கள் தனிப்பட்ட விதத்தில் ஆத்தும ஆதாயம், வெளி இடங்களில் சுவிசேஷம் அறிவித்தல் முதலானவைகளை உங்கள் பகுதி விசுவாசிகளுடன் இணைந்து செய்யலாம்.

(iii) இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டின் எந்தெந்த மாவட்டங்கள், வட இந்திய மாநிலங்களைத் தத்தெடுத்துள்ளன என்பதன் விவரங்களை (நீங்கள் தமிழ்நாட்டவராய் இருந்தால்) அறிந்து கொள்ளுங்கள். அம்மாநில மிஷனரிகளுக்காக ஜெபம் செய்யுங்கள், அங்கு சென்று அவர்களை ஊக்குவியுங்கள்.

(iv) நீங்கள் உங்கள் சொந்த மாநிலத்தில் (நீங்கள் தமிழ்நாட்டவராய் இல்லாதிருந்தால்) மிஷனரிப் பணிகளில் இணைந்து செயல்படலாம்.

(v) இத்திட்டத்தை நன்கொடை மூலம் தாங்கலாம்.

15. பாரத ஆசீர்வாதத் திட்டத்தின் விளைவுகள் என்னவாயிருக்கும்?

ஆண்டவரது வாக்குறுதியின்படி, சிறு குழுக்கள், ஜெபக் குழுக்கள், சபைகளில் பெரிய எழுப்புதல் உண்டாகும். எசேக்கியேல் 37-இல் தீர்க்கதரிசி கண்ட தரிசனத்தின்படி எலும்புகள் இணைந்து பெரிய சேனையாய் எழும்பினது போல், தேவ ராஜ்ஜியத்தைக் கட்ட ஒரு சேனை எழும்பும்.

பாரத ஆசீர்வாதத் திட்டத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இத்தலைமுறையினருக்குச் சொல்ல, நாம் ஜெபித்து செயல்படுவோம்.

மேலும் விவரங்களுக்கு:

Cell: +91 9445278410 Landline: +44 2599 2015

Email:blessbharat@gmail.com, www.bymonline.org

BYM apps for Smart Phone users,

Get to read the Blessing Magazine

articles online.

Youth specific pages every month.

Counselling Room and much more..

Available in iTunes Store.

To install on your iPhone/iPad/iPod, visit

https://itunes.apple.com/us/app/blessing-youth-mission/id959627385?mt=8

Can be downloaded from the Google Play Store also-

https://play.google.com/store/apps/details?id=org.bym

ஆசிரியரைப் பற்றி

ஜேசன், தன்னுடைய பொறியியல் பட்டப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கும்போதே, தேவன் தம்மை மிஷனரிப் பணிக்காக அழைக்கிறார் என்பதை உணர்ந்தார். அந்த அழைப்பின் காரணமாக ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் 2002 ஆம் ஆண்டு இணைந்து ஒடிசாவில் 8 ஆண்டுகள் ஆதிவாசி மக்கள் மத்தியிலும் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் 3 ஆண்டுகள் வாலிபர் மத்தியிலும் தேவனுடைய பணியைச் செய்தார்.

தற்போது அவரும் அவரது மனைவி எஸ்தர் பெர்ஸியும் சென்னையில் வாலிபர் மத்தியிலும் எழுப்புதல் ஊழியத்திலும் மற்றும் ஆசீர்வாத பத்திரிக்கை ஊழியத்திலும் உதவி செய்து வருகின்றனர். இவர்களுக்கு எப்ராயீம் என்ற 10 வயது மகனுண்டு.

ஆசிரியரின் பிற நூல்கள்....

வாழ்க்கையின் பாடுகள் ஊடே கடந்து செல்லும் போது உற்சாகப்படுத்தும் நூல்.



வாழ்க்கை என்பது ஒரு பயணம். அதிலே பள்ளங்களுமுண்டு, மேடுகளுமுண்டு, கண்ணீருமுண்டு, களிப்புமுண்டு, பாலைவனமுண்டு, நீரூற்றுகளுமுண்டு. ஆனால் ஏனோ வாழ்க்கை நமக்குக் கற்பிக்கும் பாடங்களைக் கற்கத் தவறுகிறோம். அப்படி நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வெற்றியுடன் முன்னேற இப்புத்தகம் உங்களுக்கு உதவி செய்யும்.

இளம் உள்ளங்கள் வாழ்க்கையில் சரியான தீர்மானம் எடுக்க உதவும் நூல்.

காதலா மோகமா?

பரிசுத்த வாழ்வு சாத்தியம்தானா?

இணையதள அசுத்தத்திலிருந்து விடுதலை!

ஆவிக்குரிய எல்லைகள்!

இன்னும் பல....

கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற இன்றே வாசியுங்கள்...

Blessing

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிக்கை!
உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிக்கை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய
மொழிகளில் வெளிவருகிறது.

ஆண்டு சந்தா ரூ. 100/-
ஆயுள் சந்தா ரூ. 1000/-

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட
நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிக்கையையும்,
புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு
இலவசமாக அனுப்பிவைப்போம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

Blessing Youth Mission
8, Church Colony,
Vellore 632 006,
India
Tel: 0416-2242943, 2248943

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத, ஒரு திருப்பணி

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள், பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின் குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள், மருத்துமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

400க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம், ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒடிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம், பஞ்சாப், தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம், குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் “ஆசீர்வாதம்” எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும் ஒலி–ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்! ஆதரியுங்கள்!

Blessing Youth Mission
8, Church Colony, Vellore 632006, India
Tel: 0416-2242943, 2248943
hq@bymonline.org
www.bymonline.org